223776

# தமிழரசு

டிசம்பர் 2002

JL
V2ilm, N70TA
102.34.11A12
223776

# தமிழரசு

டிசம்பர் 2002






தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
வரலாற்று ஆராய்ச்சி
- 3 - 2003
எழும்பூர், சென்னை-600 008




JL
V2llm N7OTA:
P02.34.1187
223776





மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.11.2002 அன்று சென்னை தாய் சேய் நல மருத்துவமனையில் புற்றுநோய்க்கான உயர் மருத்துவச் சிகிச்சை அளிக்கும் டெலி–கோபால்ட் பிரிவினை தொடங்கி வைத்தார்.



# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2033
கார்த்திகை - மார்கழி
டிசம்பர் 2002
மலர் : 34 இதழ் : 11 & 12
விலை ரூ.10



...ஆணையர்
...ஆவணக் காப்ப...
...வரலாற்று ஆராய்...
3 ... 2003
சென்னை-600 00


**இந்த இதழில் ...**


- "தெற்காசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து" வளாகம் ..... 2
- புற்று நோய்க்கு டெலி–கோபால்ட் உயர் சிகிச்சை ..... 6
- மக்கள் கவிஞர் ..... 9
- சிறப்பு சட்டக் கல்வி மையம் ..... 14
- ஆலய அன்னதானத் திட்டத்திற்கு முதல்வர் நிதியுதவி ..... 17
- தமிழகத்தில் தொழில் தொடங்க வாருங்கள் ..... 18
- அவசர விபத்து நிவாரண மையங்கள் ..... 21
- டைம்ஸ் ஆப் இந்தியா சிறப்பு வெளியீடு ..... 24
- பிலிம் நியூஸ் ஆனந்தன் அரிய படைப்புகள் அரசுடைமை ..... 25
- கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கட்டடத் திறப்பு விழா ..... 26
- அய்யம்பாளையம் வள்ளியப்பனின் அரிய செயல் ..... 29
- பான்யன் நூல் வெளியீடு ..... 31
- டென்னிஸ் வீராங்கனைக்கு நிதியுதவி ..... 32
- மேதைகள் போற்றும் மேதை இராஜாஜி ..... 33
- அறிவு சார்ந்த மதிப்பையும் செல்வத்தையும் உருவாக்கும் மாநிலமாக தமிழகத்தை மாற்றுவோம் ..... 40
- முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு உதவுங்கள் ..... 44
- அரும் பணியாற்றிவரும் அரசு பொது மருத்துவமனை ..... 45
- மருத்துவ உதவி ..... 48
- கின்னஸ் சாதனையில் நீலகிரி மாவட்டம் ..... 49
- உங்கட்டி ஏரியில் சுற்றுலா குழியல் மையம் ..... 51
- அகில இந்திய பன்னாட்டு வர்த்தப் பொருட்காட்சி ..... 53
- மழை நிவாரணப் பணிகள் ..... 55
- கல்வி பயில நிதியுதவி ..... 60
- ஈரோடு பால் பண்ணை ..... 61
- முன்னேற்றப் பாதையில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ..... 63
- குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம் ..... 65
- காமராஜரின் எண்ணங்களுக்கு வடிவம் தரும் அரசு ..... 67
- கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் ..... 70


**முதல் பக்க அட்டையில் :**

கோயம்பேடு பேருந்து வளாகம் திறப்பு விழா

**இரண்டாம் பக்க அட்டையில் :**

அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கு டெலி–கோபால்ட் உயர் சிகிச்சைப் பிரிவு தொடக்கம்.

**கடைசிப் பக்க அட்டையில் :**

மழை வெள்ளப்பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு மக்களின் குறைகளைக் கேட்டார்.



# தெற்காசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து வளாகம்


சென்னை மாநகரம் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறது. சென்னைவாழ் மக்கள் மட்டுமல்லாமல் சென்னையில் வர்த்தகத் தொடர்பு, வேலைவாய்ப்பு என ஏராளமான மக்கள் இங்கு வந்து செல்கின்றனர். அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை அரசு செய்து வருகின்றது.

சென்னையில் வலம்வரும் பேருந்துகளால் சென்னைச் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே இப்போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு சென்னையை அடுத்த கோயம்பேட்டில் ரூ.103 கோடி செலவில் தெற்காசியாவிலேயே மிகப் பெரிய புறநகர் பேருந்து நிலைய வளாகங்கத்தினை அமைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.11.2002 அன்று இப்பேருந்து நிலைய வளாகத்தினைத் திறந்து வைத்தார்.

இந்த பிரமாண்டமான பேருந்து நிலைய வளாகத்தினை திறந்து வைக்க வந்த, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத் துணைத் தலைவர் திருமதி ஜெயந்தி, வீட்டு வசதித் துறை செயலாளர் திரு. லால் ரானா சைலோ மற்றும் போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு. கற்பூரசுந்தரபாண்டியன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு. பி.ஆர். சம்பத் ஆகியோர் அன்புடன் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் 40,720 சதுரமீட்டர் கட்டுமானப் பகுதிகளுடன் 36.57 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மிகப்பெரிய சென்னை புறநகர் பேருந்து நிலையத்தின் பிரதான நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டிருந்த ரிப்பனை கத்தரித்து, முறைப்படி திறந்து வைத்தார். பின்னர் மண்டபத்தின் நடுவே வைக்கப்பட்டிருந்த குத்து விளக்கை ஏற்றி வைத்து, புதிய புறநகர் பேருந்து நிலையத்தின் பெயர் பலகையைத் திறந்து வைத்தார். தொடர்ந்து பேருந்து நிலைய வளாகத்தின் மாதிரி வடிவத்தை பார்வையிட்ட முதலமைச்சர் அவர்கள் புறநகர் பேருந்துகள் நிற்கும் இடத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடையில் காஞ்சிபுரம், வேளாங்கண்ணி மற்றும் நாகூர் ஆகிய இடங்களுக்கு செல்லும் பேருந்தில் பயணம் செய்யும் திருவாளர்கள், எம். சோமசுந்தரம், ரகு மற்றும் ராமன் ஆகிய 3 பயணிகளுக்குப் பயணச் சீட்டுகளை வழங்கி, அதற்கான கட்டணத் தொகையினை அவர்களிடமிருந்து பெற்று, அவற்றை உரிய பேருந்து நடத்துநர்களான, திருவாளர்கள் பாம்பே, குப்புசாமி மற்றும் அன்பு ஆகியோரிடம் வழங்கினார். பின்னர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து சேவை தொடங்கப்படுவதன் அடையாளமாக, முதலமைச்சர் அவர்கள் பச்சைக் கொடி அசைக்க ஆந்திர மாநில போக்குவரத்து கழகத்தின் மூலம் திருப்பதி செல்லும் பேருந்தும், கர்நாடக மாநில போக்குவரத்து கழகத்தின் மூலம் பெங்களூர் செல்லும் பேருந்தும், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் மூலம் திருவனந்தபுரம் செல்லும் பேருந்தும், தமிழ்நாட்டின் பிற அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் திருச்சி, சேலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகளும் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றன.




சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மிகப் பெரிய பேருந்து நிலையம் அமைக்க, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1994–95ஆம் ஆண்டில் முதன் முதலாக உத்தரவிட்டதன் அடிப்படையில், அப்போது 27 ஏக்கர் பரப்பளவில், ரூ.16 கோடி மதிப்பில் புறநகர் பேருந்து நிலையம் நிறுவப்பட, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆணை வழங்கியது.

தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு சென்னை புறநகர் பேருந்து நிலையம் தற்போது 36.5 ஏக்கர் பரப்பளவில் ஹட்கோ (HUDCO) மற்றும் டுஃபிட்கோ (TUFIDCO) ஆகியவற்றின் நிதி உதவியுடன் ரூபாய் 103 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாகியுள்ளது. இந்த மிகப்பெரிய பேருந்து நிலையத்தில், 30 இடங்களில் புறநகர் பேருந்துகள் வந்து நிற்கவும், 150 இடங்களில் புறநகர் பேருந்துகள் புறப்படுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 60 இடங்களில் பிற பேருந்துகள் நிற்கவும், 30 இடங்களில் மாநகரப் பேருந்துகள் புறப்படுவதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பேருந்து நிலைய வளாகத்தில் முன்பதிவு அறைகள், பாதுகாப்பு அறைகள், பணியாளர் ஓய்வு அறைகள், நேரப் பாதுகாப்பாளர் அறைகள், இயக்க மேலாளர் அலுவலக அறை, எரிபொருள் நிரப்புமிடம், பராமரிப்பு மற்றும் பொருள் வைப்பறை ஆகியவை தனித்தனியாக கட்டப்பட்டுள்ளன.

மேலும் பயணிகள் வசதிக்காக பயணிகள் காத்திருக்கும் கூடம், நடைமேடைகள், பயணிகள் உட்கார வசதிகள், பேருந்து குறித்து அறிவிப்பு பலகைகள், பொதுத் தகவல் மையம், தொலைக்காட்சி வசதிகள், குடிநீர் மற்றும் தொலைபேசி வசதிகள், உணவகங்கள், கடைகள், பயண



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223776
சென்னை-600 008
நூலகம்
JL
V211m

முகவர் அலுவலகங்கள், அலுவலகம் மற்றும் சிறப்பு அங்காடி, கழிப்பறை மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பேருந்து நிலையத்தில் மழை நீர் சேகரிப்பு வசதியும் செய்யப்பட்டுள்ளது.




இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், வணிகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் பங்கேற்றனர்.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

திட்டப் பரப்பளவு - 36.57 ஏக்கர். திட்ட மதிப்பீடு ரூ.103 கோடிகள். திட்டத்திற்கு நிதி உதவி அளித்தவர்கள் - ஹட்கோ மற்றும் டுஃபிட்கோ. ஆலோசனை வழங்கியவர்கள் - திருவாளர்கள் ரைட்ஸ், புதுதில்லி. ஒப்பந்ததாரர் பெயர் - திருவாளர்கள் ஜே.எம்.சி. பிராஜக்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், அஹமதாபாத்.

**பேருந்துகள் இயக்குவதற்கான வசதிகள்:**

முன்பதிவு அறைகள் - 3, பாதுகாப்பு அறைகள் - 3, பணியாளர் ஓய்வு அறைகள் - 2, நேர பாதுகாப்பாளர் அறைகள் - 3, இயக்கக மேலாளர் அலுவலக அறை - 1, மாநகர் போக்குவரத்துக் கழகம் - 1, எரிபொருள் நிரப்புமிடம் - 1, பராமரிப்பு மற்றும் பொருள் வைப்பறை - 1.

**பயணிகள் வசதிகள்:**

பயணிகள் காத்திருக்கும் கூடம் - 1, நடைமேடைகள் - 3, உட்காரும் வசதிகள் - 1,536, பேருந்து நிறுத்துமிடம்/சேருமிடம் அறிவிப்பு பலகைகள் - 150, பொது தகவல் மையம் - 1, தொலைகாட்சி பெட்டிகள் (உத்தேசமாக) - 60, குடிநீர்க் குழாய்கள் - 15, தொலைபேசிகள் (உத்தேசமாக) - 60, உணவகங்கள் - 3 பெரியது 3 சிறியது, கடைகள் - 31, பயண முகவர் அலுவலகங்கள் - 10, அலுவலகம் மற்றும் சிறப்பு அங்காடி - 1, கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் - 60 மற்றும் 53, மழை நீர் சேமிப்பு வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

**கூடுதல் தகவல்:**

திட்டத்தின் மொத்தக் கட்டுமானப் பகுதி - 40,720 ச.மீ., சென்னையிலிருந்து புறப்படும் புறநகர் பேருந்து சேவை (Trips) - 2,000 ஒரு நாளைக்கு, ஆட்டோ/டாக்சி நிறுத்துமிடம் - 1,000 ச.மீ., கார் நிறுத்துமிடம் - 1,500 ச.மீ., 5. இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் - 1,600 ச.மீ.

**பேருந்து நிறுத்த வசதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பேருந்து வந்து நிற்குமிடங்கள் | 30 |
| 2. | பேருந்து புறப்படும் இடங்கள் | 150 |
| 3. | பிற பேருந்துகள் நிற்குமிடம் | 60 |
| 4. | பெருநகர் பேருந்து நிற்குமிடம் | 30 |
| | | 270 |




**பேருந்து இயக்க விவரம்**

சென்னை கோயம்பேட்டில் அமைந்துள்ள புறநகர் பேருந்து நிலைய வளாகத்திலிருந்து புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் 18.11.2002 பிற்பகல் முதல் இயக்கப்பட்டது.



**புறநகர் மற்றும் விரைவுப் பேருந்துகள் இயக்க விவரம்**

முதல் நடைமேடையில் வருகைப் பேருந்துகள் நிறுத்தப்படும். இரண்டாவது நடைமேடையில் அரசு விரைவுப் பேருந்துகளும், மூன்றாவது நடைமேடையில் அரசு விரைவுப் பேருந்துகள் அண்டை மாநில ஆந்திரா மற்றும் கர்நாடகா பேருந்துகளும் மற்றும் மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திருச்சி போக்குவரத்துக் கழக பேருந்துகளும் இயக்கப்படும். நான்காவது நடைமேடையில் கும்பகோணம், திண்டுக்கல், விருதுநகர், காரைக்குடி, ஈரோடு, சேலம், தருமபுரி, வேலூர், காஞ்சிபுரம், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இயக்கப்படும். ஐந்தாவது நடைமேடையிலிருந்து காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படும். ஆறாவது நடைமேடையிலிருந்து விழுப்புரம் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், மற்றும் பாண்டி, திண்டிவனம், ஆற்காடு, வந்தவாசி செல்லும் தனியார் பேருந்துகளும் இயக்கப்படும்.



புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து விழுப்புரம் மார்க்கமாகச் செல்லும் அனைத்து விரைவு மற்றும் புறநகர் பேருந்துகளும் அசோக்பில்லர், கத்திப்பாரா சந்திப்பு, தாம்பரம் வழியாக செல்லும் போதும், சென்னைக்கு வரும்போதும் இயக்கப்படும்.

கிழக்குக் கடற்கரைச்சாலை வழியாகச் செல்லும் பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து அசோக்பில்லர், கத்திப்பாரா சந்திப்பு, ஹால்டா சந்திப்பு, ராஜ்பவன், அடையாறு வழியாக இயக்கப்படும்.

வேலூர் வழியாக கிருஷ்ணகிரி, பெங்களூர் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் அசோக்பில்லர், கத்திப்பாரா சந்திப்பு பூந்தமல்லி வழியாக இயக்கப்படும். பூந்தமல்லி வழியாக திருவள்ளூர், திருத்தணி, காஞ்சிபுரம், திருப்பதி, செல்லும் பேருந்துகள் அசோக்பில்லர், கத்திப்பாரா சந்திப்பு போரூர் வழியாக இயக்கப்படும்.

சித்தூர் வழியாக பெங்களூர் செல்லும் பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து கோயம்பேடு வணிக வளாகம், ஈ.வெ.ரா சாலை, மதுரவாயல், பூந்தமல்லி வழியாக இயக்கப்படும்.

நெல்லூர், காளஹஸ்தி, திருப்பதி, நாயுடுபேட்டை செல்லும் பேருந்துகள் அனைத்தும் உள்வட்டசாலை, ஜி.என்.டி. சாலை வழியாக இயக்கப்படும்.

**மாநகரப் பேருந்துகள் இயக்க விவரம்**


புறநகர்ப் பேருந்து நிலையத்திலிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகம் முதல் கட்டமாக 78 பேருந்துகளை நகரின் பல்வேறு பகுதிகளுக்கு இயக்குகிறது. பயணிகளின் தேவைக்கு ஏற்ப மேலும் பேருந்துகளைக் கூடுதலாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பேருந்துகள் அல்லாமல் புறநகர்ப் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள கோயம்பேடு வணிக வளாகத்திற்கு நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முழு நேரப் பேருந்துகளாக 53 பேருந்துகளும், வணிக வளாகத்தின் வழியாக 29 பேருந்துகளும் வணிகவளாகத்திற்கு குறிப்பிட்ட நடைகள் மட்டும் இயங்குவதாக 90 பேருந்துகளும் இரவு நேரத்தில் 15 பேருந்துகளும் ஆக 187 பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேற்கண்ட புறநகர்ப் பேருந்து நிலையத்தின் வாசலில் உள்ள உள்வட்ட சாலை வழியாக 165 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கக்கூடிய 430 பேருந்துகளும் புறநகர்ப் பயணிகளுக்கு சேவை செய்யும் விதத்தில் இயக்கப்படுகின்றன.

தற்போது பாரிமுனையிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு இயங்கிக்கொண்டிருக்கும் மாநகரப் பேருந்துகள் எவ்வித மாற்றமும் இல்லாமல் இயங்கும். மேலும் ஆலந்தூரிலிருந்து பாரிமுனைக்கு அண்ணா சாலை வழியாகக் கூடுதலாக 15 பேருந்துகளும் இயக்கப்படும். ✧

# அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கு டெலி-கோபால்ட் உயர் சிகிச்சைப் பிரிவு



தமிழகத்திலுள்ள நலிந்த ஏழை மக்களுக்கு அனைத்து வகையிலும் முழுமையான மருத்துவ சிகிச்சையை வழங்க தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் முனைந்து மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அவதியுறும் நோயாளிகளுக்கு ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை மேற்கொண்டால் புற்றுநோயை முழுமையாக குணப்படுத்திவிட முடியும். இதன் அடிப்படையில் இதற்கான உயர் மருத்துவச் சிகிச்சையை அளிப்பதற்காக டெலி–கோபால்ட் சிகிச்சைப் பிரிவுகளை தமிழகத்தில் உள்ள எல்லா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் படிப்படியாக வழங்கிட தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக, சென்னை–அரசு மகப்பேறு நோய் இயல் நிலையம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனை (Institute of Obstetrics & Gynaecology and Government Hospital for Women & Children, Chennai) சென்னை – இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, மதுரை – இராஜாஜி அரசு மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் டெலி கோபால்ட் சிகிச்சைப் பிரிவுகள் அமைத்திட மொத்தம் ரூ.4 கோடியே 50 இலட்சம் செலவில் கருவிகள் வாங்கப்பட்டு, ரூ.12 இலட்சம் செலவில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் பொருத்தப்பட்டுள்ளன.



இக்கருவிகளைக் கொண்டு ஒரு நாளைக்கு 150 முதல் 200க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், புற்றுநோய்க்கான உயர் மருத்துவச் சிகிச்சை அளிக்கும் இந்த மூன்று டெலி–கோபால்ட் சிகிச்சைப் பிரிவுகளை, 8.11.2002 அன்று சென்னை அரசு மகப்பேறு நோய்இயல் நிலையம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனையில் அதற்குரிய கல்வெட்டுகளைத் திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.


அரசு மகப்பேறு நோய் இயல் நிலையத்தின் இயக்குநர், டாக்டர் சுந்தரவள்ளி, தாய் சேய் நல மருத்துவத்துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர் என்.பி.சந்திரா மற்றும் டாக்டர் கலைவாணன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இந்தப் புதிய கருவிகளின் இயக்கத்தைப் பற்றி விளக்கிக் கூறினர். நோயாளி படுத்த நிலையிலேயே இருக்க, எந்த கோணத்திலும் இந்த கருவி இயங்கி உடலின் எந்த ஒரு பாகத்திற்கும் கதிர்வீச்சு சிகிச்சை அளிக்க முடியும் என்று, மருத்துவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறினர். மேலும், தேவையற்ற அதிகமான அளவு கதிர் வீச்சைத் தவிர்க்கவும், ஆரோக்கியமான செல்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் தடுக்கவும், புற்றுநோய் பாதிப்புக்குள்ளான செல்களுக்கு மட்டும் கதிர்வீச்சு செல்லும் வகையில் அளவும், நேரமும் நிர்ணயிக்க கணிப்பொறியின் மூலம் இயங்கும் கதிர் வீச்சு திட்ட அமைப்பும் இதனுடன் நிறுவப்பட்டுள்ளது என்றும், இதனால் நோயாளிகளுக்கு பக்க விளைவு இன்றி சிகிச்சை அளிக்க முடியும் என்றும், மருத்துவர்கள் விளக்கிக் கூறினர்.

கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த செல்வராணி என்னும் பெண்மணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இப்புதிய கருவி மூலம் புற்று நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிகிச்சை பெற்று வரும் பெண்மணியிடம் அவரது உடல் நலம் குறித்து பரிவுடன் விசாரித்து, 'எதற்கும் பயப்பட வேண்டாம், நன்றாகக் குணம் அடைந்து விடும். நீங்கள் முழுமையாக குணம் அடைய என்னுடைய வாழ்த்துக்கள்' என்று தெரிவித்துக் கொண்டார்கள்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், திரு. செ. செம்மலை அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும், விழாவில் கலந்து கொண்டார்கள்.

## கோபால்ட் கதிர் சிகிச்சையும் கருவியும்

ஆயிரக்கணக்கான புற்றுநோயாளிகள் சிகிச்சைக்காக செல்கின்றனர். இந்தியாவில்



மகளிர் கர்ப்ப புற்றுநோய் என்பது மிகவும் அதிகமாக தாக்கும் நோயாக உள்ளது. மார்பகம், வயிறு, இரைப்பை, குடல், குரல்வளை போன்ற பாகங்களும் புற்றுநோய் தாக்கும் ஏனைய பாகங்களாகும். இடைவெளியற்ற கர்ப்பம், அடிக்கடி கருச்சிதைவு செய்தல், பலரோடு உடலுறவு, உறுப்புகளை சுகாதாரமின்றி வைத்திருத்தல், மரபணு, சில வைரஸ் நுண்ணுயிர்கள் போன்றவை புற்றுநோய்க்கான முக்கிய காரணங்களாகும். புகையிலை மற்றும் பீடி, சிகரெட், பான்மசாலா, மூக்குப்பொடி போன்ற புகையிலை சார்ந்த பொருள்களை பயன்படுத்துவதால் வாய், தொண்டை, உணவுக்குழல், நுரையீரல் போன்ற உறுப்புகளில் புற்றுநோய் உண்டாகிறது.

ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை மேற்கொண்டால் புற்றுநோயை முழுமையாக குணப்படுத்த இயலும். பெரும்பாலான நோயாளிகள் நோய் முற்றிய நிலையில் தான் மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள் என்றாலும் கதிரியக்க சிகிச்சை மூலம் பெரும்பான்மை யானவர்களுக்கு முழுமையான குணமும், எஞ்சியவர் கட்குச் சிறந்த முறையிலான சிகிச்சையும் அளிக்க இயலும். இந்த அடிப்படையில் தமிழக அரசு எல்லா புற்றுநோயாளிகட்கும் சிறப்பான மருத்துவச் சிகிச்சையை அளிக்க உறுதி பூண்டு அதற்காக இந்த டெலிகோபால்ட் சிகிச்சைக் கருவிகளை மருத்துவக் கல்லூரி சார்ந்த மருத்துவமனைகட்கு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு நோயாளிக்கும் 45 நாட்கள் தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டும். மருத்துவமனையில் சேர்தல், பிற சோதனைகள், கதிரியக்க சிகிச்சை மற்றும் குணப்படுத்திய பின் வீடு திரும்புதல் போன்ற எல்லாவற்றையும் சேர்த்து மொத்தம் 65 நாட்கள் ஒவ்வொரு நோயாளிக்கும் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது கதிரியக்க சிகிச்சை மட்டும் நோயின் நிலையைப் பொறுத்து 20 முதல் 30 நாட்களுக்குத் தர வேண்டியிருக்கும். மற்ற சோதனைகள், சேர்ப்புக் கட்டணம், மருந்துகள் போன்றவைகளின்றி கதிரியக்க சிகிச்சைக்கு மட்டும் குறைந்தபட்சமாக ரூ.15,000 முதல் ரூ.1,00,000 வரை தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் வசூலிக்கின்றனர். அத்தகைய வசதி அரசால் நலிந்த ஏழை மக்கட்கு முழுவதும் இலவசமாக தரப்படுகிறது.

தெட்ரான் போனிக்ஸ் என்ற இந்த கருவி கனடாவைச் சேர்ந்த எம்.டி.எஸ். நார்டியான் என்ற சிறந்த நிறுவனத்தால் எல்லா வகையான புற்றுநோய் சிகிச்சைகளுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகட்கு செயல்படக்கூடிய அளவில் கோபால்ட் என்ற கதிர்வீச்சுப் பொருள் கொண்டது இந்த கருவி. இப்பொருளின் செறிவான கதிர்வீச்சினை ஒருமுகப்படுத்தி குறிப்பிட்ட கால அளவிற்கு புற்றுநோய் பாதிக்கப்பட்ட உடல் செல்களில் பாய்ச்சுவதன் மூலம் புற்றுநோய் செல்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டு இந்நோயினால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும் வலியிலிருந்தும் நோயாளிகள் மீட்கப்பட்டு குணப்படுத்தப்படுகிறார்கள்.

இந்தக் கதிர்வீச்சுப் பொருளிலிருந்து தொடர்ந்து வெளிப்படும் காமா கதிர் நோயாளிகளின் உடலில் பாய்ச்சப்படும்போது ஏனைய ஆரோக்கியமான செல்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாத வகையில் புற்றுநோய் செல்கள் மட்டுமே அழிக்கப்படுகிறது. ஒவ்வொரு நோயாளிக்கும் இந்தக் கதிர் செலுத்தப்படும் நேரம் ஒரு மணித்துளி அளவே ஆகும். இக்கருவியைக் கொண்டு ஒரு நாளைக்கு 150 முதல் 200க்கும் மேற்பட்ட நோயாளிகட்கு சிகிச்சை அளிக்க முடியும். சரியான விகிதத்தில் தேவையான அளவிற்கு மட்டுமே கதிர் வீச்சை செலுத்தி, புற்றுநோய் செல்கள் மட்டும் அழிக்கப்பட்டு ஏனைய செல்களை பாதிக்கும் தன்மையில்லாத சிறந்த முறையிலான ஒரு சிகிச்சை இது.

இந்தக் கருவியினால், சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத, கலப்படமற்ற கதிர்வீச்சுப் பொருள் ஆளரவமற்ற சூழ்நிலையில் இயக்கப்படுவதால் தூசு மற்றும் அரிப்பு இல்லாத நிக்கல் முலாம் பூசப்பட்ட கோபால்ட் 60 துகள்கள் தான் வாழ்நாள் முழுவதும் ஒருமித்த கதிர்வீச்சை அளிக்கிறது. குறைந்த கரியுள்ள எஃகு உலோகத்தினால் செய்யப்பட்ட இரட்டை பெட்டகத்தினுள் வைக்கப்பட்டுள்ளதால் கதிர்வீச்சுப் பொருள் கெட்டுப் போகாத வண்ணம் பாதுகாக்கப்படுகிறது. இந்தக் கருவி 360 சுழலும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதால் சிகிச்சை பெறும்போது நோயாளிக்கு பல நிலைகளுக்குத் திரும்பும் சிரமமும் வலியும் இல்லாமல் சிகிச்சை அளிக்க முடியும்.


தேவையற்ற அளவுக்கு அதிகமான கதிர் வீச்சைத் தவிர்க்கவும் ஆரோக்கியமான செல்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் தடுக்கவும் புற்றுநோய் பாதிப்புக்குள்ளான செல்களுக்கு மட்டும் கதிர்வீச்சு செல்லும் வகையில் அளவும், நேரமும் நிர்ணயிக்க கணிப்பொறியின் மூலம் இயங்கும் கதிர்வீச்சு திட்டமும், அமைப்பும் இந்த கருவியில் இணைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு அம்சங்களைக் கொண்ட டெலிகோபால்ட் சிகிச்சைக் கருவி கதிர் வீச்சு திட்டமிடும் முறை கொண்ட அமைப்பு நிறுவப்பட்டதின் மூலம் இந்த மருத்துவமனைகள் ஒருமித்த பயனுள்ள சிகிச்சையை நலிந்த ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்க இயலும்.

• • •







# மக்கள் கவிஞர்

– பேரறிஞர் **அண்ணா**

'மக்கள் கவிஞர்' – மனங்கவரும் மகத்தான இந்தப்
பட்டம் சாதாரணக் கவிஞனுக்கு வழங்கப்படும்
புகழ்மாலை இல்லை.

பன்னூறு ஆண்டுகளாய்ப் பாரிலே கவிஞர்கள் உலவி
வந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவி
வந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த
வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, விளக்கப்
பாடல்கள் தீட்டுவது – படாடோப அரண்மனை
வாழ்விற்குத் தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப்
பூச்சுப் பூசுவது – ஆகியவை தாம்.

மக்களுக்காக – மக்களைப் பற்றி –
மக்களிடையே பழகு மொழியில்
கவிதை இயற்றிய கவிஞன்
மிகமிக அருமை!



கவிஞனின் குரல், கோவில் காண்டாமணி
செய்ய வேண்டிய வேலையைச் செய்வதாகவோ,
அரண்மனை முரசங்கள் அறைந்து அறிவிக்கும்
ஒலியைப் பரப்புவதாகவோதான் இருந்தது. மக்கள்
மனத்துள் உறையும் எண்ணத் துடிப்புகளை –
சிந்தனையில் குமிழியிடும் சீரிய கருத்துகளை –
எழுத்து வடிவிலோ, ஒலி உருவிலோ எடுத்து
இயம்புவதாய் இல்லை.

தப்பித் தவறி, கவிஞன் மக்களோடு பேசத்
தொடங்கினால், அந்தப் பேச்சு – இந்த உலக மக்கள்
எவ்வளவு பேராசை பிடித்தவர்களாக, இகலோக
இச்சை நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள்
என்பதைச் சுட்டிக் காட்ட – உலகம் எவ்வளவு
நிலையற்ற தன்மையது, எத்தகைய மாயையின்
வடிவமுடையது என்பதை விளக்குவதற்காக –
போதனைகள் உதிர்ப்பதற்காகத்தான் இருக்கும்.

வேதனை விளைவிக்கும் இந்த விதிக்கு விலக்காக விளங்கியவர்கள் சங்க காலப் புலவர்கள். ஆனால் அவர்களைப் பற்றி இன்றைய நம்மவர்கள் அறிந்திருப்பது மிகவும் கொஞ்சமே!

ஒழுக்கங்களின் உறைவிடமாய் விளங்கிய அப்புலவர்கள், பாடல்களைப் பாடிப் பணம் பண்ணும் வியாபாரிகளாகவோ, இன்பரசப் பாடல்களை ஏலம் கூறுபவர்களாகவோ வாழவில்லை.

பிற்காலத்தில் வந்தவர்களோ வேறு வகையினராய் மாறினார்கள். 'மக்கள் கவிஞராக மலர்வது கடினம்; அத்துடன் அது இலாபகரமான தொழிலும் இல்லை' என்று எண்ணினார்கள். அதனால்தான் சங்க காலத்திற்குப் பின்னர் செல்வாக்கு மிக்க மக்கள் கவிஞராக யாரையும் காண முடியவில்லை.

## பாரதியாரின் இளமை நாட்களில்

மக்கள் கவிஞர் ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில் தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி.சுப்பிரமணிய பாரதி.

உயர்தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞன் ஆவது மிகவும் எளிது. நீல வான் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான நிலாவைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத் திரை கிழித்துக் கண்சிமிட்டும் விண்மீன்கள் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும். எழில் சிந்தும் மலர்களின் இனிய மணம் பற்றி ஒன்றிரண்டு பாக்கள் இசைத்தால் போதும்; ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாள நடனம் – காதல் வெறி மூண்டெழக் கிளம்பும் கனிச் சுவைக் குளறல் – வீரர் தம் தீரம் – இவை பற்றிச் சிற்சில சொற்சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையில் 'சரியாசனம்' பெற்றுப் புகழ் விருதும் பூணலாம்!

ஆனால் மக்களின் கவிஞனோ, தன் கடமையைச் சரியாய் ஆற்ற – மற்றவரால் வீசி எறியப்படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்க வேண்டும்; ஆபத்தான இடுக்கண்களில் எல்லாம் முக்குளித்து எழுத வேண்டும். பாராட்டுதல், ஆதரவு, செல்வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது.

தொடக்கத்திலேயே சுப்பிரமணிய பாரதியாரின் புலமைக் கூர்மை பற்றியும், திறமை குறித்தும் அவருடைய நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களுடைய கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது எத்தனையோ ஆண்டுகளுக்கு அப்புறம்தான். அப்பொழுதுகூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக் கூடிய தனிச் சிறப்பான தன்மை பெற்ற கவிதைகள் பொது மக்களுக்கு வழங்கப்படவில்லை.

## உழவனைப் பாடிய பாரதி

நம் நாட்டில் கவிஞர்களுக்குக் குறைச்சல் இல்லை. ஆனால் 'நான் மக்களைப் பற்றிப் பாடுகிறேன்' என்று ஒருவன் சொன்னால், மக்களோ ஐயப்பாடு கொண்ட கண்களுடன், வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு ஒப்புதல் கிடைக்காது. எத்துணைக்கெத் துணை அவனுடைய கவிதைகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியிருக்கும்.

பாரதியார் – ஏரோட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்களுக்கு – விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

## உலகப் புரட்சி ஓவியங்கள்

இத்தாலிய விடுதலை உதயத்தை – மாஜினி என்னும் மாவீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை – உன்னதச் சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார்.

ஜார் மன்னனின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி, வீறுடன் எழுந்து நின்ற இரஷ்யாவைப் பற்றிய புதுமை ஓவியம் தீட்டினார்.

விடுதலை பெற்ற பெல்ஜியம், பிரான்சு, சிவப்பு ரஷ்யா குறித்த சொல்லோவியங்கள் எல்லாம் அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தவை.

பிஜித் தீவு வாழ்வு பற்றிய பேனா சித்திரத்தை மக்கள் முன் வைத்து, "பாருங்கள் சகோதரர்களே, உம்முடன் பிறந்த சகோதரர் நிலையை" என்று காட்டினார் – ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே! மக்கள் கவிஞனுக்குரிய பொலிவு அதுதான்!

தன் நாட்டு மக்களின் முட்டாள்தனத்தையும், குற்றம் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டான் மக்கள் கவிஞன். 'சிந்தையிலும், செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள், அதே வேளையில் உலகின் ஏனைய நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல் புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது?' என எடுத்துக் காட்ட அஞ்ச மாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு, தொடை நடுங்கவில்லை பாரதி! அவர்களுடைய தவறுகளையும் தயங்காமல் மக்கள்முன் வைத்தார்; வஞ்சகத்தையும், துரோகத்தையும், அவற்றின் உண்மை வடிவத்திலே கொணர்ந்து நிறுத்தினார்; ஒப்பற்ற தீரம் – அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

பாரதியை, 'தேசியக் கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம்! இப்படி சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் இன்னொரு தன்மையை – அஃதாவது பாரதி, 'மக்கள் கவிஞர்' என்னும் உண்மையை – மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

## பணக்காரக் கொடுமையைச் சாடியவர்

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, பணக்காரர்களின் கொடுமையை அவர் பலமாகச் சாடுகிறார்:

*'தனி ஒருவனுக்கு உணவு இலையெனில் – இந்த சகத்தினை அழித்திடுவோம்'*

– என முழங்குகிறார்.

"வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்று, மக்கள் வாழ வேண்டும். 'வணிகம் வளமுடன் நடைபெற வேண்டும். இயந்திரத் தொழில்கள் பெருகிட வேண்டும். புதுமைக் காலத்தின் நலன்கள் எல்லாம் நாட்டிலே பொங்கிக் குவிய வேண்டும்!" – என்றெல்லாம் அவர் விரும்புகிறார்.

*மக்களுக்குப் பணி புரிவதே–உடன் பிறப்பான உயிர்களுக்கு உழைத்தலே – அவரது மதம்*

எத்தகைய அபாயச் சூழலிலும், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக நெஞ்சம் தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

## இருவகை ஊழிகள் மோதிய காலம்

இரு ஊழிகள் (யுகங்கள்) மோதும் எல்லை – பாரதி தோன்றிய காலம். அவர் பிறந்த எட்டையபுரம் ஊரில் செல்வம் புரளும் சிற்றரசர் ஆட்சி! குடிசைகள் புடை சூழ ஊர் மையத்திலே நிமிர்ந்து நின்றது அரண்மனை மாளிகை! பழைய சாதிப் பாகுபாடுகளின் ஆதிக்கம் அப்போது குன்றவில்லை. அவரும் சாதியில் பிறப்பால் உயர்குலத்தவர். செல்வச் செருக்கிற்கும் வைதீகச் சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்ட முனைந்த சமயம் அது. புரட்சி எண்ணங்கள் பூக்கத் தொடங்கின. இயந்திர உலகால் எழும்பிய புதிய அமைப்பு முறை, பழமையான முறைகளை ஊடுருவிக் கொண்டு பாய்ந்து நுழைவதை, வியப்பும் திகைப்பும் மின்னும் விழிகளுடன் சமுதாயம் பார்த்துக் கொண்டிருந்தது. புது ஊழியின் கண்களிலே பழைமைக்கு அறைகூவல் விடுக்கும் மிடுக்கு மிளிர்ந்தது.

அந்த வேளையில்தான் பாரதி தோன்றினார். பழைய ஊழிக்கும் புதிய ஊழிக்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ளலாம் என்று அவர் கருதியிருக்கக் கூடும்! பழைய சமுதாய அமைப்பு முறையிலோ அவரது இடம் பாதுகாப்பு நிறைந்தது; வசதிகள் மலிந்தது.



**பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.**

**அவரது சிந்தனைப் படை வலிமையை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைக் கொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.**

### முரண்பாடுகள் செறிந்த நாடு

பாரதி பிறந்த இந்த நாடு – முரண்பாடுகள் செறிந்த களம், அகந்தையும், அடக்கமும், – கொடூரமும், அன்பும் – நாட்டிலே ஒருங்கே குடிகொண்டு இருந்தன. செயல் திறம் ததும்பிக் கொண்டு இருந்தது; அதே வேளையில், மக்களை மனம் குலையச் செய்து, செயல் அற்றவர்கள் ஆக்கும் அபத்தக் கற்பனைகளும் அளவு மீறி உலவின; பகட்டான கற்பனைகள் – பல்லாயிரக்கணக்கான ஊமை மக்கள் – அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை – அச்சமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை – பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி – அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கு இணங்க, வரலாறு ஆமை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருந்தது. வரலாற்றுப் பல்லக்கை விரைவான ஓட்டத்தில் செலுத்திட பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டியிருந்தது. பாரதியின் சிறப்பு – அவர் அத்தகைய தடிபோட்டு எழுப்பும் பணியில் ஈடுபட்டதில்தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி, மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

### சீர்திருத்த வானின் விடிவெள்ளி

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அதுமட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்து விடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள், தங்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து, உண்மையான விடுதலை வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் அவர்கள் உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என்று அவாவினார். புதிய விழிப்பு பெற்று, புதுமை ஆண்களாகவும், பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார்.

மக்களைப் பீதிப் போர்வை, முக்காடாகக் கவிழ்ந்து மறைத்திருப்பது அவரது பார்வையில் பட்டது. அச்சம் அணி செய்யும் முகத்தினராகக் கண்டார் மக்களை. தொட்டதற்கெல்லாம் – எடுத்ததற்கெல்லாம் – நாட்டு மக்கள் அஞ்சிச் செத்தனர். அந்நியனையும் அவனது துப்பாக்கித் தோட்டாக்களையும் கண்டு மட்டும் அஞ்சி ஒடுங்கி நடக்கவில்லை அவர்கள்; உடன் உள்ள மனிதர் சிலர் முணுமுணுக்கும் மந்திரங்கள், சுலோகங்கள் முன்பும் பணிந்து மரியாதை செய்து வாழ்ந்தார்கள்; பிசாசுகள், பூதங்கள் என்று எவையெவையோ அவர்களை எவ்வளவோ குலை நடுங்கச் செய்தன!

'இத்தகைய மனிதர்கள், விடுதலைக் கொடியை உயர்த்தும் வீர மக்களாக விளங்க முடியாது. இத்தகையோர் வாழும் நாடு தலைநிமிர்ந்து, உலகத்தின் ஏனைய நாடுகளுக்குச் சரிசமமாகப் பார்வை எறிய முடியாது; அந்நிய ஆதிக்கத்தை அகற்றியபிறகும் கூட இது நிறைவேறக்கூடியது இல்லை' – என்பதை உணர்ந்தார்.

அதனால், நாட்டு மக்கள், முதலில் தங்கள் அச்சத்தை அடித்துத் துரத்த வேண்டும் என்று அவாவினார். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினார். மக்கள் மனத்திலே நம்பிக்கையையும் துணிச்சலையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் ஆற்றலைப் புலப்படுத்தினார். அந்த மாப்புகழ் வலிமை எவ்வாறு வீணாகிறது – மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனப்பான்மை, சாதி வெறி ஆகியவற்றின் காரணமாக எவ்வளவு தீமை விளைகிறது – என்பதை விளக்கினார்.

### மக்கள் கவிஞரின் மாபெரும் வேலைகள்

சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் நடமாடும் தீமைகளை வேரோடு கிள்ளி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட 'மக்கள் கவிஞரை'த் தவிர, யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.



பாரதியாருக்குத் தெரியும் – மக்கள் சக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம், இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே, அத்தகைய விடுதலைக்காகப் போராடும்படி பொதுமக்களை அவர் தூண்டினார்.

மக்கள் கவிஞனை எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்கள் எண்ணற்றவை; மிகக் கடினமானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படி செய்வது – புதுப்பாதையிலே அவர்கள் நடைபோடத் தூண்டுவது – புதிய நோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வது – எல்லாம் மக்கள் கவிஞனின் வேலைகள்!

சோதிடனது பிணைப்பிலிருந்து விடுவித்து நாட்டு மக்களை வானியல் வல்லுநர் பக்கம் திருப்புவது – இரசவாதியை அவர்கள் மத்தியிலிருந்து துரத்திவிட்டு, இரசாயனவாதியைக் கொணர்ந்து நிறுத்துவது – எல்லாம் அவன் வேலைகள்!

செப்பிடு வித்தைகள், மந்திர தந்திரங்கள் மூலம் நோய்களை ஓட்டுபவனை ஓட்டிவிட்டு, மருந்துகள் மூலம் குணப்படுத்தும் மருத்துவனுக்கு வழி வகுத்துக்கொடுக்க வேண்டியவனும் மக்கள் கவிஞனே!

### மக்கள் கவிஞருக்கு நம் மரியாதை

மூட நம்பிக்கைகள் நிர்மூலம் ஆக்கப்பட வேண்டும் – அறிவியல் ஆக்கம் பெறுவதற்காக! சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும்.

கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனைக் கொடுங்கோலன் என்றும் மக்கள் எளிதாக நம்பி விடுவார்கள். ஆதலால் மக்கள் கவிஞனின் வேலை, தொல்லைமிக்கதாக ஆகிறது.

பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.

அவரது சிந்தனைப் படை வலிமையை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைக் கொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.

மக்கள் கவிஞர் பாரதியாருக்கு நாம் வழங்கும் மாபெரும் காணிக்கை – மரியாதை – அவர் நடத்திய அறிவுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான். தீவிரமாக – உன்னதமான போக்கில் – மக்கள் விடுதலைக்கான போராட்டம் நடைபெற வேண்டும்! வேண்டிய வீரர்கள் இருக்கிறார்கள் – வெற்றி காண்பது உறுதி!

*(பேரறிஞர் அண்ணா வானொலியில் "People's Poet" என்னும் தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரை 'அண்ணா போற்றிய பெருமக்கள்' நூலிலிருந்து)*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 6.11.2002 அன்று, தலைமைச் செயலகத்தில், சென்னையில் உள்ள இந்து தர்ம ரக்ஷனா சமிதி என்ற அமைப்பின் துணைத்தலைவர் டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்கள் சந்தித்தார். அப்போது அந்த அமைப்பின் செயலாளர் திரு.பி.கண்ணன்* மற்றும் குழு உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத், திருமதி.வசந்தி பத்ரிநாத், திரு.கருமுத்து கண்ணன், சுவாமி ராகவானந்தா, திருமதி.நிர்மலா மற்றும் திரைப்பட நடிகர் திரு.எஸ்.வி.சேகர் ஆகியோர் உடன் இருந்தார்கள்.*



# சிறப்பு சட்டக் கல்வி மையம்

**- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடக்கவுரை**

இந்தச் சிறப்பு சட்டக் கல்வி மையத்தை தொடங்கி வைக்கும் இந்த இனிய நிகழ்ச்சியிலும் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மேம்பாட்டுப் பணிகளை தொடங்கி வைப்பதிலும், இதில் கலந்து கொள்வதிலும் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மைக் காலத்தில் தொழில் முறைக்கல்வியில் உலகம் முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்கள் தனித்தன்மையுடன் தங்கள் நிலையை மேம்படுத்தியிருப்பது நிரூபணமாகியுள்ளது.

அதைக் கருத்தில் கொண்டு, எனது அரசு, தனியாக சட்டப் பல்கலைக்கழகம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து 1995– ஆம் ஆண்டே சட்டப் பல்கலைக்கழகத்தை அமைக்க உரு கொடுத்தது.

இன்று அந்த சட்டப் பல்கலைக்கழகம் பல்வேறு சிறப்புக்களுடன் இயங்கி வருவதைக் காணும்போது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

இன்றைய சூழலில் தாராளமயம் மற்றும் தனியார் மயமாக்கல் உலகம் முழுவதும் பரவலாகி வருவதால் ஒவ்வொரு துறையிலும் தரமான கல்வியை உலகத் தரத்துக்கு ஏற்ப தருவது மிகவும் அவசியமானதே. ஆனால் அந்தக் கல்வியானது நமது தேசத்தின் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் அது பயன்பட வேண்டும்.

அந்த இலட்சியத்தை அடைவதற்கான புனிதப் பணியில் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பங்கு கொள்ள வேண்டும். அதற்காக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.







அந்தக் கோணத்தில் (ஸ்கூல் ஆப் எக்ஸ்சலன்ஸ் இன் லா) என்கிற சிறப்பு சட்டக் கல்வி மையமானது தரமான கல்வியைத் தரும்.

டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா 19.4.2002 அன்று நடைபெற்ற போது பேசிய நான், சிறப்பு சட்டக் கல்வி மையம் அமைய வேண்டும் என்கிற எனது விருப்பத்தையும் அந்தக் கல்வி மையத்தை நேரடியாக சட்டப்பல்கலைக்கழகமே நடத்த வேண்டும் என்பதையும் தெரிவித்திருந்தேன்.

அந்த எனது விருப்பமானது பிரமிக்கத்தக்க வகையில் இன்று நிறைவேறுவது மகிழ்ச்சி தருகிறது.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்கிற அரசின் திட்டம் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) பட்டப் படிப்பு தொடங்கி வைக்கப்படுவதன் மூலம் நிறைவேறுகிறது.

இந்த நாட்டிலுள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளுக்கும் முன்னோடியாக சென்னை சட்டக் கல்லூரியை மாற்ற அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது நான் தெரிவித்த யோசனையான சிறப்பு சட்டக்கல்வி மையத்தை அமைத்தது மட்டுமல்லாமல், தரமான சட்டக் கல்வியை அளிக்கும் மாநில அரசின் திட்டத்தினை நிறைவேற்றும் முயற்சியிலும் ஈடுபட்டிருப்பது மிகுந்த திருப்தி அளிக்கிறது.

சர்வதேச தரத்துக்கு ஈடாக சட்டக் கல்வியை தருவது உட்பட அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பல்கலைக்கழகமானது சரியான திசையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தொழில் சட்டம், அரசியல் சட்டம் மற்றும் சட்டம்–ஒழுங்கு போன்ற பிரிவுகளில் இந்தப் பல்கலைக்கழகம் பட்டமேற்படிப்புக்கு வகை செய்துள்ளது. இது சட்டம் சம்பந்தமான ஆசிரியர்களை உருவாக்க உதவும்.

இந்தப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப் பிரிவையும் துவங்கி சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதை பார்க்கிறேன். சட்டத்துறையில் அனைத்துப் பிரிவுகளிலும் ஆராய்ச்சிப் பிரிவைத் துவக்கி இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள சட்டக் கல்லூரிகளும் டாக்டர் பட்டத்துக்கான ஆராய்ச்சிப் பிரிவை துவங்கியுள்ளது.

வணிக சட்டம் மற்றும் "அரசியல் சாசனம் மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றில் முதுகலை பட்டத்துக்கான முழுநேரப் பாடப் பிரிவை இந்த பல்கலைக்கழகம் கொண்டு வந்துள்ளதாக அறிகிறேன். இவை சட்டக் கல்வி ஆசிரியர்களின் நிலையை உயர்த்த உதவும்.

வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு மேல் பட்டயப் படிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளதையும் அறிகிறேன்.

தொலைதூரக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வசதி இல்லாதவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டிருப்பதை அறிவேன்.

இந்தச் சிறப்பு மையத்தில் சேர்ந்து பயிலும் வாய்ப்புக் கிடைத்த மாணவர்கள் அத்துணை பேரையும் பாராட்டுகிறேன்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமானது சட்டக் கல்வியில் மற்றவர்கள் பின்பற்றக்கூடிய வகையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி, நாட்டுக்கே வழி காட்டும் வகையில் உயரும் என நம்புகிறேன். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

கடுமையான உழைப்பும் தியாகமுமின்றி எந்த ஒரு சாதனையையும் படைக்க முடியாது. மாணவர்களாகிய உங்கள் எல்லோரையும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்தப் பல்கலைக்கழகமும், சட்டத் தொழில் கல்வியும் இந்த மாநிலமும் சிறந்து விளங்க பாடுபட வேண்டும் என்பதே.

*– சென்னையில் சிறப்பு சட்டக் கல்வி மைய தொடக்க விழா மற்றும் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மேம்பாட்டுப்பணிகள் தொடக்கவிழாவில் 21.11.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.*

## பொது மக்கள் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கனமழை காரணமாக கடந்த சில நாட்களாக பல இடங்களில் குறிப்பாகத் தாழ்வான பகுதிகளில் அதிக அளவில் தண்ணீர் தேங்கியுள்ளது. நீண்ட வறட்சிக்குப் பிறகு பருவமழை பெய்துள்ளதாலும் தண்ணீர் தேங்கியுள்ளதாலும் தண்ணீர் மூலம் வரக்கூடிய வயிற்றுப்போக்கு, டைபாய்டு, மஞ்சள்காமாலை போன்ற நோய்கள் அதிக அளவில் பரவும் அபாயம் உள்ளது. கிராமப்புறங்களில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. 2 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான குளோரின் மாத்திரைகள், கிருமிநாசினிகள் மற்றும் பிளிச்சிங் பவுடர் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வயிற்றுப்போக்கு கண்டு மருத்துவமனைகளுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் வரும் பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக தேவையான மருந்துகளும், O.R.S. பொட்டலங்களும் வழங்கப்பட்டுள்ளன. பொது மக்கள் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை அனுசரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- தண்ணீரை எப்போதும் காய்ச்சிக் குடிக்கவும்,
- உடைந்த குடிநீர்க் குழாய்களில் அல்லது அதனருகில் குழி தோண்டித் தண்ணீர் பிடிப்பதை தவிர்க்கவும்,
- சுகாதாரமற்ற சூழ்நிலையில் விற்கும் உணவுப் பொருட்களை, தின்பண்டங்களை வாங்கி உண்பதைத் தவிர்க்கவும்,
- தொடர்ந்து வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் நீர் ஆகாரம் மற்றும் உப்பு கரைசல் நீரை (O.R.S.) பருகவும்,
- வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள துணைச் சுகாதார நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவும்,
- குடிநீர் நிலைகளுக்கு குளோரினேசன் செய்ய வரும் சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு தரவும்.

✧ ✧ ✧



# ஆலய அன்னதானத் திட்டத்திற்கு முதலமைச்சர் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் 2002 ஆகிய 4 மாதங்களுக்குரிய தமது சம்பளப் பணம் மொத்தம் 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை 4 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 15.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில் அளித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002 மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக வழங்கி வருகிறார்கள். அதன்படி, சென்னை பெசன்ட் நகரில் உள்ள அருள்மிகு மகாலஷ்மி திருக்கோயிலுக்கு தமது ஜூலை மாதச் சம்பளத் தொகையான ரூ.10 ஆயிரத்தை, அந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. எஸ். சிவகுமாரிடமும், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலின் துணைக் கோயிலான மாத்தூர், அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி திருக்கோயிலுக்கு தமது ஆகஸ்ட் மாதச் சம்பளத் தொகையான ரூ.10 ஆயிரத்தை அந்தத் திருக்கோயிலின் இணை ஆணையரும் செயல் அலுவலருமான திரு. எஸ். முத்துசாமி அவர்களிடத்திலும் வழங்கினார்.

மேலும், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் சென்னிமலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு, தமது செப்டம்பர் மாதச் சம்பளத் தொகையான ரூ.10 ஆயிரத்தை, அந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. ராமசாமி அவர்களிடமும், பெரம்பலூர் மாவட்டம் கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு, தமது அக்டோபர் மாதச் சம்பளத் தொகையான ரூ.10 ஆயிரத்தை அந்தத் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலரான திரு. ஜி. கோவிந்தசாமி படையாச்சி அவர்கள் சார்பாக வந்துள்ள அக்கோயிலின் செயல் அலுவலர், திரு. க. ரவி அவர்களிடம் வழங்கினார்.



• • •

# தமிழகத்தில் கூட்டு முயற்சியில் தொழில் தொடங்க வாருங்கள்!

## மேற்கு ஆஸ்திரேலிய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அழைப்பு!

மேற்கு ஆஸ்திரேலிய சுற்றுலா மற்றும் கனிமத்துறை அமைச்சர் கிளைவ் ப்ரௌன் தலைமையிலான மேற்கு ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, ஆர்வத்துடன் வருகை தந்திருப்பதற்கும், தமிழ்நாட்டிற்கும் – மேற்கு ஆஸ்திரேலியாவிற்கும் இடையே, வணிகம் மற்றும் தொழில் உறவுகளை மேன்மைப்படுத்தும் நோக்கில் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதற்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உயர்தரம் மற்றும் சாதாரண தரம் கொண்ட கனிமங்களின் கணிசமான அளவில் இருப்பைக் கொண்டதாக தமிழ்நாடு அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், வெளிக் கொணரத்தக்க வகையிலான 24,275 மில்லியன் மெட்ரிக் டன் அளவு பழுப்பு நிலக்கரி படிமங்கள் இருப்பு இருக்கின்றன.

மாநிலத்தின் மேற்குப் பகுதி மாவட்டங்களில் சற்றேறக்குறைய 52 ஆயிரம் மில்லியன் மெட்ரிக் டன் அளவு மேக்னசைட் படிம இருப்புகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் மிகப் பெரும் அளவில் சுண்ணாம்புக் கல் கனிமம் உள்ளது. அதாவது 144 மில்லியன் மெட்ரிக் டன் அளவு உள்ளது. கடலூர் பகுதிகளிலும், தஞ்சையின் காவிரி நதி முகத் துவாரப் பகுதிகளிலும், இதுவரை வெளிக் கொணரப்படாத, நிலத்தடி இருப்பாக, எண்ணெய் வளமும், இயற்கை எரிவாயுவும் உள்ளன.

சிமெண்ட் தொழிலும், கிரானைட் தொழிலும் தமிழ்நாட்டில் நன்கு அமையப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் கடற்கரை பகுதிகளில் கார்னட், இல்மினைட், மானோசைட் மற்றும் ரூடைல் போன்ற கனிம மணல்வளம் 18 மில்லியன் மெட்ரிக் டன் அளவில் கிடைக்கின்றன.

சிலிகா மணல் கனிமம் 15 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு கிடைக்கிறது. களிமண் கனிமம் 7.5 மில்லியன் மெட்ரிக் டன் அளவில் இருக்கிறது. கிரானைட் எனப்படும் கனிமப்பாறை 6 மில்லியன் மெட்ரிக் டன் அளவில் கிடைக்கிறது.

மேற்கு ஆஸ்திரேலிய நிறுவனங்களின், தொழில் முறையிலான ஒத்துழைப்போடு, தொழில் சார்ந்த நோக்கங்களுக்காக, இந்த வகை கனிமங்களைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன என நான் நம்புகிறேன். ஏனெனில் இந்தக் கனிமங்களை வெளிக் கொணரவும், நன்கு பயன்படுத்தவும் மேற்கு ஆஸ்திரேலிய நிறுவனங்களிடம் உயர்தர தொழில்நுட்பமும், உயர்ரக கருவிகளும் உள்ளன.






இந்திய–ஆஸ்திரேலிய கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாக, வெவ்வேறு வகையான தொழிலில் ரூ.462.4 கோடி அளவிலான முதலீட்டில், 36 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கூட்டு முயற்சியில், மேற்கு ஆஸ்திரேலியாவின் நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதையும் அறிவேன்.

இல்மினைட் மணல் கனிம தொடர்பான, ஒரு டைட்டானியம் திட்டத்திற்காக, டாடா நிறுவனத்துடன் தமிழக அரசு சமீபத்தில் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. டாடா நிறுவனத்துடனான இந்தத் திட்டத்தின் தொழில் ஒத்துழைப்பில், திறமையும், சுற்றுச்சூழலுக்கு ஒத்தவகையிலுமான, சுரங்க மென்பொருள்களை உடைய மேற்கு ஆஸ்திரேலியா, தங்களது நிபுணத்துவ ஆலோசனையை வழங்குவார்கள் என உறுதியாக நம்புகிறேன்.


தகவல் தொழில் நுட்பமும், உயிரித் தொழில் நுட்பமும் தமிழக அரசு முக்கியத்துவம் கொடுக்க விரும்பும் இரு துறைகளாகும்.

ஏற்றுமதி மற்றும் தொழிற்கூட்டுத் திட்டங்களை மேலும் வலிமைப்படுத்த, மேற்கு ஆஸ்திரேலியாவிலும், சென்னையிலும் உள்ள தகவல் தொழில் நுட்ப அடிப்படையைக் கொண்ட நிறுவனங்கள் செப்டம்பர் 2001–ல் வல்லுநர்களின் இருபுற வருகை பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளதை, உங்களுக்கு நினைவுப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வகையிலான முயற்சிகளில், மேற்கு ஆஸ்திரேலிய நிறுவனங்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும். தகவல் தொழில்நுட்பத் துறையிலும், உயிரித் தொழில்நுட்பப் பிரிவிலும் உயர் அளவிலான முயற்சிகளில் ஈடுபட போதிய மனிதவளமும், தொழில் சார்ந்த ஆதரவும் தமிழகத்தில் உள்ளன.

சுற்றுச் சூழலை பாதிக்காத வகையில் தொழிற்சாலை கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதில், மேற்கு ஆஸ்திரேலியாவிற்கு போதிய நிபுணத்துவம் இருக்கிறது என நான் அறிகிறேன்.

தமிழகத்தில் தோல் பதப்படுத்தும் துறையில், வேலூரின் பாலாறு நதிப்பகுதிகளில், நிறைய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன.





ஜவுளி மற்றும் நூல் உற்பத்தித் துறையில் ஈரோடு பகுதிகளில், கழிவு நீரைச் சுத்தப்படுத்தும் தொழில்நுட்பம் தேவைப்படும் அளவுக்கு சாயத் தொழில்பட்டறைகள் அதிக அளவில் உள்ளன.

தோல் தொழில் கழிவுநீர்ச் சுத்திகரிப்புத் திட்டத்திலும், நிலத்தடி நீர் மாற்றுத் திட்டத்திலும், மேற்கு ஆஸ்திரேலியாவின் நிலத்தடி நீர் ஆய்வு மையம் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் நூல் உற்பத்தி துறையில் அநேக தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும், சாயத்தொழில் பட்டறைகளுக்கும் இது குறித்த நிபுணத்துவம் தேவைப்படுவதால் தனித்தனி நிறுவனங்களின் அடிப்படையிலும் ஒரு கூட்டுத் தொழில் ஈடுபாட்டுக்கு வாய்ப்பு இருப்பதாக நான் எண்ணுகிறேன்.

தமிழ்நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டையில் நிறுவப்படஉள்ளவிவசாயப்பொருள் ஏற்றுமதி நிறுவனத்தில், சந்தைப்படுத்தக் கூடிய பழங்களையும், காய்கறிகளையும் விரிவான அளவில் உற்பத்தி செய்வதில், மேற்கு ஆஸ்திரேலியாவின் நிபுணத்துவம் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில், தேனி மாவட்டத்திலும், அதைச் சுற்றிலும் நடைபெறும் திராட்சை பயிரிடப்படும் பகுதிகளில், மதிப்புக் கூட்டலுக்கான,நமது திட்டத்திற்கு ஆதரவாக நல்ல தரமான திராட்சை ரசம் மற்றும் அதன் உபபொருட்களை உற்பத்தி செய்வதில், மேற்கு ஆஸ்திரேலியாவின் அனுபவ அறிவு நமக்கு பெருமளவில் உதவி செய்யக்கூடும்.

எண்ணூர் துறைமுகத்தில் உள்ள, புதிய இரும்புத் தாது ஏற்றுமதி மையத்தில் பங்கு கொள்வதில், மேற்கு ஆஸ்திரேலியா அதிகம் ஆர்வம் காட்டுவதை நான் அறிவேன்.

அநேக, எரிசக்தி, பெட்ரோலிய இரசாயன திட்டங்கள், தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதால், முதலீடு செய்வதன் மூலமும், தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றத்தின் மூலமும், மேற்கு ஆஸ்திரேலியா பெருமளவில் பங்கு கொள்ளும் வாய்ப்பு உள்ளது என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது.

மிக விரைவில்,மேற்கண்ட துறைகள் கூட்டு முயற்சியில் ஈடுபட, தேவையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் எனது சிறந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*– மேற்கு ஆஸ்திரேலிய அரசின் கனிமப் பொருள்கள், சிறுதொழில்கள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித்துறை இணை அமைச்சர் "கிளைவ் ப்ரௌன்" தலைமையிலான உயர் மட்டக் குழு கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18–11–2002 அன்று ஆற்றிய உரை.*

**பிரபஞ்சம் (Universe)**

*நம்முடைய பூமி ஒவ்வொரு நாளும் தன்னைத் தானே ஒரு முறை மணிக்கு 1,500 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றி வருகிறது. பூமி தன்னைத் தானே சுற்றி வருவதினால்தான் நம் பூமியில் இரவும் பகலும் உருவாகின்றன.*

*நம்முடைய பூமி மணிக்கு 1,07,000 கிலோ மீட்டர் வேகத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது.*

*நம்முடைய சூரிய மண்டலத்தில் (Solar System) ஒரு நட்சத்திரமும் (சூரியன்), நம் உலகம் உட்பட ஒன்பது கோள்களும் (Planets), சந்திரன் உட்பட 31 துணைக்கோள்களும் (Satellites), 30,000 alstroidகளும், 10 இலட்சம் வால் நட்சத்திரங்களும் (Comets) உள்ளன.*

*சூரிய மண்டலத்தில் இருக்கும் பொருட்களில் 99.86 சதவிகிதம் பொருட்கள் சூரியனில் உள்ளன. மீதியுள்ள 0.14 சதவிகிதம் பொருட்கள் 9 கோள்களிலும் 31 துணைக் கோள்களும் 30,000 aestroidகளிலும் பத்து இலட்சம் வால் நட்சத்திரங்களிலும் உள்ளன. இதிலிருந்து சூரியன் எவ்வளவு பெரியது என்பதை நம்மால் ஊகித்துக் கொள்ள முடியும். சூரியன் நம் உலகத்தைவிட பத்து இலட்சம் மடங்குகள் பெரியது.*

*நமது பூமியிலிருந்து சூரியன் 9,28,68,000 மைல்கள் தூரத்தில் உள்ளது.*

*ப்ளூட்டோ (Pluto) என்ற கிரஹம் சூரியனிலிருந்து 357,31,32,000 மைல்கள் தூரத்தில் இருக்கிறது. இந்த கிரஹம் சூரியனை ஒரு முறை சுற்றிவர 248 வருடங்கள் எடுத்துக் கொள்கிறது.*

*– பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து...*



# அவசர விபத்து நிவாரண மையங்கள்




தமிழகத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் எதிர்பாராத விபத்துகளில் உயிர் இழப்பு ஏற்படுவதை தடுத்து நிறுத்தவும், உடனடியாக அவர்களுக்கு தேவைப்படுகின்ற சிகிச்சைகளை வழங்கிடவும், தமிழ்நாடு அரசின் சார்பில் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைத்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார். இதன்படி, சென்னையை அடுத்துள்ள ஸ்ரீபெரும்புதூரில் அப்பலோ மருத்துவமனை சார்பிலும், மாமண்டூரில் மியாட் (MIOT) மருத்துவமனை சார்பிலும், அவசர விபத்து சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.11.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

முதலாவதாக, சென்னையை அடுத்துள்ள ஸ்ரீபெரும்புதூரில் அப்பலோ மருத்துவமனையின் சார்பில் செயின்ட் கோபெய்ன் கண்ணாடித் தொழிற்சாலை உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள அவசர விபத்து சிகிச்சை மையத்தில் சாட்டிலைட் உதவியுடன் செயல்படும் தொலைத்தொடர்பு மருத்துவ சிகிச்சை அமைப்பினை (Telemedicine System) தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து, ஸ்ரீ பெரும்புதூரில் அமைந்துள்ள அப்பலோ மருத்துவமனையின் அவசர விபத்து சிகிச்சை மையத்துடன் சாட்டிலைட் உதவியுடன் செயல்படும் இந்தத் தொலைத்தொடர்பு மருத்துவ சிகிச்சை அமைப்பு மூலம் தொடர்பு கொண்டார். அப்போது, அந்த மையத்தில் இருந்த அப்பல்லோ மருத்துவமனையின் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் டாக்டர் கோபாலகிருஷ்ணன், மையத்தில் உள்ள வசதிகள் குறித்தும், இந்த அவசர விபத்து

சிகிச்சை மையத்தில் இருந்து உடனுக்குடன் அப்பலோ தலைமை மருத்துவமனைக்கு நேரடியாகத் தொடர்பு கொண்டு மருத்துவ ஆலோசனைகள் பெறுகின்ற டெலிமெடிசன் அமைப்பு குறித்தும் விளக்கினார். தற்போது நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளித்து அவர்களது உயிரைக் காப்பதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் இந்த அவசர விபத்து சிகிச்சை மையங்கள் பெரிதும் உதவும் என்று தெரிவித்தார்.

அதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் ''சரியான பாதையில் நாம் எடுத்து வைத்துள்ள முதல் அடி இது, மியாட் (MIOT) மருத்துவமனையின் சார்பில் பயன்படுத்தப்பட உள்ள ஆம்புலன்ஸ் ஊர்தியின் சாவியை அதனுடைய மருத்துவர் மற்றும் ஓட்டுநரிடம் வழங்கினார்.

அதன்பின் மியாட் (MIOT) மருத்துவமனையின் சார்பில் சென்னையை அடுத்த மாமண்டூரில் இயங்க உள்ள அவசர விபத்து சிகிச்சை மையத்தை ரிப்பன் வெட்டி தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த அவசர விபத்து சிகிச்சை மையங்களில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்குத் தேவைப்படுகின்ற முதல் அவசர சிகிச்சைகளை உடனுக்குடன் வழங்கி அவரது உடல்நலத்தை நிலைப்படுத்தி அங்கிருந்து



தமிழகம் முழுவதிலும் இத்தகைய மையங்கள் அமைக்கப்பட உள்ளன. உங்களுடைய பணி சிறக்க என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று தெரிவித்துக் கொண்டார்.

அப்போது, அந்த அவசர விபத்து சிகிச்சை மையத்தில் எடுக்கப்பட்ட Electro Cardio Graph - ECG வரைபடத்தை, Telemedicine System மூலமாக கம்ப்யூட்டர் திரையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

அடுத்து, தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்பலோ மருத்துவமனையின் சார்பில் இந்த அவசர விபத்து சிகிச்சை மையத்தில் பயன்படுத்தப்பட உள்ள ஆம்புலன்ஸ் அவசர சிகிச்சை ஊர்தியின் சாவியை, அந்த வண்டியின் மருத்துவர் மற்றும் ஓட்டுநரிடம் வழங்கினார். அதே போல அருகிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய உயர் சிகிச்சைகள் அளிக்கப்படும். ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த அவசர விபத்து சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருக்க சூரிய வெப்பம் தாக்காத வகையில் செயின்ட் கோபெய்ன்கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று அப்பலோ மருத்துவ மனையின் மருத்துவர் திரு. பாஸ்கரன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், வாகனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ள சூழ்நிலையில், சாலைப் பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. விபத்துக்கு உள்ளானவர்களுக்கு உடனடியாக உதவி அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகிறது. எனவே, நன்கு சிந்தித்து ஆய்வு செய்த பின்னர், தமிழக முதலமைச்சர் அவர்களின்



உத்தரவிற்கு ஏற்ப தமிழ்நாடு அரசு, 22.4.2002ஆம் நாளிட்ட 339ஆம் எண் அரசாணையில், ஆண்டொன்றுக்கு ரூ.78 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 13 அவசர – விபத்து நிவாரண மையங்களை நிறுவிட ஆணைகள் பிறப்பித்தது.

அதன்படி, இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 4, 46, 7, 45 எண்கள் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளில் 13 அவசர–விபத்து நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. இதன் முதற்கட்டமாக சென்னையை அடுத்துள்ள, ஸ்ரீபெரும்புதூரில் அப்பலோ மருத்துவமனை சார்பாகவும், மாமண்டூரில் மியாட் மருத்துவமனை சார்பாகவும், அமைக்கப்பட்டுள்ள அவசர விபத்து சிகிச்சை மையங்களை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார். ஏனைய 11 இடங்களிலும் அதாவது சாரம், விழுப்புரம், இளஞ்சியம், பெரம்பலூர், காவேரிப்பாக்கம், திருவல்லம், இரத்தினகிரி, பள்ளிகொண்டா, புதுக்கோவில், கிருஷ்ணகிரி, ஒசூர் ஆகிய இடங்களில் இத்தகைய அவசரச் சிகிச்சை மையங்கள் படிப்படியாக செயல்படத் தொடங்கும். மேலும், இந்தத் திட்டம் தமிழகம் முழுவதிலும் உள்ள ஏனைய பெரும் சாலைகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

ஒவ்வொரு மையத்திலும் முதலுதவி வசதிகள் அடங்கிய, கையில் எடுத்துச் செல்லத்தக்க பெட்டி ஒன்றும், ஆம்புலன்ஸ் ஊர்தி ஒன்றும் தயாராக இருக்கும். இந்த மையங்களில் பயிற்சி பெற்ற மருத்துவத் துணைப் பணியாளர்களும், ஆம்புலன்ஸ் ஊர்தி ஒவ்வொன்றுக்கும் ஒரு ஓட்டுநரும் 24 மணி நேரமும் இருப்பர். இந்த மையங்கள் இரவு–பகல் எந்நேரமும் செயல்படும். BSNL மத்திய அரசு தொலைபேசி நிறுவனத்தின் மூலமாக இந்த மையங்களுக்கு கட்டணமற்ற தொலைபேசி எண்.1033 ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் எவரேனும், ஏதேனும் விபத்தைப் பார்க்க நேர்ந்தால், இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தகவல் கிடைத்தவுடன், அருகிலுள்ள மையத்தைச் சேர்ந்த பணியாளர்கள், நோயாளி ஊர்தியுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு, முதலுதவி அளித்து, பின்னர் மேற்கொண்டு சிகிச்சை அளிப்பதற்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு எவ்வளவு விரைவாக அழைத்துச் செல்ல இயலுமோ அவ்வளவு விரைவாக அழைத்துச் செல்வார்கள். தகவல் கிடைத்த ஒரு மணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்டவருக்கு எப்படியாவது முதலுதவி அளித்து சிகிச்சை அளிக்கப்படும்.

இந்தத் திட்டம், சென்னை, அப்பலோ மருத்துவமனை, சென்னை, மியாட் (MIOT) மருத்துவமனை சென்னை சுந்தரம் மெடிக்கல் பவுண்டேஷன், கோயம்புத்தூர் மருத்துவ மையம் – மருத்துவமனை, சேலம் கோகுலம் மருத்துவமனை போன்ற முக்கிய மருத்துவமனைகளின் ஒத்துழைப்புடனும், ஆதரவுடனும் செயல்படுத்தப்படும். எட்டு மையங்களின் பராமரிப்புச் செலவு ஆதரவு மருத்துவமனைகளாலும், எஞ்சிய ஐந்து மையங்களின் பராமரிப்புச் செலவு அரசாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்தத் திட்டம், அரசு, தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் செயல்படுத்தப்படும். ✧



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ராபர்ட் டி. பிளாக்வில் 6.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

# டைம்ஸ் ஆப் இந்தியா


## – சிறப்பு வெளியீடு

## முதலமைச்சர் வெளியிட்டார்

இந்தியாவின் புகழ்பெற்ற நாளிதழான Times of India நிறுவனத்திலிருந்து வணிகச் செய்திகள் தாங்கி The Economic Times என்னும் நாளிதழ் வெளி வருகிறது. இந்த நாளிதழ் தமிழ்நாடு அரசின் காவலர் வீட்டு வசதிக் கழகத்தைப் பற்றியும் அதன் சாதனைகள் பற்றியும் "Setting Dreams in Concrete" என்னும் தலைப்பில் வண்ண இணைப்பு ஒன்றைத் தயாரித்துள்ளது. The Economic Times நாளிதழுடன் இலவச இணைப்பாக வழங்கப்படவுள்ள இந்த சிறப்பு வெளியீட்டை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.11.2002 அன்று வெளியிட்டார்.

வேண்டி இந்தச் சிறப்பிதழை வெளியிடுவதாகவும் தெரிவித்தார். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சாதனைகளைத் தொகுத்து இத்தகைய வண்ணச் சிறப்பிதழை வெளியிட்டுள்ளமைக்காக முதலமைச்சர் அவர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின் போது, உள்துறைச் செயலாளர் திரு. சையது முனீர் ஹோடா, காவல்துறை தலைமை இயக்குநர் திரு. பி.பி. நெயில்வால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவரும் மேலாண்மை



இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற, The Times Group நிறுவனத்தின் துணைப் பொதுமேலாளர் திரு. நைனன் தரியன், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மிகவும் சிறப்புடன் செயல்பட்டு வருவதாகவும், இந்தச் சாதனைகளைப் பற்றி பொது மக்கள் அறிந்து கொள்ள

இயக்குநருமான திரு. ஐ.கே. கோவிந்த், சென்னை மாநகர காவல் ஆணையர் திரு. விஜயகுமார் ஆகியோரும் Times Group மேலாளர் திரு. சுதாகர் பாபு ஆகியோரும் பங்கேற்றனர்.



திரைப்படங்கள் குறித்து

# பிலிம்நியூஸ் ஆனந்தனின்

## அரிய சேகரிப்புகள் அரசுடமை

சென்னையைச் சேர்ந்த திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் தமிழ்த் திரைப்படத் துறையில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் தொடர்புப் பணியிலும், கலைத்துறை சார்ந்த பல்வேறு பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அதன் மூலம் 1931-ஆம் ஆண்டு முதல் 2001 வரையிலான தமிழ்த் திரைப்படங்கள் குறித்த புகைப்படங்கள், தமிழ்த் திரை உலகக் கலைஞர்கள் பற்றிய புத்தகங்கள், திரைப்படமான நாவல்கள், நாடகங்கள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த பல்வேறு புத்தகங்கள், கலை உலகைச் சார்ந்த பல்வேறு சேகரிப்புகள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த கிடைத்தற்கரிய விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துள்ளார்.


அருமையான இந்தச் சேகரிப்புகள் அனைத்தும் எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில், இவற்றைத் தமிழக அரசு பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இதற்கென ஒரு தொகை நிர்ணயித்து தனக்கு வழங்கி உதவ வேண்டும் என்றும், திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களது கோரிக்கையை ஒரு வல்லுநர் குழு மூலம் ஆய்வு செய்து, அதன் பரிந்துரையைப் பெற்று, மேல் நடவடிக்கை தொடரலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்.

இதன்படி, தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர், தமிழரசு அச்சக உதவிப் பணி மேலாளர், திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான திரு. ஆர்.வி.உதயகுமார், பத்திரிகையாளர் ராம்ஜி ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. "திரு. பிலிம் நியூஸ் ஆனந்தனின் சேகரிப்புகள் இன்றைய சூழ்நிலையில் யாரிடமும் இல்லாத அளவுக்கு, இளைய தலைமுறையினர் எண்ணிப் பார்க்க இயலாத வகையிலும், கண்டும் கேட்டும் இராத வகையிலும், தமிழ்த் திரைப்பட வரலாற்றை அறிந்து கொள்ளும் வகையில் தரம் வாய்ந்ததாக உள்ளதாகவும், 'தமிழ்த் திரையுலக வரலாற்றுக் காட்சியகம்' என ஒரு காட்சியகம் அமைக்கும் அளவுக்குச் சிறப்புடையது எனவும், அவற்றைச் சேகரித்து வைத்துள்ள திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் உழைப்பிற்கும், உணர்வுக்கும், சேவைக்கும் அரசு கணிசமான ஒரு தொகையை வழங்கலாம்" எனவும் பரிந்துரை செய்தது.

முதலமைச்சர் அவர்கள் இந்தப் பரிந்துரையை மிகவும் கவனமுடன் பரிசீலனை செய்து, தமிழ்த் திரைப்பட உலகம் தொடர்பாக திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் சேகரித்து வைத்துள்ள அனைத்து விவரங்களையும் அரசுக்குப் பெற்றுக் கொண்டு, அதற்கென பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கிட ஆணையிட்டார்.

இதன்படி, முதலமைச்சர் அவர்கள் 20.11.2002 அன்று திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களிடம் தமிழ்த் திரைப்பட உலகம் தொடர்பான அவரது சேகரிப்புகள்



அனைத்தையும் அரசுக்குப் பெற்றுக் கொண்டு, பரிவுத் தொகை ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். தமிழ்த் திரைப்பட உலகம் குறித்து அறிய விரும்பும் எதிர்காலத் தலைமுறையினருக்கு குறிப்பாகத் தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இது ஒரு பேருதவியாக அமையும்.

மேலும் திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள 'சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்னும் நூலை வெளியிட நிதி உதவி வழங்கிட வேண்டும் என்னும் கோரிகையையும் ஏற்று, இந்த நூலை அச்சடித்து வெளியிட ரூ.5 இலட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகளை ஏற்று, பரிவுத் தொகை வழங்கியமைக்காகவும், நூலை வெளியிட உதவித் தொகை வழங்க ஆணையிட்டமைக்காகவும், திரு பிலிம் நியூஸ் ஆனந்தன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ✧

# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் புதிய கட்டடம் திறப்புவிழா

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள பல இலட்சக்கணக்கான உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்காக "தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1982''–இல் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தில் உடல் உழைப்புத் தொழிலாளராக அடையாளம் காட்டப்பட்ட கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காக்க மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நல்லாட்சியில், 1994–ஆம் ஆண்டில் "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்'' என்ற அமைப்பு தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 2–வது தேசிய தொழிலாளர் ஆணையம் நாடு முழுவதும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தற்போது பரிந்துரை செய்துள்ளது. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தீர்க்க தரிசனமாக 1994–ஆம் ஆண்டிலேயே இந்த வாரியம் உருவாக்கப்பட்டது.

கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கொத்தனார், சித்தாள் மற்றும் மரத்தச்சர் போன்ற 38 தொழில்களை செய்யும் தொழிலாளர்கள், ரூ.25/– பதிவுக் கட்டணமாகச் செலுத்தி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்த தொழிலாளர்கள் ஈராண்டிற்கு ஒரு முறை ரூ.10/– செலுத்தி பதிவினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விபத்து இறப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் விபத்தில் ஏற்படும் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூபாய் ஒருஇலட்சம் வரை உதவி நிதி வழங்கப்படுகிறது. மேலும், தொழிலாளர் தம் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகையாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1000/–, 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெறுபவருக்கு ரூ.1500/– உயர் கல்வித் தொகையாக ரூ.1000/– முதல் ரூ.6000/– வரை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பதிவு பெற்ற தொழிலாளி மற்றும் அவரது மகன் அல்லது மகள் ஆகியோரின் திருமண உதவித் தொகையாக ரூ.2000/–மும், மகப்பேறு உதவித் தொகையாக ரூ.2000/–மும் வழங்கப்படுகிறது. இயற்கையாக மரணம் அடைந்த பதிவுபெற்ற தொழிலாளர்களின் குடும்பத்திற்கு உதவி நிதியாக ரூ.10,000/–மும் ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.2000/–மும் வழங்கப்பட்டு வருகிறது.




1994 முதல் நாளது தேதி வரை இவ்வாரியத்தில் மொத்தம் 4,35,569 கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். மேலும் இக்காலத்தில் 11,363 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.5,23,78,650/– (ரூ.5.23 கோடி) நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, கட்டுமானத் தொழிலாளர்களுக் கெனச் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை, சீரிய முறையில் செம்மையாகச் செயலாற்றிட சென்னை நுங்கம்பாக்கத்தில் 3 கோடியே 45 இலட்ச ரூபாய் செலவில் 3 மாடிகள் கொண்ட புதிய நல வாரியக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்த நலவாரியக் கட்டடம் கட்டப்பட்ட நிலத்தின் பரப்பளவு 661 சதுரமீட்டர். கட்டப்பட்ட மூன்று மாடி கட்டிடத்தின் பரப்பளவு 1018 சதுரமீட்டர் ஆகும். அதேபோல, கிண்டி தொழிற்பேட்டையில் 2 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரிய அலுவலகத்திற்காக புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த இரண்டு கட்டடங்களையும் சென்னை வள்ளுவர்கோட்ட நெடுஞ்சாலையில் உள்ள கட்டுமானத் தொழிலாளர் நல வாரியக் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில்,28.11.2002 அன்று திறந்து வைத்தார். பின்னர், புதிய கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். தொடர்ந்து, இந்தப் புதிய கட்டடத்திற்கான கல்வெட்டுக்களைத் திறந்து வைத்து, இந்தக் கட்டடங்களின் சிறப்பு அம்சங்களை விளக்கும் புகைப்படங்களைப் பார்வையிட்டார். இதனையடுத்து, 'தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – ஒரு கண்ணோட்டம்' (Tamil Nadu Construction Workers Welfare Board - An overview) என்னும் ஆங்கிலக் கையேட்டை, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ஏ.அன்வர்ராஜா அவர்கள் வழங்கினார்.

மேலும், இவ்விழாவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 191 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்படுவதன் அடையாளமாக 6 பேருக்கு முதலமைச்சர் அவர்கள் உதவித் தொகைகளை வழங்கினார். சென்னை திருவொற்றியூர் திரு.ஜோ.ராஜாமுத்து, கொளத்தூர் திரு.பி.எம்.கண்ணன் ஆகியோருக்கு திருமண உதவித் தொகை தலா ரூபாய் 2 ஆயிரம், சென்னை அயன்புரம் திரு.டி.பன்னீர்செல்வத்திற்கு கல்வி உதவித் தொகை ரூ.1000/–, திருவல்லிக்கேணி திரு.ஆர்.பெரியசாமிக்கு கல்வி உதவித் தொகை ரூ.1500/–, சென்னை கிழக்கு தாம்பரம் திருமதி ஜெ.லீனா, அண்ணாநகர் திருமதி எம்.உமா ஆகியோருக்கு மகப்பேறு நிதியுதவி தலா ரூ.2 ஆயிரம் ஆகிய உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்த விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ஏ.அன்வர் ராஜா, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.ஜீவானந்தம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலர் திரு.எம்.பி.பிராணேஷ், வேளாண்மைத்துறைச் செயலர் திரு.டி.எஸ்.ஸ்ரீதர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் திரு.க.கணேசன், தொழிலாளர் நலத்துறை ஆணையர் திரு.மூ.இராசாராம் ஆகியோரும் மற்றும் அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.






# தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியப் பணிகள்

- ✧ *ரூ.24.80 கோடியில் தருமபுரி மாவட்டத்தில் மலர் ஏற்றுமதி மண்டலம்.*
- ✧ *ரூ.15.89 கோடியில் நீலகிரியில் மலர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம்.*
- ✧ *தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி மாம்பழத்திற்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.24.60 கோடி.*
- ✧ *ரூ.80.00 இலட்சம் செலவில் 2000 உழவர்களுக்கு சிப்பம் கட்டுதல், வேளாண் பொருட்கள் மற்றும் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி குறித்த தொழில்நுட்பங்கள் பயிற்சிகள் அளித்தல்.*
- ✧ *உழவர் நல நிதித் திட்டம் மூலம் உழவர்களுக்கு நிதியுதவி.*
- ✧ *2002–2003–ஆம் ஆண்டில் உழவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2 கோடி செலவில் 100 கிராமங்களில் உலர் களங்கள்.*
- ✧ *தமிழகம் முழுவதும் உற்பத்தி மற்றும் தகவல் மையங்கள் அமைத்தல்*
- ✧ *ஆண்டிபட்டி, எழுமாத்தூர், தாத்தையங்கார்பேட்டை மற்றும் ஓமலூர் ஆகிய இடங்களில் ரூ.3 கோடி செலவில் வேளாண் பொருட்கள் விற்பனைக்கு புதிய உள் கட்டமைப்பு வசதிகள்.*
- ✧ *10 இடங்களில் வேளாண் விளைபொருட்களை சேமித்து வைக்க ரூ.2 கோடி செலவில் ஊரகக் கிடங்குகள்.*



# அய்யம்பாளையம் வள்ளியப்பன் செய்த அரிய செயல்!

*‘நாடென்ன செய்தது உனக்கு என கேள்விகள் கேட்பது எதற்கு ?”*
*“நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு”.*

– எனப் பாடினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இப்பாடலுக்கு இலக்கணமாக வாழ்கிறார் ஒருவர். அவர்தான் திரு. வள்ளியப்பன்.

அப்படி என்னதான் செய்துவிட்டார் வள்ளியப்பன் ?

திருச்சி மாவட்டத்தில் பாயும் காவிரியின் தென்கரையிலுள்ளது பெட்டவாய்த்தலை. வடகரையில் உள்ளது அய்யம்பாளையம். இவை இரண்டுக்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ. இக்காவிரி ஆற்றுப்பகுதியில் காட்டாமணக்குச் செடி பரவி நீர் பாய்வதைத் தடுத்து வந்தது. நீர் வரும் காலங்களில் சீராக ஆறு பெருக்கெடுத்து ஓட முடியாத நிலை.

20 ஆண்டுகளுக்கு முன்பு இக்கரையிலிருந்து பார்த்தால் அக்கரையில் வருபவர்கள் கண்ணுக்குத் தெரிவார்கள். ஆனால் இன்று அந்நிலை இல்லை. காட்டாமணக்குச் செடி வளர்ந்து பரவி விட்டதால் அக்கரையிலிருப்பவர்களைக் காண முடிவதில்லை. ஆற்றின் குறுக்கே நடந்து சென்று அக்கரைக்கும் மக்களால் செல்ல முடியவில்லை.

இந்த நிலையை நேரில் கண்ட அய்யம்பாளையம் வள்ளியப்பன் மனம் வருந்தியுள்ளார். மக்கள்படும் பாடுகளைக் கண்டு அவரால் வெறுமனே இருக்க முடியவில்லை.

தானே களமிறங்கினார். காட்டாமணக்குச் செடிகளை வெட்டி, பாதையை உருவாக்கத்





துவங்கினார். இப்பணி என்ன ஒருநாளில் முடியக் கூடியதா ? அல்லவே. ஒவ்வொரு நாளும் காலை 5.30 மணி முதல் நண்பகல் 11 மணி வரையிலும், பின்னர் மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலுமாக ஏழு மாத காலமாக காட்டாமணக்குச் செடிகளை வெட்டி எரிப்பது என தொடர்ந்து செய்துள்ளார். சுமார் 2.5 கி.மீ. அகலமாகவும் 3 கி.மீ. நீளமாகவும் உள்ள பரப்பில் படர்ந்திருந்தவற்றை வெட்டி அழித்து தீயிட்டுக் கொளுத்தியுள்ளார். இதற்காக அவர் செய்துள்ள செலவு 150 தீப்பெட்டிகள், 5 லிட்டர் மண்ணெண்ணெய், 2 லிட்டர் பெட்ரோல் ஆகியவை மட்டுமே. (ஆனால் இதுவே அரசு மூலம் செய்யப்பட்டிருந்தால் ரூ.5 இலட்சம் ஆகியிருக்கும் என்பது வள்ளியப்பனின் கணக்கு)

வள்ளியப்பன் இந்த ஒப்பற்ற சமுதாய நோக்குப் பணியின் பயனாக, அப்பகுதி மக்கள் ஆற்றை எளிதாகக் கடக்கவும் மட்டுமல்லாமல், காவிரி ஆற்றின் நீர் தேங்கித் தடைபடாமல் சீராகப் பாய்ந்து செல்லவும் முடிகிறது.

தினை அளவு பணி செய்தாலும்; மலை அளவு பாராட்டுவதே நற்பண்பு. ஆனால் மலை அளவு பணி செய்துள்ள வள்ளியப்பனை பாராட்ட விரும்பி, மக்கள் பணி செய்வோரைப் பாராட்டிப் பெருமை சேர்க்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவரை சென்னைக்கு வரவழைத்து 18.11.2002 அன்று ரூ.3 இலட்சம் நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தி பாராட்டினார்.

ஈரோடு மாவட்டம் நெறிஞ்சிப்பேட்டையைச் சேர்ந்த வள்ளியப்பனுக்கு வயது 64. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்புதான் அய்யம்பாளையம் வந்து குடியேறியுள்ளார். குடிபுகுந்த ஊரில் அவர்செய்த இந்த அரும்பணி, தமிழ்நாடு முதலமைச்சரின் பாராட்டுக்களால் இன்று அவரை உலகறியச் செய்து விட்டது.

வள்ளியப்பனுக்கு சரோஜா என்ற மனைவியும், திருமதி. மாலதி (வயது 35), திருமதி. கீதா (வயது 30), திருமதி. செல்வி (வயது 26) என்ற 3 மகள்களும், வெங்கடேஷ் (வயது 23) என்ற மகனும் உள்ளனர்.


இந்த 64 வயது பெரியவர் வள்ளியப்பனை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களால் இயன்ற மக்கள் பணியைச் செய்யத் துவங்கிவிட்டால் தமிழ்நாடு தலைசிறந்த மாநிலமாவது உறுதி.



# பான்யன் தொண்டு நிறுவனம் தயாரித்த நூல் வெளியீடு

சென்னை முகப்பேர் பகுதியில் அமைந்துள்ள பான்யன் தொண்டு நிறுவனம் ஆதரவற்ற மனநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி மறுவாழ்வு பெற்றிட தொண்டு செய்து வருகிறது. இந்தத் தொண்டு நிறுவனம் ஆற்றுகின்ற சேவையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 1995ஆம் ஆண்டு தாம் ஆட்சி பொறுப்பில் இருந்தபோது 6.5 கிரவுண்ட் நிலத்தை இலவசமாக இந்த நிறுவனத்திற்கு வழங்கினார்.

இந்த இடத்தில் 24,000 சதுர அடி புதிய கட்டடம் கட்டப்பட்டு, அக்கட்டடத்தில் இந்தத் தொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது. இதில் தற்போது 235 பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவ்வாறு மனநோயால் பாதிக்கப்பட்டு, பின் முழுவதுமாக குணமடைந்து மறுவாழ்வு பெற்றுள்ள பெண்களின் உண்மைக் கதைகளை 'Out of Mind, Out of Sight' என்னும் நூல் வடிவில் செல்வி. கேந்திரா அவர்கள் எழுதி உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் 19.11.2002 அன்று இந்த நூலை வெளியிட்டார். முதல் பிரதியை பான்யன் தொண்டு நிறுவனத்தின் பொருளாளர் திரு.எம்.ஏ. வெல்லோடி அவர்கள் பெற்றுக் கொண்டார். அப்போது, தமிழக முதலமைச்சர் அவர்கள் பான்யன் தொண்டு நிறுவனத்தின் பணி சிறக்க தமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், இந்த நூல் அனைத்து மக்களையும் சென்று அடைய வேண்டும் என்ற தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்து நூலாசிரியை செல்வி. கேந்திரா அவர்களுக்கு தம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். இந்தப் புத்தக வெளியீட்டின்போது, பான்யன் அமைப்பின் நிறுவனரும், அறங்காவலர்களுமான செல்வி. வந்தனா கோபிகுமார், செல்வி. வைஷ்ணவி ஜெயகுமார், பொருளாளர் திரு. எம்.ஏ. வெல்லோடி, புத்தகத்தின் ஆசிரியர் செல்வி. கேந்திரா ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனைக்கு நிதியுதவி

தேசிய அளவிலும், சர்வதேச அளவிலான டென்னிஸ் போட்டிகளிலும் பங்கேற்று, தமிழகத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கும் பெருமை சேர்த்து வரும் தமிழகத்தைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனை செல்வி. ருஷ்மி சக்கரவர்த்தி மகளிர் டென்னிஸ் வீராங்கனைகளில் உலகளவில் 373ஆவது இடத்திலும், இந்தியாவில் முதல் இடத்திலும் உள்ளார். இவர் வங்காள தேசம் டாக்காவில் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசியப் போட்டியில் மகளிர் டென்னிஸ் பிரிவில் பங்கேற்று இந்தியாவிற்கு இரண்டு வெள்ளி பதக்கங்களையும், பெங்களூரில் 2000–ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் பெடரேஷன் போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதலாவதாகவும், அதே ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற உலகத் தகுதிப் போட்டியில் இரட்டையர் பிரிவிலும், சண்டிகரில் 2001இல் நடைபெற்ற போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதலாவதாகவும், அல்ஜீரியாவில் 2002இல் நடைபெற்ற உலகத் தகுதி போட்டியில் ஒற்றையர் பிரிவிலும் வெற்றி பெற்றவர். மேலும், இவர் உலக அளவில் ஒற்றையர் பிரிவில் 373ஆவது இடத்திலும், இரட்டையர் பிரிவில் 342ஆவது இடத்திலும் உள்ளார்.

இவர் டென்னிஸ் போட்டிகளின் பெருமைமிக்க கிராண்ட் ஸ்லாம் (Grandslam) மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று உலகளவில் தனது தகுதியை மேம்படுத்தித் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தனக்கு நிதி உதவி செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கோரியிருந்தார். இவரது கோரிக்கையினை ஏற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவருக்கு ரூ. 4 இலட்சம் நிதி வழங்க ஆணையிட்டிருந்தார்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 19.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில், சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று தனது திறமையை வளர்த்துக் கொள்வதற்காக நிதி உதவியை எதிர்நோக்கி இருக்கும் செல்வி. ருஷ்மி சக்கரவர்த்திக்கு ரூ.4 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட டென்னிஸ் வீராங்கனை ருஷ்மி சக்கரவர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.






# மூதறிஞர் இராஜாஜி

## மேதைகள் போற்றும் மேதை

மூதறிஞர் இராஜாஜி தலைசிறந்த மேதை. அவரால் நமது பெருமை உயர்ந்தது என்று கூறினால் அது வெறும் புகழ்ச்சி இல்லை. ஒரே ஒரு தடவைதான் அவர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார். அப்படி இருந்தும் வெளிநாட்டு அறிஞர்களும் தலைவர்களும் இராஜாஜியை நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு வரும் வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் மூதறிஞர் இராஜாஜியைப் பார்க்காமல் செல்வதில்லை; அவரது அறிவாற்றலையும் ராஜ தந்திரத்தையும் போற்றாமல் இருப்பதில்லை.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் இராஜாஜியுடன் பல வெள்ளைக்காரர்கள் பழகி இருக்கிறார்கள். அவர்கள் இராஜாஜியின் விவேகத்தைக் கண்டு வியந்திருக்கிறார்கள்; நாட்டை ஆளும் தகுதி இந்தியருக்குக் கிடையாது என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள மறுத்திருக் கிறார்கள். ஆங்கிலேய அதிகாரிகள் இராஜாஜியின் நிருவாகத் திறமையை நேரே கண்டு பாராட்டி இருக்கிறார்கள்.



சென்னை மாநகருக்கு வரும் இந்தியத் தலைவர்கள் எவரும் இராஜாஜியைக் காணத் தவறுவதில்லை. நேருஜிக்கும் இராஜாஜிக்கும் கொள்கையில் பல வேறுபாடுகள் உண்டு. ஆயினும், நேருஜி சென்னை வந்தால் இராஜாஜியைப் பார்க்காமல் செல்லமாட்டார். பல விஷயங்களில் அவர், இராஜாஜியின் ஆலோச னையைக் கேட்டு அதன்படி நடந்திருக்கிறார். அந்த அளவுக்கு இராஜாஜியின் நுண்ணிய மதி அனைவரையும் கவர்ந்திருக்கிறது.

சமயோசிதமாகப் பேசுவதிலும் நடந்துகொள்வதிலும் இராஜாஜி வல்லவர். அதைக் குறித்து ஒரிரு நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன்.

அப்போது நாடு விடுதலை பெறவில்லை. சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த நேரம். சென்னைக் கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இராஜாஜியும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார். அப்போது யாரோ ஒருவன் மேடையை நோக்கிச் சில கற்களை வீசிவிட்டான்.

கூட்டத்தில் "சலசலப்பு" ஏற்பட்டது. சிலர் கூட்டத்தை விட்டு எழுந்து செல்லவும் முயன்றனர். இராஜாஜி அதைக் கண்டார்; உடனே, கூட்டத்தினரைப் பார்த்து, "அப்படியே அமைதியாக உட்காருங்கள். நம்மவருக்குக் குறிபார்த்து ஆளை அடிக்கத் தெரியாது. அப்படியிருந்தால் வெள்ளைக்காரன் என்றைக்கோ இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கொடுத்திருப்பான்" என்றார்.

அதைக் கேட்டுப் பலத்த சிரிப்பு ஒலி எழுந்தது. கூட்டத்தினர் அமைதி அடைந்தனர். கல் வீச்சு நின்று விட்டது. இராஜாஜி தொடர்ந்து பேசினார். அன்று அவருடைய சமயோசிதமான பேச்சைப் பாராட்டாதவரே இல்லை.

காந்திஜி தென்னாட்டுக்கு வந்தால் போதும், இராஜாஜிதான் காந்திஜியுடன் இருப்பார். காந்திஜி சுற்றுப்பயணம் செய்தால் அவருடன் இராஜாஜியும் செல்வார்; காந்திஜிக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்.

ஒருமுறை காந்திஜி, மைசூர் மகாராஜாவின் விருந்தாளியாகத் தங்கி இருந்தார். இராஜாஜியும் காந்திஜியுடன் இருந்தார். காந்திஜியைப் பார்க்க வேண்டும் என்று பலர் விரும்பினார்கள். அவர்களுக்குப் பேட்டி நேரத்தைக் குறித்துக் கொடுத்தவர் இராஜாஜியே!

(5)

பெரிய மனிதர் ஒருவர் காந்திஜியைப் பார்த்துப் பேச வேண்டும் என்று விரும்பினார்; இராஜாஜியைப் பார்த்துத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். மறுநாள் இரவு 8 மணியில் இருந்து 9 மணிவரை காந்திஜியைப் பேட்டி காணலாம் என்று இராஜாஜி கூறினார். வந்த பெரிய மனிதர் நன்றி தெரிவித்து விட்டுச் சென்றார்.

மறுநாள் காலையில் இருந்து காந்திஜிக்கு உடல் நலமில்லை. யாரும் அவரோடு பேசித் தொல்லை கொடுக்கக் கூடாது என்று டாக்டர் கூறிவிட்டார்.

காந்திஜியோ, திட்டம் போட்டபடி நடக்க வேண்டும் என்பவர். அதனால் யார் யார் காந்திஜியைப் பேட்டி கண்டு பேசுவதற்கு முன்கூட்டியே அனுமதி பெற்றார்களோ அவர்களை இராஜாஜி அனுமதித்தார். அவர்கள் எல்லோரும் காந்திஜியின் உடல் நலம் கருதிச் சுருக்கமாகப் பேசி விடைபெற்றுச் சென்றார்கள்.

முதல்நாள் வந்த பெரிய மனிதரும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தார். இரவு மணி 8 அடித்தது. இராஜாஜி அந்தப் பெரிய மனிதரைக் காந்திஜி இருந்த அறைக்குள் அனுப்பினார்.

சில நிமிடங்கள் கழிந்தன. அந்தப் பெரிய மனிதருக்கும் காந்திஜிக்கும் ஏதோ காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. பெரிய மனிதரோ கோபமாக உரத்த குரலில் பேசிக்கொண்டு இருந்தார்.

அதைக்கேட்டு அறைக்கு வெளியே இருந்த இராஜாஜிக்கும் மற்றவர்களுக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. பேட்டி நேரமோ அரை மணி. அதற்கு முன் அந்தப் பெரிய மனிதரை வெளியே அனுப்ப முடியாது. என்ன செய்வது என்று இர்ராஜாஜி ஒரு கணம் யோசித்தார்.


எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகள் திடீரென்று ஒரு நொடி நேரம் அணைந்து மறுபடி எரிந்தன. இராஜாஜி அறையினுள் சென்றார். காந்திஜியுடன் பேசிக்கொண்டிருந்த மனிதரிடம் சென்றார்; மணி ஒன்பது ஆகிவிட்டதால் பேட்டி முடிந்ததாகக் கூறினார். பெரிய மனிதர் வேறு வழியின்றிப் பேட்டியை முடித்துக்கொண்டு வெளியேறினார். இராஜாஜி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.

ஆனால், உண்மையில் அப்போது மணி என்ன தெரியுமா? எட்டேமுக்கால். "மின் விளக்குகள் ஏன் ஒரு நொடி நேரம் அணைந்து மறுபடி எரிந்தன? அதைக்கொண்டு எப்படி இராஜாஜி 9 மணி என்று கூறினார்? அதை ஒப்புக்கொண்டு ஏன் பெரிய மனிதர் வெளியேறினார்? என்று கேட்க நினைக்கிறீர்கள். இல்லையா?" சொல்லுகிறேன்.

அந்த நாளில் நகரங்களில் ஒரு வழக்கம் இருந்தது. இரவு மணி ஒன்பதைக் குறிக்க நகரம் முழுவதும் மின்விளக்குகளை ஒரு கணம் நிறுத்திப் பிறகு எரியவிடுவார்கள். இராஜாஜி அதை வைத்துத்தான் பெரிய மனிதரை விரட்டினார். இராஜாஜி அங்கிருந்த "எலக்ட்ரிக் மெயினை", ஒரு கணம் நிறுத்தி மறுபடியும் போட்டார். மின்விளக்குகள் அணைந்து எரிந்தன. இரவில் மின்விளக்குகள் நின்று மறுபடியும் எரிந்தால் மணி ஒன்பது அல்லவா? அதைச் சொல்லி அந்தப் பெரிய மனிதரை இராஜாஜி வெளியே அனுப்பினார்.

இதைக் கேட்க உங்களுக்குச் சிரிப்பு வருகிறது அல்லவா? அதைப் போலத்தான் அங்கு இருந்தவர்களும் சிரித்தார்கள். இராஜாஜியின் சமயோசிதச் செயலைப் பாராட்டினார்கள்.

ஞாபக சக்தியிலும் அவர் சிறந்து விளங்குகிறார். சேலத்தில் "காந்தி ஆசிரமம்" நடத்தி வந்தார், அல்லவா? அப்போது, நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் கூறட்டுமா? ஆசிரமத்தில் இருந்த தொண்டர்களில் ஒருவர் கருநாடக இசையை நன்கு கற்றவர். அந்த விஷயம் இராஜாஜிக்குத் தெரிய வந்தது. அவர் அந்தத் தொண்டரை அழைத்துவரச் சொல்லிப் பாடும்படி கேட்டுக்கொண்டார்.





தொண்டரோ, தமது பாட்டில் இராஜாஜி குற்றம் கண்டு விட்டால் என்ன செய்வது என்று பயந்தார். அதை அறிந்த இராஜாஜி, தொண்டரைப் பார்த்து, "நீ உன் இஷ்டம் போல் பாடலாம். எனக்கு ராகங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது" என்று கூறிச் சிரித்தார்.

அந்தத் தொண்டருக்கு அதைக் கேட்டுத் துணிவு பிறந்தது. காம்போதி, கல்யாணி, தோடி, மோகனம், சாவேரி, அடாணா ஆகிய ராகங்களில் அவர் பாடிக் காட்டினார். ஒவ்வொரு பாட்டையும் இராஜாஜி மிகவும் கவனத்தோடு கேட்டார்; ராகங்களின் பெயரை உடனுக்குடன் கேட்டுத் தெரிந்து கொண்டார். தொண்டர் ஒவ்வொரு ராகத்தையும் ஒரே ஒரு முறைதான் பாடினார். அதை இங்கே அவசியம் குறிப்பிட வேண்டும்.

அன்று மாலை ஆசிரமத்தில் வழக்கம் போல் பிரார்த்தனை நடந்தது. தொண்டர்களுடன் இராஜாஜியும் பிரார்த்தனையில் கலந்து கொண்டார்.

அப்போது, இராஜாஜி காலையில் பாடிய அதே தொண்டரை அழைத்தார். அன்று காலையில் பாடிய ராகங்களில் மறுபடியும் பாடச் சொன்னார். அதேபோல் தொண்டரும் பாடினார்.

ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் இராஜாஜி அந்தப் பாட்டின் ராகத்தைச் சரியாகக் கூறினார். இராஜாஜியின் ஞாபகசக்தி அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

இராஜாஜி அறிஞர். அது மட்டுமா? எதைக் கண்டும் அஞ்சாத வீரர். எதிர்ப்புகளைச் சமாளிப்பதில் அவரிடம் மற்றவர்கள் பாடம் கேட்க வேண்டும். அவருக்கு நிறைந்த அறிவைக் கொடுத்த இறைவன் அஞ்சாமையையும் கொடுத்திருக்கிறான். இராஜாஜியின் அஞ்சாமையை விளக்கப் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம். அவைகளில் இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் சொல்லுகிறேன்.

நாடு விடுதலை பெறாத நேரம். ஆகஸ்டு போராட்டம் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. "வெள்ளையனே வெளியேறு" என்ற கோஷம் நாடு முழுவதும் ஒலித்துக் கொண்டிருந்தது; இராஜாஜி அப்போது காங்கிரஸில் இருந்து விலகி இருந்தார். பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்துக்கொண்டிருந்தார்; ஒரு நாள் புனாவில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டு இருந்தார்.



அப்போது, ஒரு வெறியன் இளகிய 'தாரை'க் கொண்டு வந்து இராஜாஜியின் முகத்தில் வீசிவிட்டான். அதைக் கண்டு அங்கிருந்தவர்கள் பதறி எழுந்தார்கள். இராஜாஜி யாதொரு பதற்றமும் இல்லாமல் அங்கவஸ்திரத்தை எடுத்தார்; முகத்தில் வழிந்துகொண்டிருந்த 'தாரை'த் துடைத்தார்; தொடர்ந்து பேசினார்; தாம் சொல்ல நினைத்ததை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடித்தார். அத்தகைய அஞ்சாநெஞ்சர் இராஜாஜி.

சேலத்தில் ஆசிரமம் நடத்தி வந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. ஆசிரமத் தொண்டர்கள் அருகில் இருக்கும் கிராமங்களுக்குச் செல்வார்கள்; மதுவினால் ஏற்படும் தீமையை விளக்கிப் பிரச்சாரம் செய்வார்கள்.

அவர்கள் வழக்கம் போல் ஒரு கிராமத்திற்குச் சென்றார்கள்; மதுவினால் விளையும் தீமைகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ரங்கசாமி என்பவர் அங்கு வந்தார். அவர், தொண்டர்களைப் பார்த்து, "நீங்கள் இங்கே மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யக் கூடாது. மீறிச் செய்தால் ஒழுங்காகத் திரும்பிச் செல்ல முடியாது" என்று பயமுறுத்தினார்.

தொண்டர்கள் அச்சம் கொண்டார்கள்; பிரச்சாரம் செய்யாமல் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார்கள்; நடந்ததை இராஜாஜியிடம் கூறினார்கள்.

மறுநாள் அதே கிராமத்திற்கு இராஜாஜியும் கிளம்பினார். அவருடன் தொண்டர்களும் சென்றார்கள். அந்தக் கிராமத்தை அடைந்ததும் இராஜாஜி ஊர் மக்களை அழைத்துக் கூட்டம் கூட்டினார்; மதுவிலக்குப் பிரச்சாரத்தைத் தொடங்கினார். பேசும்போது, "இந்த ஊரில் ரங்கசாமி என்பவர் ஒருவர் இருக்கிறார். அவரை எனக்கு மிக நன்றாகத் தெரியும். மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வந்த தொண்டர்களை அவர் அச்சுறுத்தி விரட்டியிருக்கிறார். எதனால் அவர் அப்படிச் செய்தார் என்று புரியவில்லை. இன்று இங்கு வந்து அவர் ஏதாவது கேள்விகள் கேட்டால், நான் அவற்றிற்குத் தகுந்த பதில் தருகிறேன். ஆனால், எனக்குத் தெரியும், அவர் இங்கு வரமாட்டார்" என்று கூறினார்.

கூட்டம் முடியும் வரை ரங்கசாமி என்பவர் அந்தப் பக்கமே வரவில்லை. கூட்டம் இனிதே முடிந்தது. அதன் பிறகு இராஜாஜி தம் தொண்டர்களைப் பார்த்து, "யாரோ பயமுறுத்துகிறார் என்பதால் பயந்துவிடுவதா? பயமிருந்தால் இந்த வேலைக்கே தகுதி இல்லை. எதிர்ப்பவர்களுக்கு விளக்கம் கூறி, அவர்களை நம் பக்கம் இழுக்க வேண்டும்" என்று அறிவுரை கூறினார்.

அத்தகைய வீரர் நம் இராஜாஜி.

தலைவர் இராஜாஜி சிறந்த பேச்சாளர். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அவர் அழகாகப் பேசுவார். வடமொழியும் அவருக்குத் தெரியும். அவருடைய பேச்சு எளிமையாகவும் அதே சமயம் இனிமையாகவும் கருத்துப் பொதிந்ததாகவும் இருக்கும். சிறுசிறு கதைகள் மூலமும், உவமைகள் மூலமும் கருத்துகளை விளங்க வைப்பதில் அவர் திறமைசாலி. மேற்கோள்கள் காட்டுவதிலும் அவர் வல்லவர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் கிராமங்களுக்குச் சென்று எளிமையாகப் பேசி மக்களைக் கவர்ந்தவர், இராஜாஜி. அவர் பேசும் ஆங்கிலமோ வெள்ளையரும் வியக்கும் சிறப்பு வாய்ந்தது. பேசும் போதே நகைச்சுவையுடன் பேசி மக்களைச் சிரிக்க வைப்பார்; வாதத் திறமை மிக்கவர்.

இராஜாஜி நல்ல எழுத்தாளரும் ஆவார். தமிழில் அவர் ஏராளமான நூல்கள் எழுதி இருக்கிறார். வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன், கண்ணன் காட்டிய வழி, வள்ளுவர் வாசகம் போன்றவை அவர் எழுதிய நூல்கள். அவர் சிறந்த கதாசிரியரும் ஆவார். கள்குடியால் விளையும் கேடுகளை விளக்க அவர் எழுதிய கதைகள் இதயத்தைத் தொடும் தன்மை பெற்றவை. அவர் சிறையில் இருந்தபோது எழுதிய குறிப்புகளும் புத்தகங்களாக வெளி வந்திருக்கின்றன. திருமூலர் தவமொழி, முதல் மூவர், கைவிளக்கு, ஆத்ம சிந்தனை ஆகிய நூல்களும் அவரது படைப்புகளே. திருக்குறளை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். அந்த நூலுக்கு வெளி நாட்டில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்த நூலைப் படித்தால் இராஜாஜியின் ஆங்கிலப் புலமை நன்கு விளங்கும். அவர் எழுதிய தமிழ் நூல் ஒன்றுக்கு சாகித்ய அகாடெமி ஐயாயிரம் ரூபாய் பரிசளித்திருக்கிறது. அவ்வளவு சிறந்த எழுத்தாளர் அவர்.

இராஜாஜி, பகைவரும் பாராட்டும் பண்புகள் நிறைந்தவர்; பெருந்தன்மை மிக்கவர்; தமக்கு நல்லது என்று படுவதை அஞ்சாமல் வெளியிடும் குணம் உடையவர்; அன்பாகப் பழகும் தன்மை உடையவர்; பிறரை மதிக்கும் பெருங்குணம் அவரிடமுண்டு.


இராஜாஜி 'பாரத ரத்னா' பட்டம் பெற்றவர்; பாரே போற்றும் சிறப்புப் பெற்றவர். அத்தகைய அவர் அடக்கமும் எளிமையும் நிறைந்தவர். தம்மைப் பற்றி அவர் என்றும் பேசியதே இல்லை. தம்மைப் பற்றிப் பிறர் புகழ்வதையும் அவர் விரும்பமாட்டார்; எல்லாம் வல்ல இறைவனிடமும் நீங்காத பற்றுடையவர்; இறைவனின் பெருமைகளைப் பேசுவதில் மிகுந்த ஆர்வம் உடையவர்; என்றும் நாட்டு நலனில் அக்கறை மிக்கவர். அதனால் தான் தள்ளாத வயதிலும்கூட அவர் அரசியலில் ஈடுபட்டுப் பாடுபட்டு வந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டிய அந்த மாபெரும் தலைவரின் தேசப்பற்றையும் தியாகத்தையும் போற்றுவோம்.

*– தி.சு. கலியபெருமாள் எழுதிய 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' நூலிலிருந்து வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ்*

**முதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் டிசம்பர் திங்கள் 10. அதனை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.**





# அரும் பணியாற்றிவரும் அரசு பொது மருத்துவமனை

மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.8.2002 அன்று தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் சென்னை அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் MRI SCAN மையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.


அரசு பொது மருத்துவமனை நீண்ட பாரம்பரியமும், நிறைந்த வரலாற்றுப் பெருமையும் உடையது. இது சென்னையில் கிழக்கிந்திய கம்பெனியரால் முதலில் நோயுற்ற சிப்பாய்களுக்கு சிகிச்சை அளிக்க 1664ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் நாளில் ஒரு சிறு மருத்துவமனையாக துவக்கப்பட்டதாகும்.

இன்று, அது பிரம்மாண்டமான வளர்ச்சிப் பெற்று ஏழை எளிய மக்களின் நோய் தீர்க்க (அலோபதி) மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறது. 1829ஆம் ஆண்டிலேயே இந்த மருத்துவமனை கிழக்கிந்திய கம்பெனியரால் ஒரு மாதிரி மருத்துவமனையாக அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

இந்த மருத்துவ வளாகத்தை ஒட்டி 1835ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் அப்போதைய சென்னை மாகாண ஆளுநராக இருந்த மேதகு சர் பிரெடெரிக் ஆடம்ஸ் என்பவரால் ஒரு மருத்துவப் பள்ளி முறைப்படுத்தி துவக்கப்பட்டது.

இதுவே 1850ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி என்ற பெயரில் இயங்க ஆரம்பித்தது.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து மாபெரும் மருத்துவ சேவையாற்றி வரும் அரசு பொது மருத்துவமனை ஈ.வெ.ரா. பெரியார் சாலையில் சுமார் 47.5 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது.



விசில் இருந்த நுரையீரல் படம் - சி.டி.ஸ்கேன்

ஓராண்டுக்கு சுமார் 38 நோயாளிகளுக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

இம்மருத்துவமனையில் அதிதீவிர மருத்துவ சிகிச்சைப்பிரிவு, இருதய தீவிர சிகிச்சைப்பிரிவு, நடமாடும் விபத்து சிகிச்சைப்பிரிவு, மருந்தகம், நுண்கதிரியக்ககம், இரத்த வங்கி, ரத்த சோதனைக்கூடம் போன்ற பிரிவுகள் 24 மணிநேரமும் இயங்கி வருகின்றன.

இந்த மருத்துவமனையில் பிரதான கட்டடத்தில் 6 மாடிகள், 2 டவர் பிளாக்குகளில் 1800 படுக்கைகள் மற்றும் அதிநவீன வசதிகளுடன் சுமார் ரூ.104.47 கோடியில் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டு வருகின்றன.

இதைத் தவிர 7 மாடிகள் கொண்ட இருதய இயல் மற்றும் இருதய அறுவைச் சிகிச்சைத் துறை, இதே அளவில் நரம்பியல் துறை கட்டடம், விபத்து மற்றும் அறுவை சிகிச்சைத் துறை இங்கு இயங்கி வருகின்றன. இவைகளோடு, பென்னாட் கதிரியக்கப் பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு, பால்வினை நோய் மருத்துவப் பிரிவு, புதுப்பிக்கப்பட்ட புற நோயாளிப் பிரிவு ஆகியவையும் இயங்கி வருகின்றன. மேலும் நபர் ஒருவருக்கு ரூ.250 கட்டணத்தில் முழு உடல் பரிசோதனையும் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த மருத்துவமனையில், அலோபதி சம்பந்தப்பட்ட எல்லா பிரிவுகளும் உள்ளன. இங்கே, தற்போது மொத்தப் படுக்கைகள் 2,029. சராசரியாக ஒரு நாளில் 5,550 புற நோயாளிகளுக்கும் 152 உள்நோயாளிகளுக்கும், தினமும் புதிதாக பதிவாகும் உள்நோயாளிகளுக்கும் (In-patient admission) சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இருதய இரத்தக் குழாய் மாற்று வழி அறுவைச் சிகிச்சை, கொரானரி ஆஞ்சியோ பிளாஸ்டி முறை வசதிகள் உள்ளன.

இருதய இயல் சிகிச்சையைப் பொறுத்தவரை சுமார் 250 முதல் 300 நபர் வரை ஓராண்டுக்கு இருதய அறுவைச் சிகிச்சை பெறுகின்றனர்.

இவை தவிர சென்னை மருத்துவக் கல்லூரியில் நுண்ணுயிரியல் நோய் பிரிவில் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் துறையால் நடத்தப்படும் எய்ட்ஸ் நோய் கண்டுபிடிக்கும் மையம் இயங்குகிறது.

தமிழகம் மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் பெருமளவில் நோயாளிகள் இங்கே சிகிச்சை பெற விரும்பி வருகிறார்கள். இந்த பொது மருத்துவமனை முதல்வர் அவர்களின் பொறுப்பில், சென்னை நகரில் இயங்கும் 8 பெரிய அரசு மருத்துவமனைகள் உள்ளன.

இதில், மகளிர் மகப்பேறு, குழந்தைகள் மருத்துவமனை, மனநல மருத்துவமனை, கண் மருத்துவமனை, புனர்வாழ்வு மருத்துவமனை, நெஞ்சக நோய் மருத்துவமனை ஆகியவை அடங்கும்.

இவைகளைத் தவிர தலைமைச் செயலகம், அரசினர் தோட்டம், சேப்பாக்கம், உயர்நீதி மன்ற வளாகம், ராஜ் பவன் வளாகம் ஆகிய மருந்தகங்களின் செயல்பாடுகளும், இந்த அரசு பொது மருத்துவமனையின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன.

இந்த மருத்துவமனை ஒவ்வொரு கட்டத்திலும் அதிநவீன மயமாக்கப்பட்டு வருகிறது.





நுரையீரலில் மாட்டிக்கொண்ட விசில்

இம்மருத்துவமனையில், 7 அறுவை சிகிச்சை அரங்குகளும், ஒரு சிறு அறுவை சிகிச்சை அரங்கமும், அனைத்து நாள்களிலும் செயல்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு சுமார் 115 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

இந்த மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியும், நாளுக்கு நாள் நல்ல வளர்ச்சிப் பெற்று வருகிறது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை அவர்கள் அண்மையில் பல்வேறு தொடர் கல்வி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் ஆகியவற்றைத் தொடங்கிவைத்தார்.

இம்மருத்துவமனையின் முதல்வர் தொடங்கி கடைநிலை ஊழியர் வரை கடமை உணர்வோடும், கடுமையான உழைப்போடும் பாடுப்பட்டு வருவதால் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை அவர்களின் வழிகாட்டுதலோடு, ஆசியாவிலேயே இது ஒரு சிறந்த மருத்துவச் சிகிச்சை மையமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## சப்தமும் நின்றது சங்கடமும் தீர்ந்தது

*அரசு பொது மருத்துவமனையில் செய்யப்பட்ட ஒரு அறுவை சிகிச்சை பற்றிய ஒரு செய்தி :*

"ஒரு சிறுவன் பேசும்போதும், சிரிக்கும் போதும் வயிற்றிலிருந்து ஒரு விசில் சத்தம். இது எப்படி இருக்கும் இத்தோடு இடைவிடாத இருமல் வேறு. இந்த சத்தம், எப்படி வருகிறது, எங்கிருந்து வருகிறது என்று பெற்றோர்கள் தலையை பிய்த்துக் கொண்டார்கள்.

10 வருடங்களாக ஒவ்வொரு மருத்துவமனையாக அலையோ அலை என்று அலைந்ததுதான் மிச்சம். ஒலியும் நிற்கவில்லை, வலியும் போகவில்லை.

அந்த சிறுவனுக்கு இராயப்பேட்டை மருத்துவமனையில் நவீன கருவியான CT Scan எடுக்கப்பட்டு, அதன் மூலம் உடலுக்கு சம்பந்தமில்லாத ஒரு பொருள், சுவாசக்குழாயில் அடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட ஸ்கேனில் சளி கலந்திருந்ததால் அது என்ன பொருள் என்று சரியாகத் தெரியவில்லை. பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி பொருட்கள், சிடி ஸ்கேனிலும், சாதாரண எக்ஸ்ரேயிலும் தெரிய வாய்ப்பில்லை. இருந்தபோதிலும் அரசு பொது மருத்துவமனையில் சளியை அகற்றி விட்டு, மீண்டும் ஒரு சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டு அந்த சுவாசக்குழாயில் ஒரு பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவச் சோதனைகளும், ஆய்வுகளும் நடத்தி மருத்துவக் குழு மிகச் சிரமப்பட்டு அந்தப் பொருளை வெளிக்கொண்டு வந்தது.

உள்ளிருந்து எடுக்கப்பட்ட பொருள் என்ன தெரியுமா ? அந்த இளைஞர் 10 ஆண்டுகளுக்கு முன் எட்டுவயது சிறுவனாக இருந்தபோது சிரித்துக்கொண்டே ஒரு பிளாஸ்டிக் ஊதலை (விசிலை) ஊதியிருக்கிறான். அது அவனை அறியாமலேயே தொண்டைக் குழி வழியாகச் சென்று, அதன் விளைவுகளை செய்ய ஆரம்பித்துவிட்டது.

பொது மருத்துவமனையின் அதிநவீன சிடி ஸ்கேனும், மருத்துவமனையின் அதிநுட்பமான நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களும் இல்லாது போனால் அந்த இளைஞனின் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும். இந்த அரிய ஆராய்ச்சி மற்றும் சிகிச்சையை இருதய மார்பு நோயியியல் மருத்துவ பிரிவு டாக்டர் ஏ.எஸ். நடராஜன், டாக்டர் சுந்தரமூர்த்தி, டாக்டர் ராஜன் சந்தோஷம் ஆகியோர் இந்த சிகிச்சையை மேற்கொண்டார்கள். இவர்களின் பணி பாராட்டுதற்குரியது.

இந்தப் பொது மருத்துவமனையில் ரூ.6 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு இயங்கக்கூடிய, வளையக்கூடிய காற்றுக்குழாய் உள்நோக்கி கருவி (Fiberoptic Bronchoscopy) மூலம் விசில் சிரமமில்லாமல் எடுக்கப்பட்டது. இந்தக் கருவி இதுபோன்று ஏதேனும் ஒரு வெளி பொருளை விழுங்கிய நோயாளிகளின் தொண்டை முதல் சுவாசக் குழாய் மற்றும் நுரையீரல் வரை துல்லியமாக சோதனை போட்டுக் கண்டுபிடிக்கும். இந்தக் காற்றுக் குழாய் உள்நோக்கி மூலம், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

*- டி.ஆர்.ஜெயஸ்ரீ*
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*

# மருத்துவ உதவி

சென்னை சிட்லபாக்கத்தைச் சேர்ந்த திருமதி. பிரிசில்லா என்பவர் தனது 11 வயது மகளான குளோரியா அரியவிதமான கடுமையான தோல் வியாதியால் (Epidermalysis bullosa) பாதிக்கப்பட்டு நடக்கக்கூட இயலாத நிலையில் உள்ளதாகவும், மிகுந்த ஓவிய ஆர்வத்துடன் பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற தனது மகளைப் பராமரிக்க தன்னுடைய ஆசிரியப் பணியை ராஜினாமா செய்தும், தனது மகளைப் பராமரிக்க இயலாத அளவில் தனது குடும்ப சூழ்நிலை உள்ளது என்று குறிப்பிட்டு, நிதி உதவி கோரி அரசுக்கு மனு செய்திருந்தார். இவரது மனுவினைப் பரிசீலித்த ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் செல்வி. குளோரியா டேவிட்டை ஊனமுற்றவராகக் கருதலாம் என்றும் அவருக்கு ஒரே தவணையாக ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தார். திருமதி. பிரிசில்லாவின் கோரிக்கையையும், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் பரிந்துரையையும் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்க உத்தரவிட்டதோடு 'முக்தி' போன்ற அரசுச் சாரா நிறுவனங்கள் மூலம் செல்வி குளோரியா டேவிட்டின் ஓவியங்களைக் கண்காட்சியாக வைத்து மனுதாரர் கோரியுள்ள எஞ்சியத் தொகையை உருவாக்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அறிவுறுத்தியும் ஆணை பிறப்பித்தார்.

இதேபோன்று, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இரு கை, கால்கள் ஊனமுற்ற திரு. பொன்னுதுரை என்பவர் தனது மருத்துவச் சிகிச்சைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் நேரில் நிதி உதவி கோரியிருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை அப்பலோ மருத்துவ மனையின் நரம்பியல் துறை தலைமை மருத்துவர் இவரைத் தீவிரமாகப் பரிசோதித்து மனுதாரரின் ஊனத்தின் கடுமையை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்த இயலாது என்று தெரிவித்ததன் அடிப்படையில், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் எவ்விதமான மருத்துவ உதவிகளோ, அறுவை சிகிச்சையோ அளிக்க இயலாத ஏழை குடும்பத்தைச் சேர்ந்த திரு. பொன்னுதுரை அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப் பரிந்துரை செய்தார். இதனை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓராண்டு மருந்துச் செலவினத்திற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.17 ஆயிரம் வழங்கவும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சென்னையைச் சேர்ந்த திருமதி. தனலட்சுமி – சிவகுமார் ஆகியோரின் குழந்தைகளான நர்மதா, ஹேமமாலினி ஆகியோர் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் தலா ரூபாய் 15,200 வீதம் முதலீடு செய்யவும், சென்னையைச் சேர்ந்த காதுகேளாத திரு. செல்வகுமார் என்பவருக்கு சூரிய ஒளியில் இயங்கக்கூடிய பாட்டரியுடன் இணைந்த காதொலி கருவியையும் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்.



இதன்படி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து செல்வி குளோரியா டேவிட்டுக்கு ரூபாய் ஒரு இலட்சமும், திரு. பொன்னுதுரைக்கு ரூ.17 ஆயிரமும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நர்மதா, ஹேமமாலினி ஆகிய குழந்தை களின் பெயரில் ரூ.15,200 வீதமும், திரு. செல்வகுமாருக்கு காதொலி கருவியையும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்.

இந்த உதவிகளைப் பெற்று கொண்ட இவர்கள் அனைவரும் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

• • •



# கின்னஸ் சாதனையில் நீலகிரி மாவட்டம்

வரலாற்றுச் சிறப்புகளிலும் இயற்கை வளம், சுற்றுலாத் தலங்கள் என பல சிறப்பான துறைகளில் சாதனை புரிந்து தமிழகத்தில் குறிப்பிட்டஇடத்தை நீலகிரி மாவட்டம் பெற்றுள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

மேலும், பிளாஸ்டிக் ஒழிப்பு, கின்னஸ் சாதனையாக பல்லாயிரம் மரக்கன்றுகளை நட்டது, உடல் ஊனமுற்றவர்களின் முழு விபரங்கள் அடங்கிய தகவல் புத்தகம் வெளியீடு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், அரசு கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை எடுத்து செய்வது என நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் பணிகளும் சாதனைகளும் நீண்டுகொண்டே சென்று தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களுக்கு ஒரு முன்னோடி மாவட்டமாக விளங்குகிறது.

நீலகிரி மாவட்டம் குருத்துக்குளி கிராமத்தில் கடந்த ஜூன் மாதம் 24 மணி நேரத்தில் 42,182 மரக்கன்றுகளை நட்டு ஏற்கெனவே கனடா நாட்டில் நிகழ்த்திய கின்னஸ் சாதனையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சுப்ரியா சாஹு இ.ஆ.ப., அவர்கள் முறியடித்தார்.

மேலும் அவரது சாதனையில் ஒரு மைல்கல்லாக நீலகிரி மாவட்டத்தில் வாழும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு சிறப்பு வீடுகள் (Barrier Free Houses) கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களால் கடந்த 13.9.2002 அன்று கக்குச்சி கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அ. மில்லர் அவர்கள் தலைமையேற்று சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்கும் அனைத்துத் திட்டங்களையும் செம்மையாக செயல்படுத்திடும் நீலகிரி மாவட்ட நிர்வாகம், திட்டங்களின் பயன்கள் அனைத்து தரப்பினருக்கும் குறிப்பாக ஊனமுற்றோர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதில் முனைப்புடன் செயல்படும் விதமாக முதலில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தற்பொழுது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்து தரப்பினரின் கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டுள்ளது. இதில் உடல் ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை மனவளர்ச்சி குன்றியவர்கள் எவ்வளவு பேர் உள்ளனர் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் அனைத்து ஊனமுற்றவர்களுக்கும் அரசின் உதவிகள் சென்றடையும். .

மேலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றவர்களுக்கு அவர்களது உரிமைகளைப் பெற்று வழங்குவது, எப்படி செயல்படவேண்டும் என்று அரசு அலுவலர்களுக்கு கையேடு ஒன்று தயார் செய்து வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள் நகராட்சி ஆணையாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் ஆகியோர் ஊனமுற்றோர் நலனுக்காக எவ்வகையில் பணியாற்றலாம் என்றும் இக்கையேட்டில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உடல் ஊனமுற்றவர் களுக்கென்று சிறப்பு வீடுகள் (Barrier Free Houses) மூன்று இடங்களில் கட்டப்பட்டுள்ளது. உதகை பகுதியில் கக்குச்சி கிராமத்தில் ரூ.49.28 இலட்சம் செலவில் 72 வீடுகளும், கோத்தகிரி பகுதியில் கெரடாமட்டத்தில் ரூ.52.43 இலட்சம் செலவில் 93 வீடுகளும், கடநாடு கிராமத்தில் ரூ.63.16 இலட்சம் செலவில் 128 வீடுகளும் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கே முன் உதாரணமாக இந்த வீடுகள் திகழ்கின்றன. இச்சிறப்பு குடியிருப்புகள் சிறந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மிகக் குறைந்த செலவில் கட்டப்பட்டுள்ளன.

ஊனமுற்றவர்கள் எந்த வகையிலும் சிரமம் இல்லாமல் வாழ்வதற்கு ஏற்றவாறு இவ்வீடுகள் வடிவமைக்கப் பட்டுள்ளன. ஊனமுற்றோர் வீட்டிற்குள் தடையின்றி செல்வதற்காக வாசலில் படிக்கட்டுகள் கிடையாது. அதற்கு பதிலாக RAMP போடப்பட்டுள்ளது. சக்கர நாற்காலியுடன் உள்ளே தடையின்றி செல்ல நுழைவு வாயில் அகலமாகவும், கதவை 180 டிகிரிக்கு திறக்கும்படியும் அமைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் உள்ளே கழிப்பறையில் கைப்பிடி கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. வீட்டிற்குள் ஊனமுற்றோர் வழுக்கி விழாமல் இருப்பதற்காக தரை அதிகளவு பாலிஷ் செய்யப்படாமலும், சுவற்றின் முனைகள் கூர்மையில்லாமலும் வடிவமைத்து கட்டப்பட்டுள்ளன. இச்சிறப்பு குடியிருப்புகள் ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்களான IAY, JGSY மற்றும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து கட்டப்பட்டுள்ளன.

இச்சிறப்பு குடியிருப்புகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு சிகிச்சை மற்றும் பயிற்சி அளிப்பதற்காக ஒரு பிஸியோதெரபி சென்டரும், குழந்தைகள் படிப்பதற்காக பால்வாடி மையங்கள், நர்சரி பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்றோர் நலனுக்காக பணியாற்றும் வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து இச்சிறப்பு வீடுகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

இவ்வீடுகளை கட்டுவதற்கு சுட்ட செங்கற்களுக்கு பதில் சிவப்பு மணலில் சிமெண்ட் கலக்கப்பட்ட மண்செங்கல் (MUD BLOCKS) பயன்படுத்தப் பட்டுள்ளது. இக்கற்கள் செங்கற்களைவிட தண்ணீர் உறிஞ்சும் தன்மை மிக குறைவாக உள்ளதால் தண்ணீர் மிச்சப்பட்டதோடு செங்கற்களை சமவெளி பகுதியிலிருந்து கொண்டுவரும் போக்குவரத்து செலவும் தவிர்க்கப் பட்டுள்ளது.

ஹாலோ பிளாக்ஸ் மற்றும் FILLER SLABS கொண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளதால் கட்டுமான செலவு குறைந்ததோடு மட்டுமல்லாமல் வீடுகளுக்கு அழகையும், பொலிவையும் தந்துள்ளது. பெர்ரோ சிமெண்ட் பூச்சுக்கு வேலையில்லாமல் போகிறது. இதனால் 20 சதவீத செலவினம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகை தொழில்நுட்பம் வீட்டை கோடை காலங்களில் குளுமையாகவும், குளிர்காலங்களில் ஓரளவு வெப்பமாகவும் வைத்திருக்கும்.

இச்சிறப்பு வீடுகளை நீலகிரி மாவட்டத்தின் கட்டட மையம் வெகு சிறப்பாகவும், சிக்கனமாகவும் கட்டிக் கொடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 42,182 புதிய மரக் கன்றுகள் நடப்பட்டு புதிய கின்னஸ் சாதனை படைக்கப்பட்டு வெற்றிப்பாதையின் அடுத்த மைல்கல்லாக நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பைகள், தட்டுகள், டம்ளர்கள் விற்பனை உபயோகம் தடை செய்யப்பட்டு மாவட்டம் தூய்மை பெற்று வருகிறது.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட நிர்வாகம் வெற்றிபாதையில் இப்படி பல மைல்கற்களை கடந்து செல்வது தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்குவோம்' என்ற குறிக்கோளுக்கு வலு சேர்க்கிறது என்பதில் ஐயமில்லை.

*– பி. முத்தையா,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நீலகிரி மாவட்டம்.*

• • •

## கடினமான உழைப்பு புகழை தேடித் தரும்

**தே**க்கரே (Thackeray) என்ற எழுத்தாளருக்கு இலக்கியத்திற்கான மிகப் பெரிய விருது வழங்கப்பட்டது.

பிரபு நார்த்கிளிஃப் (Lord Northcliffe) என்ற பணக்காரர் தேக்கரேவை கௌரவிப்பதற்காக மிகப் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

விருந்து சாப்பாட்டின்போது,நார்த்கிளிஃப் பிற்கு பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண் அவரிடம்,. "தேக்கரேவிற்கு கிடைத்த அதிர்ஷ்டத்தை பார்த்தீர்களா? நேற்று இரவு வரையில் அவரைப்பற்றி யாருக்கும் தெரியாமலிருந்தது. இன்று காலை உதயமாகும் போது, அவருடைய பெயர் உலகப் பெயராக மாறிவிட்டது", என்று கூறினாள்.

அதற்கு நார்த்கிளிஃப், "யங் லேடி! (Young Lady) அவருக்கு உலகப் புகழைத் தேடித்தந்த அந்த காலை விடிவதற்கு முன், அவர் சோம்பேறித்தனமாக ஒன்றும் காலத்தை கழித்து வரவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளாக, அவர் ஒவ்வொரு தினமும் குறைந்தது எட்டுமணி நேரம் எழுதி வந்திருக்கிறார். அவருடைய கடினமான உழைப்புதான் அவருக்கு அந்த புகழைத் தேடித் தந்திருக்கிறது" என்று கூறினார்.

• • •



# உங்கட்டி ஏரியில் சுற்றுலா சூழியல் மையம்

**நீ**ர்வளம் குறைந்து, நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் நாளுக்குநாள், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் விதமாக தமிழ்நாடு அரசு, மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, அதனை ஒரு பெரும் இயக்கமாக செயல்படுத்தி வருகிறது.

இந்த மழைநீர் சேகரிப்பின் மூலம், வறண்ட நிலங்கள் பசுமையடைந்து, நிலத்தடி நீர் உயர்ந்து, உல்லாசப்பயணிகள் பொழுதுபோக்கும் சிறந்த சுற்றுலா மையமாகவும் ஆகியுள்ளது ஓர் கிராமம் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

தருமபுரி மாவட்டம், ஒசூர் வனச்சரகத்தைச் சார்ந்தது உங்கட்டி கிராமம். சிறு மலைக்குன்றுகளால் சூழப்பட்டு இயற்கை எழிலோடு விளங்கும் இக்கிராமத்து மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி உள்ளனர். இக்கிராமத்தில் காடுவளம் குன்றியதாலும், மழைநீர் சேமிக்கப்படாததாலும், மழை மற்றும் நீர் தட்டுப்பாட்டின் காரணமாக மரங்கள் அழிந்து விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது.

இந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்திரவுப்படி வனத்துறையின் பெரு முயற்சியில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த 'உங்கட்டி' கிராமம் தேர்வு செய்யப்பட்டு, வனவளம் மற்றும் நீர்வளம் மேம்பாட்டுப் பணிகளின் மூலம் ஒரு முன்மாதிரி திட்ட கிராமமாக மாற்றும் வகையில் செயல்படுத்தப்பட்டது.


முதலாவதாக, பெய்கின்ற மழைநீர் காட்டாறாக, ஓடி எவ்வித பயனுமற்று சென்று கொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்தி ரூ.8.35 இலட்சம் செலவில் தடுப்பணை ஒன்று கட்டப்பட்டது. இதன்மூலம், வீணாகிச் சென்று கொண்டிருந்த மழைநீர் 43 இலட்சம் கனஅடி அளவிற்கு 5 ஏக்கர் பரப்பளவில் சேமிக்கப்பட்டது. 20 அடி ஆழம் கொண்ட இந்த ஏரியின் நீரானது வறட்சி காலத்திலும் வற்றாமல் பாதுகாக்கப்பட்டது. இந்த கொள்ளளவையும் மிஞ்சி வருகின்ற நீரானது, முறையே [illegible] பயன்படுத்தும் வகையில் திருப்பி விடப்பட்டது. இதன் மூலம் இந்த உங்கட்டி கிராமத்தைச் சுற்றியுள்ள புன்னாகரம், பீமனப்பள்ளி, கொத்துக்கொட்டாய், தோரிப்பள்ளி, திகில்றப்பள்ளி உள்ளிட்ட பல கிராமங்களில் உள்ள 50 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெற்றது. மேலும் சுற்றியுள்ள கிராமங்களின் நிலத்தடி நீரும் உயர்ந்ததால், குடிநீர்ப் பிரச்சினை அறவே தீர்ந்துபோயிற்று.

அடுத்ததாக, இந்த ஏரியைச் சுற்றியிருந்த 300 ஹெக்டேர் பரப்பிலான தரம் இழந்த காடுகளில், பயன் தரும் மரங்களான நெல்லி, புங்கன், வேம்பு உட்பட ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்தப் பணியில் உங்கட்டி கிராமத்து மக்களையும் பயன்படுத்தி, அவர்களிடையே குழுக்கள் ஏற்படுத்தி அவர்களது ஒத்துழைப்புடன் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, தற்சமயம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தோட்ட உற்பத்திக்காக ரூ.11 இலட்சமும், நீர்வளம் மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிக்கு ரூ.10 இலட்சமும் செலவிடப்பட்டது.

மக்கள் ஒத்துழைப்புடன் இந்தப்பணிகள் சிறப்பாகச் செய்துவரும் நிலையில், இக்கிராம மக்களின் முன்னேற்றமும் கருத்தில் கொள்ளப்பட்டு, அவர்களது மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. இக்கிராமத்திற்கு அடிப்படைவசதிகள் செய்து கொடுத்தல், மக்களுக்கு தொழில் உதவிகள் செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் ரூ.5 இலட்சம் செலவில் செய்து கொடுக்கப்பட்டது. மேலும் இங்குள்ள 2 மகளிர் மன்றங்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டு, அத்தொகையினை சுழற்சி முறையில் பயன்படுத்தி இங்குள்ள மகளிர் மன்றங்கள் பயன்பெற்று வருகின்றன. இவ்வாறு இத்திட்டத்தில் மக்களை ஒருங்கிணைத்து அவர்களது மேம்பாட்டிற்கு பல்வேறு பணிகளை மாவட்ட வன அலுவலர் டாக்டர்.பால்ராஜ் மேற்கொண்டதன் பயனாக மக்களின் ஈடுபாடு மேலும் அதிகரித்தது.

இப்போது, இந்தக் கிராமமே நீர்வளத்துடனும், வளமான விவசாயத்துடனும், பசுமை நிறைந்த காடுகளுடனும் இயற்கை எழிலோடு காட்சியளிக்க ஆரம்பித்துவிட்டது. இந்நிலையில், எக்காலத்திலும் வற்றாத வகையில் உருவான உங்கட்டி ஏரியையும், அதன் பசுமை நிறைந்த சுற்றுப்புறத்தையும் பயன்படுத்தி, சுற்றுலா மையமாக்க [illegible]த்துறையில் திட்டமிடப்பட்டது. இதனை நி[illegible]டும் வகையில் சுற்றுலாப்பயணிகள் வந்து

223776.
சென்னை-600 008



துணை இயக்குநர் (பொருட்காட்சி) திரு. எம். கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். உதவி இயக்குநர், தமிழ்நாடு இல்லம், திரு. தில்லை கோவிந்தன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் குமாரி ஹேமா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் கிராமிய கலையின் சிறப்பை விளக்கும் வகையில் மதுரை சோமசுந்தரம் குழுவினரின் கரகாட்ட நிகழ்ச்சியும் நடைபெற்றது. அரங்கத்தின் வெளியே ஒவ்வொரு நாளும் மாலையில் மதுரை சோமசுந்தரம் குழுவினரின் கரகாட்டம், பொய்கால் குதிரை ஆட்டமும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிகளை ஏராளமான வெளிநாட்டவரும், வடமாநிலத்தை சேர்ந்தவர்களும் ஆவலுடன் வந்து கண்டு களித்து பாராட்டினார்கள்.

செய்தித்துறையின் சார்பில் தமிழக முதல்வர் அவர்கள் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொழில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் பூங்கா தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் குறித்த புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும், சுற்றுலாத்துறை, சிப்காட், டிட்கோ, மெப்ஸ் (MEPZ), டாமின், சிட்கோ, பூம்புகார், மெட்ரோ வாட்டர், கோ–ஆப்டெக்ஸ், வேளாண்மைத்துறை, தொழில்துறை, வேளாண் விற்பனைத் துறை, சென்னைத் துறைமுக பொறுப்பு கழகம், ஆவின், இந்தியன் வங்கி போன்ற துறைகள் தங்கள் திட்டங்கள் குறித்தும், வாய்ப்புகள் குறித்தும் புகைப்படங்கள் மற்றும் மாதிரி வடிவங்களை அமைத்திருந்தனர். ஈரோடெக்ஸ், சென்டெக்ஸ் போன்றவைகள் விற்பனை மையங்கள் அமைத்திருந்தன.




17.11.2002 அன்று தமிழ்நாடு நாள் விழா பிரகதி மைதானில் உள்ள லால் சவுக் மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்.

செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரங்கத்திற்கு வருகை தந்து அரங்கத்தின் உள்ளே பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மாதிரி வடிவங்கள், புகைப்படங்களை பார்வையிட்டு பாராட்டினார்.



# சென்னையில் மழை நிவாரணப் பணிகள்

□ முதலமைச்சர் ஆணை

வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்ததை அடுத்து, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், மிகவும் பாதிப்பு ஏற்பட்டது. அப்பகுதியில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

சமீப காலமாக சென்னையில் பெய்து வருகின்ற தொடர் மழை காரணமாக சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, மழை நீர் வடிகால் குழாய்களில் (Storm Water Drains) அடைப்பு, கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகள் தூர்ந்து போதல், மற்றும் மழை நீர் வடிகால் குழாய்களில் கழிவு நீர்க் கலப்பு, இதனால் ஏற்படுகின்ற சுகாதாரக் கேடுகள் ஆகியவற்றை விரைவில் களைவதற்காக உரிய செயல்திட்டங்கள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள், மாநகராட்சி மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தினார். மேலும், உள்ளாட்சித் துறை அமைச்சர் சென்னை நகரில் மழை நீரினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் அளித்த அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

இதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித் துறை, குடிநீர் வாரியம், பொதுப்பணித்துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் காவல் துறை ஆகிய பல்வேறு துறைகள் சென்னை மாநகரின் அடிப்படை வசதிகளை சீர் செய்வதற்கு என்னென்ன பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான செயல் திட்டத்தினை வகுத்துத் தந்து, இவற்றை உடன் செயல்படுத்த அனைத்து அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

1. சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை, சென்னை மாநகரில் உள்ள அனைத்து போக்குவரத்து சாலைகளையும் ஆய்வு செய்து, குழிகள், பள்ளங்கள் ஆகியவற்றை உடனே சமன் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளங்களை நிரப்புவதற்காக இடக்கூடிய கலவையில் சிமெண்ட் சேர்த்து சேதங்களைச் செப்பனிட வேண்டும்.

2. சென்னை மாநகரில் உள்ள அனைத்து சாலைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகளுக்கும் (Maintenance works), புதிய பணிகளுக்கும் (Original Works) ஒப்பந்தப் புள்ளிகள் வழங்கும் பணி 12.11.2002க்குள் நிறைவு செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகளை உடனேயும், புதிய பணிகளை பருவ மழை நின்றவுடனும் நவம்பர் மாத இறுதியிலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. கண்ணாடி நுண் இழை வடம் (Optical Fibre Cable) இடுவதற்காக சாலைகளின் இருமருங்கிலும் தனியார் உள்ளிட்ட தொலைத் தொடர்பு நிறுவனங்களால் தோண்டப்பட்டுள்ள பள்ளங்களை மீண்டும் சரி செய்து நிரப்புவதில் பல குறைபாடுகள் இருப்பதாலும், தொலைத் தொடர்பு நிறுவனங்கள் இவற்றை குறிப்பிட்ட காலத்தில் சீரமைப்பதில்லை என்பதாலும், சாலைகளுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, சென்னை மாநகராட்சி சாலை சீரமைக்கும் பணியை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிப்பதற்கு தொலைத் தொடர்பு நிறுவனங்களை வலியுறுத்தி கண்டிப்புடன் கண்காணிக்க வேண்டும்.

4. சாலைகளின் சந்திப்புகளில் (Intersection) ஏற்படுகின்ற பாதிப்புகள் போக்குவரத்திற்கு மிகுந்த இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன என்பதால், இத்தகைய சந்திப்புகளில் பராமரிப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில், 7.11.2002 முதல் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியும், சென்னை மாநகர காவல் துறையும் இணைந்து செயல்பட்டு, சென்னை மாநகரின் எந்தப் பகுதியிலும் சாலை பாதிப்புகளினால் போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏற்படாத வண்ணம் இப்பணியை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

5. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் நெடுஞ்சாலைத் துறையினால் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பராமரிக்கப்படுகின்ற 80 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், சென்னை மாநகராட்சி நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கியுள்ள 5 கோடி ரூபாய் நிதியினை வைத்து சாலைப் பராமரிப்புப் பணிகள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது மட்டுமின்றி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TUFIDCO) வழங்க உள்ள 29 கோடி ரூபாய் நிதியினை வைத்து மாநகராட்சிப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துச் சாலைகளிலும் நிரந்தர மேம்பாட்டுப் பணிகள் 1.12.2002 முதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. பெரும்பாலும், சென்னை மாநகரில் உள்ள போக்குவரத்து சாலைகள் மழை நீர் தேங்கி நிற்பதனால் பாதிப்புக்குள்ளாகின்றன. இருப்பினும், ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர ஏனைய இடங்களில் மழை நீர் தேங்கி நிற்பது அகற்றப்பட்டுள்ளது. இவ்வாறு மழை நீர் தேங்குவதற்கு MRTS பறக்கும் இரயில் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுவதால் பக்கிங்ஹாம் கால்வாயில் ஏற்பட்டுள்ள அடைப்புகளும் ஒரு முக்கிய காரணமாகும். குறிப்பாக, கடற்கரை முதல் திருவல்லிக்கேணி வரை தற்போது நடைபெற்றுள்ள MRTS பறக்கும் இரயில் பணிகளால் பக்கிங்ஹாம் கால்வாயில் சேர்க்கப்பட்டுள்ள இடிபாடுகள் கலந்த குப்பைகளை (Debris) உடனடியாக அகற்ற தென்னக இரயில்வே துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், திருவல்லிக்கேணி முதல் வேளச்சேரி வரை உள்ள MRTS கட்டுமானப் பணிகளினாலும், பக்கிங்ஹாம் கால்வாய்க்கு அடைப்புகள் வாயிலாக பாதிப்பு ஏற்படாத வண்ணம் தென்னக இரயில்வே நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசின் தலைமைச் செயலாளர், தென்னக இரயில்வேயின் பொது மேலாளருடன் பேசி இப்பணியை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எந்தெந்தப் பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்பது அதிகமாக உள்ளது என்பதைக் கணக்கெடுத்து அத்தகைய இடங்களில் தேங்கி நிற்கும் மழை நீரை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, மழை நீர் அகற்றும் கால்வாய்களில் உள்ள அடைப்புகளை நீக்கி அவற்றைச் சரி செய்து, அவற்றின் வாயிலாக தேங்கி நிற்கும் மழை நீர் விரைந்து செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். TUFIDCO நிறுவனத்தின் வாயிலாக 13 கோடி ரூபாய் செலவில் மழை நீர் அகற்றும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

7. சில குறிப்பிட்ட சாலைகளில் போக்குவரத்து வாகனங்கள் செல்வதற்காக விடப்பட்டிருக்கின்ற பாதை வழி (Carriage way) நல்ல நிலையில் இல்லை என்பதாலும், ஆக்கிரமிப்புகளினாலும், போக்குவரத்து நெரிசல்கள் உண்டாகின்றன. இவ்வாறு போக்குவரத்திற்கு இடைஞ்சல்களை உருவாக்குகின்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக செயல்திட்டம் ஒன்றை வகுத்து, எந்தெந்த சாலைகளில் இத்தகைய இடையூறுகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து, அவற்றை அகற்ற உடன் நடவடிக்கை எடுத்து, அதனை வாராந்திர அடிப்படையில் முதலமைச்சர் ஆய்வு செய்யும் போது தெரிவிக்க வேண்டும். மேலும், சாலையில் விடப்படுகின்ற வாகனங்கள் சீரான போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வண்ணம் நிறுத்தப்படுகின்றனவா என்பதை சென்னை மாநகரக் காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்.

8. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்துக் கால்நடைகளையும், பன்றிகளையும் உடனே மாநகராட்சி எல்லைக்கு அப்பால் அனுப்பி வைத்து அவ்வற்றின் மூலம் சுகாதாரக் கேடுகள் நிகழாமல் இருக்க தக்க நடவடிக்கையை சென்னை மாநகராட்சி எடுக்க வேண்டும். தெரு நாய்கள் அனைத்தையும் உடனே பிடித்து அகற்ற வேண்டும். மாநகரக் காவல் துறை சென்னை மாநகராட்சிக்கு இப்பணியில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

9. சென்னை மாநகராட்சிப் பகுதிகள் முழுவதிலும் எதிர்காலத்தில் மழை நீர் தேங்காமல் இருக்க, நீண்டக்கால திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்த சென்னை மாநகராட்சி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.



மேற்குறிப்பிட்ட அனைத்து அடிப்படை வசதிகள் மேம்பாட்டுப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து ஒருங்கே செயல்பட வேண்டும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார். மேலும், இப்பணிகள் சரிவர நடக்கின்றனவா என்பதை முதலமைச்சர் அவர்கள் வாரந்தோறும் ஆய்வு செய்ய உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## மழையினால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளை முதலமைச்சர் பார்வையிட்டார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அண்மையில் சென்னை மாநகரத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலும் தொடர்ந்து பெய்த கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 11.11.2002 அன்று நேரில் சென்று, வட சென்னைப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, அங்கு நடைபெற வேண்டிய நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள ஆணையிட்டார். அவர்களது ஆணைக்கிணங்க நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையிலும் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும், வெள்ளத்தால் சூழப்பட்ட குடியிருப்புப் பகுதிகளையும் மற்றும் தாழ்வான இடங்களையும் முழுமையாகக் கண்டறிவதற்காக 12.11.2002 அன்று ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து 2 மணி நேரம் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் திரு. பன்னீர்செல்வம், நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன், சட்டத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் மற்றும் தலைமைச் செயலாளர், திரு. சுகவனேஷ்வர், நிதித்துறை செயலர் மற்றும் வளர்ச்சித் துறை ஆணையர் திரு. என். நாராயணன், நெடுஞ்சாலைத் துறை செயலர், திரு. ஏ. நாகராஜன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை செயலர், திருமதி சாந்தா ஷீலா நாயர், பொதுப்பணித்துறை செயலர், திரு. எம். குற்றாலிங்கம், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. எம். கலைவாணன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் – செயலர் திரு. பி.ஆர். சம்பத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜாராமன் ஆகியோர் பங்கேற்றனர்.

எழில் நகர் மற்றும் சத்தியமூர்த்தி நகர் (இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரிபொருள் நிரப்பு நிலையம்), தண்டையார்பேட்டை, எண்ணூர், திருவொற்றியூர், மாதவரம், வியாசர்பாடி (ஜீவா மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்கள்), புளியந்தோப்பு, பட்டாளம் மற்றும் ஓட்டேரி (பின்னி மில் மற்றும் பேசின் பாலம் மின் நிலையம்), வில்லிவாக்கம் சிட்கோநகர் (வில்லிவாக்கம் இரயில் நிலையம்), அம்பத்தூர், பெரவள்ளூர் (ரெட்டேரி), விருகம்பாக்கம் (வடபழனி பேருந்து நிலையம் தாண்டி), சாலிகிராமம் (100 அடி சாலை, வடபழனி கோவில், SAF விளையாட்டு கிராமத்தின் (SAF Games Village) தென் பகுதி, நெசப்பாக்கம், கே.கே. நகர் மேற்கு (ஆர்க்காடு சாலை மற்றும் கத்திப்பாரா சந்திப்புக்கு இடைப்பட்ட பகுதி), ஜி.என். செட்டி ரோடு (தியாகராயநகர் – அண்ணா சாலை அருகே), கோட்டூர்புரம் (அண்ணா பல்கலைக்கழகம் பின்புறம்), சைதாப்பேட்டை (மறைமலை அடிகள் பாலம்), இந்திரா நகர் பெரு நகர இரயில் போக்குவரத்துப் பாதை (திரைப்பட நகரம் அருகில்), வேளச்சேரி (தரமணிக்கும் நகர எல்லைக்கும் இடையில் உள்ள பகுதி), பள்ளிக்கரணை, துரைப்பாக்கம், மடிப்பாக்கம், கோயிலாம்பாக்கம், கீழ்க்கட்டளை, மேடவாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், கேளம்பாக்கம், பெருங்குடி, சிட்லபாக்கம் ஆகிய சென்னை மாநகரைச் சார்ந்த பகுதிகளையும் மற்றும் புற நகர்ப் பகுதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். அப்போது, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள எண்ணூர் கடற்கரைப் பகுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்தப் புறநகர்ப் பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், நிரந்தரத் தீர்வு காண உரிய திட்டங்களை வகுக்கவும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டார்கள். மேலும் திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அம்பத்தூர், திருவொற்றியூர், மணலி போன்ற மழையினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் விரைவில் சீர் செய்ய முதலமைச்சர் அவர்கள் தக்க உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆட்சேபகரமான புறம்போக்கு பகுதிகளான நீர்ப்பிடிப்புகள், நீர்நிலைகள் போன்றவைகளில் இருந்த ஆக்கிரமிப்புகள் வருவாய்த் துறை மூலம் 2000ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.168 மூலம் வரன்முறைப்படுத்தப் பட்டன. அதையொட்டி தமிழ்நாடு எங்கும் பல இடங்களில் வடிகால் நீர்வழிப் பகுதிகளும் தொடர்ந்து மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றன. குறிப்பாக, சென்னையை அடுத்துள்ள வேளச்சேரிப் பகுதியில் ஏரிப்

பகுதிகளில் வீடு கட்ட அனுமதிகள் உள்ள வழங்கப்பட்டு இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாக்கப்பட்டது. இதன் விளைவாகவே, தற்போதைய பெரும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் வேளச்சேரிப் பகுதிகளில் இன்னும் வடியவில்லை. இப்பகுதியினை ஹெலிகாப்டரில் இருந்து பார்வையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏறத்தாழ ரூ.7 கோடி மதிப்பில் வேளச்சேரி ஏரியிலிருந்து பள்ளிக்கரணைக்குச் செல்லும் வேளச்சேரி–தாம்பரம் புறவழிச் சாலையின் வலப்புறம் வேளச்சேரி ஏரியையும், பள்ளிக்கரணை எரியையும் இணைக்கும் கால்வாயை அகலப்படுத்தி அதன்மூலம் வேளச்சேரி, விஜயநகரம், ராம்நகர், பாலாஜி நகர் மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் ஏற்படும் வெள்ளத்தினை விரைவில் பள்ளிக்கரணை ஏரியில் வடித்து, பக்கிங்ஹாம் கால்வாய் மூலம் முட்டுக்காடு அருகே கடலில் சேர்ப்பதற்கான திட்டத்தை உடன் செயல்படுத்த ஆணையிட்டார். இத்துடன் மேலும் இத்தகைய பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க பள்ளிக்கரணை சதுப்புப் பகுதிகள் (Swamp) அனைத்தையும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக (Reserve Forest) அறிவிக்கவும், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மேலும், சென்னையை அடுத்துள்ள நகராட்சிப் பகுதிகளான அம்பத்தூர், திருவொற்றியூர், மாதவரம் மற்றும் பேரூராட்சிப் பகுதியான வளசரவாக்கம் ஆகியவற்றில் மழையினால் தேங்கியுள்ள தண்ணீரையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இப்பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீர் மற்றும் கழிவு நீரை உடனடியாக பம்புகள் மூலம் வெளியேற்றி அகற்ற விரைந்து நடவடிக்கைகளை எடுக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மேலும், இப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு மேம்பட்ட அடிப்படை வசதிகளை அளிக்கும் வகையில் குடி தண்ணீர் விநியோகம் மற்றும் கழிவு நீர்அகற்றும் பணி ஆகியவற்றை உடனடியாக சென்னை மெட்ரோ வாட்டர் அமைப்பின் மூலம் மேற்கொள்ளவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சென்னைப் பெருநகருக்குட்பட்ட பகுதிகளில் பொதுப் பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயக்கட்டு இல்லாத ஏரிகளைச் சென்னை மெட்ரோ வாட்டர் நிறுவனம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, குடிநீர் வழங்கும் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதே போன்று, மாநிலத்தில் உள்ள இதரப் பகுதிகளிலும் உள்ள பாசனத்திற்கு பயன்படாத ஏரிகளை பொதுப் பணித்துறை கண்காணிப்பில் அந்தந்த நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் வாயிலாக குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை சாலைகளைச் செப்பனிட முதலமைச்சர் அவர்கள் ரூ.104 கோடி ஒதுக்கி பணிகளை விரைவுபடுத்த உத்தரவிட்டார்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை - 13.11.2002**

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக **(1) 28.10.2002** அன்று ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையத்தில் உள்ள வ.உ.சி. சிறுவர் பூங்காவின் சுற்றுப்புறச் சுவர் இடிந்து விழுந்ததில் திரு. செல்வம் மற்றும் திரு. துரைசாமி ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும், **(2) 7.11.2002** அன்று திருவண்ணாமலை மாவட்டம், மொரப்பன்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.கண்ணம்மாள் என்பவர், அவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் **(3)** மதுரை மாவட்டம், சாப்டூர் காவல் எல்லைக்குட்பட்ட பாளயூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துகோபால் என்பவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும், **(4)** திருவாரூர் மாவட்டம், குளிக்கரையில் உள்ள பெருந்தரகுடி என்ற கிராமத்தைச் சேர்ந்த விக்னேஷ்பாலன் என்பவர் மன்னார்குடியில் கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் **(5) 8.11.2002** அன்று மதுரை நகர், செல்லூரை சேர்ந்த திரு. முருகன் என்பவருடைய மகன் மணிமாறன், வைகை ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் **(6) 9.11.2002** அன்று திருநெல்வேலி மாவட்டம், புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு.கருப்பசாமி என்பரின் மகன் திரு.கருப்பையா என்கிற குடியரசு மாசிலாமணி என்பவரின் வீட்டில் கட்டட வேலை செய்து கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக அங்குள்ள மின்சாரக் கம்பியில் கை வைத்ததன் காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும், **(7) 9.11.2002** அன்று கடலூர் மாவட்டம் கம்மாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சிவகுமார் என்பவரின் மகன் திரு.அஜய் எதிர்பாராதவிதமாக சாலையில் அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் கால் வைத்ததன் காரணமாக அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும், **(8)** க்டலூர் மாவட்டம், செம்மண்டையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வரதன் என்பரின் மகன் திரு. இராமமூர்த்தி லாரியில் செங்கல் எடுத்துக் கொண்டு வரும்போது சாலையின் மேலுள்ள மின்சாரக் கம்பியின் மீது லாரி இடித்ததன் காரணமாக மின்சாரக் கம்பி அறுந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும், **(9) 11.11.2002** அன்று தருமபுரி மாவட்டம் பர்கூரிலுள்ள ஐ.இ.எல்.சி. ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் செல்வன் ஜெயபால், த/பெ திரு. குந்தன், பள்ளியிலுள்ள அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியைத் தொட்டதன் காரணமாக உயிரிழந்தார் என்ற செய்தியையும், **(10) 10.11.2002** அன்று சென்னை, பிராட்வே, ஆசிர்வாதபுரம் முதல் தெருவில் வசித்து வந்த திரு. கோபிநாத் என்பவருடைய மகன் சரத்குமார், பிராட்வே சாலையில், மழை நீர் தேக்கத்தில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் **(11)** சென்னை, கோட்டூர்புரத்தில், மேற்கு கனால் பேங்க் தெருவில் வசித்து வந்த கணேசன் என்ற இளநீர் வியாபாரி தனது வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

இந்தக் கடும் மழை காரணமாக சுவர் இடிந்து விழுந்தும், மின்னல் மற்றும் மின்சாரம் தாக்கியும் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.50,000/–ம் வழங்கி உத்தரவிட்டுள்ளேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசுச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – திருமதி.சாந்தா ஷீலா நாயர்,தீயணைப்புத்துறை இயக்குநர் – திரு. டோரா, சென்னை மாநகராட்சி ஆணையாளர் – திரு.கலைவாணன், ஆணையாளர், நகராட்சி நிருவாகம் – திரு.ஸ்வரன்சிங், தலைமைப் பொறியாளர் – திரு.பூபால் ஆகிய அரசு உயர் அதிகாரிகள் கொண்ட குழு, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளான வேளச்சேரி, ஆவடி, அம்பத்தூர், கொரட்டூர், பள்ளிக்கரணை, திருவொற்றியூர், துரைப்பாக்கம், மாதவரம், மடிப்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், உள்ளகரம்–புழுதிவாக்கம், கேளம்பாக்கம், கத்திவாக்கம், பெருங்குடி, சிட்லபாக்கம், போரூர், ஆதம்பாக்கம் ஆகிய பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளைப் பார்வையிட்டனர்.

அதன் பின்பு, **13.11.2002** அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் இக்குழுவினருடனும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம், பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னைப் பெருநகர் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் 28 பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுடனும் செயல்படுத்தப்பட வேண்டிய நீண்டகால நடவடிக்கைகள் குறித்தும், உள்ள நிலவரம் பற்றியும், ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் எடுக்கவேண்டிய போர்க்கால நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். இன்னும் இரண்டு தினங்களுக்குள் முழுமையாக வெள்ளநீரை வெளியேற்றும் வகையில் செயல் திட்டம் தயாரித்து, அத்திட்டத்தினை உடனடியாக செயல்படுத்தவும் அறிவுரை வழங்கினார். தண்ணீரினால் பரவும் நோயினைத் தவிர்ப்பதற்கு தண்ணீரின் தரம் போதிய அளவு குளோரினேசம் செய்து வழங்குவதற்கும், மக்களுக்கு தண்ணீரினை நன்கு காய்ச்சிக் குடிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனுக்குடன் மருத்துவ வசதி ஏற்படுத்தித்தர நடமாடும் மருத்துவ ஊர்தியுடன் கூடிய மருத்துவரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் விளக்கமாக இந்த ஆய்வில் எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட 10 இடங்களில் தீயணைப்புத்துறை மோட்டார் மூலம் உடனடியாக நீரிறைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் தீயணைப்புத்துறையின் உதவியுடன் நீர்த்தேக்கத்தினை அகற்றவும் அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

| | | |
|---|---|---|
| அம்பத்தூர் | – | கொரட்டூர் வீட்டுவசதி குடியிருப்புப் பகுதி |
| ஆவடி | – | சங்கர் நகர், காந்தி நகர், ஸ்ரீராம் நகர் |
| மாதவரம் | – | விநாயகபுரம், தணிகாசலம் நகர், உடையார்புரம், கலெக்டர் நகர், அம்பேத்கர் நகர் |
| திருவொற்றியூர் | – | கருணாநிதி நகர் |

முடிவில் வெள்ள நீரினை வெளியேற்றும் வாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றி வெள்ளநீர் வடிய வழிவகை செய்யவேண்டும் என்று அமைச்சர் அறிவுறுத்தினார்.●



# கல்வி பயில நிதியுதவி

தமிழகத்தில் உள்ள, பல்வேறு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்ப மையங்களில் கல்வி பயில இடம் கிடைத்தும் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் ஆரம்ப நிலைக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் தவிக்கின்ற 23 மாணவ–மாணவியர்கள், தாங்கள் சேர அனுமதி பெற்ற கல்லூரிகளில் சேர்ந்து கல்விப் பயில உதவி செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மனு அளித்திருந்தார்கள். அதன்படி, போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த இந்த மாணவர்களுக்கு 'முதலமைச்சர் பொது நிவாரண நிதி' யிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

இதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். கௌரிசங்கர், எஸ். மணிமாறன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். கவிதா, எம். இந்திரா பிரியதர்சிணி, சென்னையைச் சேர்ந்த எம். தினேஷ், எம். வசந்தா, பி. மீனாட்சி ரங்கநாயகி, பி. வனிதா, பி. ராதா, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஐ. ஜெயலட்சுமி, ஏ. முகமது ஒவியாஸ், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். வரதராஜ், டி. செந்தில்குமார், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வி. வனஜா, கே. ஆனந்தி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.பி. ஹரிபிரசாத், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சி. பிரசன்ன ராஜசேகர், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். செல்வ பாண்டியன், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. தையல்நாயகி, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த எம். சூரியமூர்த்தி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த எம். திருவண்ணாமலை ஆகியோருக்கு பொறியியல் பட்டப்படிப்பு பயிலவும், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ஜெகன்னாதன் மற்றும் யு. சீனிவாசன் ஆகியோர் பல்தொழில்நுட்ப மையத்தில் பொறியியல் பட்டயப்படிப்பு (Diploma) பயிலவும் தலா ரூ. 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 5 இலட்சத்து 75 ஆயிரத்திற்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.11.2002 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ – மாணவியர்கள் அனைவரும், தங்களது கல்வி தொடர தக்க நேரத்தில் நிதியுதவி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

• • •


# ஈரோடு பால்பண்ணை

## - ஓர் கண்ணோட்டம்

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற வார்த்தைக்கேற்ப ஈரோடு மாவட்ட நிர்வாகம் கிராமப் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்வதில் மிகவும் முனைப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தோடு பால்பண்ணை ஆசியாவிலேயே பால்பவுடர் உற்பத்தி செய்வதில் முன்னணியாகவும், கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உறுதுணையாகவும் திகழ்கிறது. அதன் உறுப்பினர் களுக்கு இலாபத்தில் போனஸ் தொகையையும், ஊக்கத் தொகையையும் வழங்குகிறது. பெரும் அளவிற்கு கிராமங்களில் 733 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு குஜராத் மாநிலத்தில் புகழ் பெற்ற 'அமுல்' தயாரிப்பைப் போன்று ஈரோட்டில் தயாரிக்கும் 'ஆவின்' உற்பத்திப் பொருட்களும் தரத்துடன் சிறந்து விளங்குகிறது.


ஈரோடு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மாவட்டத்தில் தற்போது செயல்படும் 733 கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இணைந்த ஒன்றியமாகும். மாநில அளவில் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மாவட்டத்தில் 733 சங்கங்களிலிருந்து தினந்தோறும் சராசரி 1.5 இலட்சம் லிட்டர் பால் சேகரித்து 46 பால்வழித்தடங்கள் மூலமாக ஈரோடு பால்பண்ணை, சங்கராண்டாம்பாளையம், சத்தியமங்கலம், தாளவாடியில் அமைந்துள்ள குளிரூட்டும் நிலையங்களுக்கும் கொண்டு வரப்படுகிறது. குளிரகங்களுக்கு வரும் பால் குளிரூட்டப்பட்டு மீண்டும் ஈரோடு பால்பண்ணைக்கு கொண்டுவரப்பட்டு சிறந்த முறையில் பதப்படுத்தப்படுகிறது.

பதப்படுத்தப்பட்ட பால் தகுந்த நேரத்தில் தயார் செய்யப்பட்டு ஈரோடு மாவட்டத்தில் சராசரியாக 40 ஆயிரம் லிட்டர்களும், சென்னைக்கு 60 ஆயிரம்



லிட்டர்களும் இதர இணையங்கள் மற்றும் ஒன்றியங்களுக்கு சராசரியாக 20 ஆயிரம் லிட்டர்களும் நாள்தோறும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள பால், பால் பொருட்களான வெண்ணெய், நெய், பால் பவுடர் மற்றும் பால்கோவா போன்ற பால் பொருட்களாக மாற்றப்பட்டு விற்பனைக்குத் தயார் செய்யப்படுகிறது. தேசிய பால்வள வாரியத்தின் முதலாம் பால்பெருக்கித் திட்டத்தில் 1981ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கி, தினந்தோறும் 10 டன் பால் பவுடர் தயார் செய்யும் திறனுடன் அமையப்பெற்றது. இரண்டாம் பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டரிலிருந்து 3 இலட்சம் லிட்டராக விரிவுபடுத்தப்பட்டது.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தால் தென்னிந்தியாவிலேயே பெரிய பால்பவுடர் தொழிற்சாலை ஒன்று நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் பாலை 30 டன் பவுடராக மாற்றும் திறனுடன் ஈரோடு பால்பண்ணையில் அமைக்கப்பட்டு, 30.9.1993 முதல் செயல்படத் துவங்கியது. உற்பத்தி யாகும் பாலை விற்பனை செய்தது போக மீதமுள்ளதை பால்பவுடர் மற்றும் வெண்ணெய்யாக மாற்றப்பட்டு அண்டை மாவட்டங்களான கோவை, நீலகிரி, திருச்சி பால் உற்பத்தியாளர்களுக்கும், கேரளம் மற்றும் கர்நாடக பால் உற்பத்தியாளர்களுக்கும் அனுப்பிட ஒரு வரப் பிரசாதமாக அமையப் பெற்றுள்ளது.



பால்பவுடர் தொழிற்சாலையில் தயாராகும் பால்பவுடர் ஏற்றுமதி தரச் சான்றிதழ் பெற்றுள்ளது என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் தற்போது நாளொன்றுக்கு 3 இலட்சம் பால் பதப்படுத்தவும், 40 டன் பால்பவுடர், 12 டன் வெண்ணெய் மற்றும் 12 டன் நெய் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. சங்கராண்டாம்பாளையத்தில் ஓர் குளிரூட்டும் நிலையமும், சத்தியமங்கலத்தில் ஓர் குளிரூட்டும் நிலையமும், நாளொன்றுக்கு 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பாலை குளிரூட்டும் திறன் கொண்டதாக உள்ளது.

மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தாளவாடியில் ஓர் குளிரூட்டும் நிலையமும், நாளொன்றுக்கு 500 லிட்டர் திறனுடன் செயல்பட்டு வருகிறது. கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கச்செய்யும் வகையில் நாள்தோறும் 100 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கால்நடை தீவனத் தொழிற்சாலை அமையப்பெற்றுள்ளது.

தமிழகத்தில் அமுல் மாதிரி பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைக் கொண்ட மாவட்டம் ஈரோடு மாவட்டமாகும். இதில் 500 சங்கங்கள் பால் பரிசோதனைக்கான நவீன மின்னணுக் கருவிகளைக் கொண்டுள்ளது. பால் என்றால் தரமான பால், பால் பொருட்கள் என்றால் மக்கள் மனதில் நிற்பது ஆவின் வெண்ணெய், நெய், பவுடர் மற்றும் பால்கோவா தான் என்பதை நினைவுப்படுத்துவது ஈரோடு பால்பண்ணை தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரோடு பால்பண்ணை பால் தமிழகத்தில் மட்டுமல்லாது வட இந்தியாவிலும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த ஒன்றியம் 2000–ம் ஆண்டிற்குச் சிறந்த ஒன்றியமாக தேர்வு செய்யப்பட்டு, தமிழக முதலமைச்சர் அவர்களால் விருது பெற்ற பெருமையும் உண்டு. இந்த ஒன்றியம் பால் பவுடர், நெய் ஆகியவற்றிற்கு முதன்முறையாக ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது. பாதாம் பவுடர் உற்பத்தி தொடங்கப் பெற்று மாதம் ஒன்றிற்கு 500 கிலோ வரை விற்பனை செய்யப்படுகிறது. மாநில அளவில் ஒன்றிற்கு 500 கிலோ வரை விற்பனை செய்யப்படுகிறது. மாநில அளவில் முதன்முதலாக 50 மி.லி. பாக்கெட்டுகளில் நெய் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சிக்கு முத்திரை பதித்தாற்போல் மேலும் 27.9.2002 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பால் கூட்டுறவுகளின் பொது வடிவம் ஈரோடு ஆவின் நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு உற்பத்தியாளர்களிடமும், பொதுமக்களிடமும் தனி முத்திரையை பதித்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

*– எம்.ஆர்.லிங்கம்,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*ஈரோடு மாவட்டம்.*

• • •



# முன்னேற்றப் பாதையில் சுயஉதவி மகளிர் குழுக்கள்


"ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்ற பாரதியின் சிந்தனையை செயலாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு திட்டங்களின் மூலம் பொருளாதார மேம்பாட்டில் பெண்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர்.

பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கில் தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம், வளர் இளம் பெண்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்க புதிய திட்டம், என புரட்சித் திட்டங்களைச் செயல்படுத்திய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஐந்து ஆண்டுகளில் ஐந்து இலட்சம் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு தொழில் திறன் வளர்க்கும் பயிற்சி வழங்கப்படும் என அறிவித்து, பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற வழி வகுத்தார்.

தமிழக முதல்வர் அவர்களின் திட்டங்களை ஏணிப்படிகளாகக் கொண்டு குமரி மாவட்ட சுயஉதவி மகளிர் குழுக்கள் சுய தொழில்கள் தொடங்கி திறம்பட நிர்வகித்து வருகின்றனர். அரசின் மானியங்களைப் பெற்று ஓலை முடைதல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல், அகர்பத்தி சோப்பு தயாரித்தல், தேனீ வளர்த்தல், ஊறுகாய், உணவுப் பொருட்கள் தயாரித்தல், குச்சுத் தையல், ரெடிமேட் துணி வகைகள் தயாரித்தல் போன்ற தொழில்களைக் குடிசைத் தொழில் போன்று மேற்கொண்டு வந்த சுயஉதவி மகளிர் குழுவினர், நவீன யுக்திகளைக் கையாண்டு சிறிய தொழிற்சாலைகளை நிறுவத் தொடங்கினர்.

அகஸ்தீஸ்வரம் வட்டம் இரவிபுதூர் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஆதிதிராவிடர் இன சலவைத் தொழில் புரியும் சுயஉதவிக் குழுவினருக்கு உலர்சலவை நிலையம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டன. உயர்சலவை நிலையத்திற்கான கட்டடம் ஜவகர் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.75 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. நவீன சலவை இயந்திரங்கள் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியமாக ரூ.1.25 இலட்சம் மானியத்துடன் ரூ.2.50 இலட்சம் கடன் உதவி பெற்று அமைக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் திரு.என். தளவாய் சுந்தரம் அவர்களால் கடந்த ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது.

உயர்சலவை நிலையத்தை தொடர்ந்து நவீன முறையில் மண்பாண்டங்கள் தயாரித்தல், மசாலா





பொடிகள் தயாரித்தல் போன்ற தொழில் நிறுவனங்களைத் தொடங்கிச் சிறப்பாக நடத்திவரும் சுயஉதவிக் குழுவினர் புதிய முயற்சியாக சிமெண்ட், செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கியுள்ளனர். தக்கலை ஊராட்சி ஒன்றியம் நுள்ளிவிளை ஊராட்சி பருத்திவிளை பாரிஜாதம் சுயஉதவி மகளிர் குழுவினர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் அனுமதிக்கப்பட்ட ரூ.98 ஆயிரத்து 625 மானியத்துடன் ரூ.1 இலட்சத்து 97 ஆயிரத்து 250 வங்கிக் கடன் உதவி பெற்று தொழிற்சாலையைத் தொடங்கி உள்ளனர்.

பாரிஜாதம் சுயஉதவி மகளிர் குழுவின் ஊக்குநரும், தக்கலை ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவருமான திருமதி. மேரி புஷ்பம் கூறுகையில்,

எங்கள் சுயஉதவி மகளிர் குழுவில் 20 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவிலுள்ள 20 பெண்களும் சிமெண்ட், செங்கல் தயாரிக்கும் பணியில் ஈடுபடுவார்கள். தினமும் குறைந்த பட்சமாக 5 பெண்கள் வேலை செய்வர். இத்தொழில் மூலம் நாளொன்றிற்கு குறைந்தது ரூ.623 இலாபம் கிடைக்கும். அரசு மானியத்துடன் தொடங்கியுள்ள இந்த தொழிற்சாலை மூலம் ஏழ்மை நிலையிலுள்ள 20 பெண்களின் குடும்பங்களின் வருமானம் அதிகரிப்பதுடன் பிற நிறுவனங்களை விட மிகவும் குறைந்த விலையில் சிமெண்ட் செங்கல்களை விற்று, சமுதாயத்திற்கு உதவும் மன நிறைவும் ஏற்படுகிறது என கூறினார்.

சிமெண்ட் செங்கல் தயாரிக்கும் நிலையத்தை 26.9.2002 அன்று திறந்து வைத்த ஆட்சித் தலைவர் திரு. சுகன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 12,300 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மகளிர் திட்டத்தின் கீழ் 85 ஆயிரத்து 728 மகளிரை உறுப்பினராகக் கொண்ட 4,533 சுயஉதவி மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் ரூ.1028.60 இலட்சம் சேமிப்பு செய்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படும் 885 சுயஉதவி மகளிர் குழுக்களுக்கு பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதியும், 393 சுயஉதவிக் குழுக்களுக்கு சுய தொழில் தொடங்க 50 சதவீத மானியக் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 140 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.95 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் சுய வேலைவாய்ப்பு தொழில் திறன் வளர்க்கும் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சி இதுவரை குமரி மாவட்டத்தில் 3422 மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது.


கற்ற மகளிர் அதிகமாக உள்ள மாவட்டம் என்பதால் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் மூலம் நவீன உத்திகளுடன் சுயதொழில் தொடங்கி சிறப்பாக நடத்தி வருகின்றனர் என கூறினார்.

*– எஸ்.எம்.பஷீர்,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நாகர்கோவில்.*



# குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பின் விருது**




பள்ளிக்கூடம் சென்று பாடம் படிக்க வேண்டிய பருவத்தில் பீடி நிறுவனம் சென்று பீடி சுற்றுவதைத் தடுக்கவும், கல்வி கற்று கருத்தறிய வேண்டிய வயதில் கல்லுடைக்கும் வேலையில் ஈடுபடுவதை தடுக்கவும், சிறப்பாக சீருடை அணிந்து சிந்தனை செயல்திறன் வளர்க்க வேண்டிய வயதில், சித்தாள் வேலைக்கு செல்வதைத் தடுக்கவும், இயற்கையாக அமைந்த தன் சொந்த மூளையை பட்டை தீட்டி, பளபளக்க வைக்க வேண்டிய வயதில், செயற்கை வைரத்தை பட்டைத்தீட்டிப் பார்ப்பதை தடுக்கவும், ஓடி விளையாடி தன் உடல்நலத்தையும், மனவளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பேண வேண்டிய வயதில், கூன் விழும் அளவிற்கு நீண்ட நேரம் உட்கார்ந்து உழைப்பதைத் தடுக்கவும், "இளமையிற் கல்" இன்றியமையாதது என்பதை வலியுறுத்தவும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டதுதான், "குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்". இத்திட்டம் 1995ஆம் ஆண்டு முதல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

"குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்" என்பது "Child Labour Elimination and Effective Rehabilitations Services" (CHEERS) இத்திட்டம் இளம் வயதில் வேலைக்குச் சென்று, வருவாய் ஈட்டும் சிறுவர், சிறுமியர்களைத் தடுத்தல் இதன் நோக்கமல்ல. அதற்கு மாறாக இளம் வயதில் கல்வி அறிவும், உடல் நலமும், ஒழுக்க நெறிகளும் பேண வேண்டிய வயதில், ஒருவரிடம் அடிமை போல் அதிகமாக உழைத்து, குறைந்த வருமானம் பெற்று பலவகையிலும் சிரமத்திற்குள்ளாகும் சிறுவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு அடிப்படைக் கல்வி அறிவு மூலம், உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, உற்சாகத்தைத் தூண்டி, சுதந்திரமான மறுவாழ்வு அளிப்பதுதான் இதன் நோக்கம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் "மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீரிய தலைமையில்" "N.C.L.P."யின் கீழ் "சியர்ஸ்" திட்ட மையம் செயல்பட்டு வருகிறது. இத்திட்ட மையம் திட்ட இயக்குநர் மற்றும் பணியாளர்களுடன் மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது.

இந்த "சியர்ஸ்" அமைப்பில், சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. வருங்கால வளமான நாட்டின் வித்துக்களாகிய சிறுவர், சிறுமியர்கள், கல்வி அறிவின்மையால், குறைந்த வருமானத்தில் தனியார் நிறுவனத்தில் பல சிரமங்களுக்கு உள்ளாகி, பணியில் இருப்போர்களை மீட்டு வந்து அவர்களுக்குப் போதுமான அடிப்படைக் கல்வி அறிவு, பொழுதுபோக்கு வசதி, மதிய உணவு, உடல் சுத்தம் சுகாதாரம் பேணுதல், ஒழுக்க நெறிகளைப் பேணுதல் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் சரியான முறையில் அவைகளை கடைபிடிக்கத் தொடங்கிய உடன், முறையான பள்ளிக்கூடங்களுக்கு கல்வி கற்க அனுப்பி வைக்கும் பணிகளில் இச்சிறப்புப் பள்ளிகள் செயல்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 12 பஞ்சாயத்து ஒன்றியங்களிலும், மாநகராட்சி பகுதிகளிலும் "சியர்ஸ்" மூலம் 37 சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. வருடத்திற்கு 1500 சிறுவர், சிறுமிகள் இப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு அடிப்படைக் கல்வி அறிவும், ஒழுக்க நெறிகளும், பயிற்சி அளிக்கப்பட்டு முறையான பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள். தற்போது 3,647 சிறுவர்

சிறுமியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இச்சிறப்புப் பள்ளியின் செயல்பாட்டில் 20 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் பங்கு பெறுகின்றன.

ஒவ்வொரு சிறப்புப் பள்ளியிலும், மாணவர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள், கல்வி கற்க அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

சிறப்புப் பள்ளியில் விடுமுறை கால சிறப்பு பயிற்சியின் மூலம் பொம்மைகள் செய்தல், எம்பிராய்டரி வேலை, பை பின்னுதல், வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், தையல் வேலை போன்ற பணிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இச்சிறப்புப் பள்ளியில் அளிக்கப்படும் கல்வி மற்றும் பயிற்சியின் தர மேம்பாட்டை அவ்வப்போது கண்காணிக்க



மாவட்ட அளவில், மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் தலைமையில் மாவட்ட கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சில குறிப்பிட்ட சிறப்புப் பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாத உதவிப் பணமாக ரூ.100 மற்றும் இலவச பாடப்புத்தகம், நோட்டுகள், மதிய உணவு, வாரம் ஒருமுறை முட்டையும் வழங்கப்படுகிறது. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சுகாதாரம் தொடர்பான பணிகளைக் கவனிக்க இணை இயக்குநர் (எச்.எஸ்) அவர்கள் தலைமையில் சுகாதாரக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அவ்வப்போது மாணவர்களை பரிசோதனை செய்து, அதற்கான மருத்துவ வசதியினை செய்து கொடுக்கிறார்கள்.

குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மாநில பள்ளிசாரா கல்வி கருவூலத்தில் சார்பில் மால்கம் ஆதிசேஷய்யா விருது இம்மாவட்டத்திற்கு 4 ஆண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சீர்மிகு திட்டம், ஸ்காட்லாண்டில் உள்ள காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பால் மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் புதுமையான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி வரும் நாட்டிற்கு காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பால் விருதுகள் வழங்கப்படுகின்றன. அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால், "குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்" பற்றியும் செயல்படும் விதம் பற்றியும் விளக்கமாக குறிப்புகள் அனுப்பப்பட்டிருந்தன. இதுபோல உலக நாடுகள் முழுவதிலிருந்தும் அந்தந்த நாடுகள் செயல்படுத்தி வரும் புதிய திட்டங்களைக் காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பிற்கு அவ்வாறு கிடைக்கப்பெற்ற 150 புதிய திட்டங்களில், சிறந்த முதல் 12 திட்டங்களில் ஒன்றாகி திருச்சிராப்பள்ளியில் செயல்பட்டு வரும் "குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்" தேர்வு செய்யப்பெற்றது. அதன் காரணமாக, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் கடந்த 5.9.2002 முதல் 19.9.2002 வரை நடைபெற்ற காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பு மாநாட்டில் இத்திட்டம் தொடர்பாக சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். இம்மாநாட்டில் 50 நாடுகளைச் சேர்ந்த 225 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பின் அழைப்பிற்கிணங்க அம்மாநாட்டில் திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் திருச்சிராப்பள்ளி "குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்" சிறப்பாக செயல்படும் விதம் பற்றி விரிவாக விளக்கவுரை ஆற்றினார். காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பினர் இத்திட்டத்தின் சிறப்பம்சம் பற்றியும், செயல்படும் விதம் பற்றியும் அறிந்து பாராட்டி, ''பன்னாட்டு புதுமை செயல்பாட்டுக்கான விருதுகள்" வழங்குவதன் அடிப்படையில், இத்திட்டத்திற்கான விருதினை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்களுக்கு காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பு சார்பாக மாநாட்டில் வழங்கினார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள், இத்திட்டத்தின் சிறப்புப் பற்றி அறிந்து ஆப்பிரிக்க நாடுகளிலும், இத்திட்டத்தை செயல்படுத்த முன் வந்துள்ளனர். இந்திய அளவில், இத்திட்டத்திற்காக காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பின் விருது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றது மிகவும் பெருமைக்குரியதாக கருதப்படுகிறது.

---

*– கோ. பன்னீர்செல்வம்,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி.*





# பெருந்தலைவர்காமராசரின் எண்ணங்களுக்கு வண்ண வடிவம் தருகின்றது புரட்சித்தலைவியின் அரசு



– மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர்
**திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்**

"நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும் வருங்காலத் தலைமுறை வளமுடன் திகழ்ந்திட தங்களின் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்களையும் போற்ற வேண்டும் – அவர்களின் புகழைப் பரப்ப வேண்டும் என்பதற்காகவும் – புரட்சித்தலைவியின்அரசு பாடுபட்டு வருகிறது. அதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது".

அந்த வகையில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து, இங்கு எழிலுடனும் ஏற்றத்துடனும் கொண்டாடப்படுகிறது. பெருந்தலைவர் காமராசர் ஒரு சமுதாயப் புரட்சியின் சின்னமாகத் திகழ்ந்த தலைவர் ஆவார்.

சாதாரண நிலையில் பொதுவாழ்வைத் தொடங்கிய அவர், இந்தியாவின் தலைவிதியை இரண்டு அல்லது மூன்று முறை நிர்ணயிக்கின்ற ஆற்றல்மிக்க தலைவராகத் திகழ்ந்தார் என்றால் – "கிங் மேக்கர்" (King Maker) என்று வரலாறு போற்றுகின்ற நிலையினைப் பெற்றிருந்தார் என்றால் – அதற்குக் காரணம். அவரது உழைப்பும் தியாகமும் – ஈடுபாட்டுணர்ச்சியுடன் காரியமாற்றும் திறமையும்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பெருந்தலைவர் காமராசர் உழைப்பால் உயர்ந்தவர்.

அனுபவத்தால், தமிழ்நாட்டை – தமிழ்நாட்டு மக்களை நன்கு அறிந்தவர்.

அதனால்தான் தலைவர்கள் எல்லாம், தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் போற்றுகின்ற தலைவராக காமராசர் திகழ்ந்தார்; திகழ்கின்றார்; எதிர்கால தலைமுறையும், அவரது நினைவைப் போற்றிடும் என்பதில் ஐயமில்லை.

தந்தை பெரியார் அவர்கள் "பச்சைத் தமிழர்" என்று காமராசரைப் போற்றினார்கள்.


பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்களை பலமுறை பாராட்டி மகிழ்ந்தார்கள்.

1954ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட தலைவர் காமராசர், குடியாத்தம் தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட்டபோது பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டது இன்றைக்கும் நமது நினைவில் நிற்கின்றது.

"குணாளா! குலக்கொழுந்தே! சென்று வா! வென்று வா!" என்று பேருள்ளத்துடன் பேரறிஞர் அண்ணா வாழ்த்தினார்கள்.

"காமராசர் தியாகத்தின் அடையாளச் சின்னம், போராடிப் போராடி வாழ்க்கையில் முன்னேறியவர்" என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கடந்த ஜூலை திங்கள் 15ஆம் நாள், சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அழகாக – ஆழமான கருத்தோடு குறிப்பிட்டார்கள்.




"பெருந்தலைவர் காமராசர்,
தமது எளிமையால்
தன்னலமற்ற தொண்டால்
நாட்டுப் பற்றால்
தியாகத்தால்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்"

– என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

வகையில் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

நிதி நெருக்கடி, இயற்கைச் சீற்றம், அரசியல் மாச்சரியம் ஆகியவற்றால் இடர்பாடுகள் தோன்றிய போதிலும் – மக்கள் நலனுக்கான இலட்சிய பயணத்தினை – புரட்சித்தலைவியின் அரசு தொய்வின்றி நடத்தி வருவதை மக்கள் அறிவார்கள்.



"பெருந்தலைவர் காமராசர் தமிழகத்தை சிறப்பான மாநிலமாக மாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து நாமும் மேற்கொள்வோம்" என்று அந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்நிய அரசியலில் மகத்தான சக்தியாகவும் – தமிழ்நாட்டின் ஆற்றல் மிக்கத் தலைவராகவும் திகழ்கின்ற அம்மா அவர்கள், தமிழகத்தை முன்னேறிய மாநிலமாக மட்டுமல்ல; இந்திய நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்திட பாடுபட்டு வருகிறார்கள்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் ஏழை எளிய மாணவ மாணவிகளின் நலனுக்காகவும் புரட்சித்தலைவியின் அரசு ஆற்றிவரும் பணி, அகில உலகமே வியந்து பாராட்டும்



"மக்களாட்சி என்பது வெறும் ஆட்சி முறை மட்டுமல்ல; மக்களின் புதிய வளமான வாழ்விற்கு ஓர் அழைப்பாகும்".

**"Democracy is not a form of Government alone; it is an invitation to a new way of Life"**

– என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டார்கள்.

அந்த வகையில், புரட்சித் தலைவி அரசின் செயல்பாடுகளும் திட்ட செயலாக்கமும் அமைந்துள்ளன.

ஏழை, எளிய மக்களின்துயர் துடைக்க நமது அரசு – எத்தனையோ திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கர்நாடக அரசின் பிடிவாதப் போக்கால் – காவிரியில் தண்ணீர் வராத நிலையில் – குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், விவசாயிகளின் துயர்



துடைக்கும் வகையில் – வேலைவாய்ப்புத் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் ரூ.164.18 கோடி மதிப்பீட்டில் பல்வேறு ஆக்கப்பணிகளை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

மேலும், காவிரி டெல்டா பகுதியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் தீபாவளியினை கொண்டாடும் வகையில் தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் – ரூ.21 கோடி செலவில் – விவசாயத் தொழிலாளர்களுக்கு "தீபாவளி பரிசு" வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தினார்.

தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 9 இலட்சத்து 38 ஆயிரத்து 33 விவசாய தொழிலாளர் குடும்பத்தின் பயன் பெற்றுள்ளார்கள். இதில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 1,49,000 குடும்பத்தினர் பயன்பெற்றுள்ளனர்.

இப்படி அடித்தள மக்களின் துயர்துடைக்க – ஆயிரமாயிரம் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி செயல்படுத்திவருகிறார்கள்.


எதிர்கால தலைமுறை ஏற்றமுடன் திகழ்ந்திட தங்களின் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் – உழைத்தவர்கள் என்றும் நினைவுகூர்ந்து போற்றப்படுவார்கள் என்பதற்கு பெருந்தலைவர் காமராசர் ஓர் எடுத்துக்காட்டு ஆவார்.

அத்தகைய பெருமைமிக்க தலைவர் வழியில் ஆட்சி நடத்திடும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் – தமது ஆட்சித் திறனாலும், அரிய சாதனைகளாலும் தமிழ்நாட்டில் புதிய வரலாறு படைத்துக் கொண்டு இருக்கிறார்.

நூற்றாண்டு விழா நாயகர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் கனவை நனவாக்கவும், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் தமிழகம் நடைபோடவும், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திடவும், செயலாற்றிடும் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசுக்கு துணை நிற்க – இந்நாளில் உறுதி ஏற்போம்.

*(15.11.2002 அன்று திருச்சியில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை)*

★ ★ ★



*புதுமைப்பித்தன் தம் வாழ்நாளில் பல அல்லல்களுக்கு இடையே கதை எழுதியவர்; கலைப் பித்துக் கொண்டவர். ஒளியுடைய உலகத்தை வருணிப்பதைக் காட்டிலும் இருள் சூழ்ந்த காட்டினை வருணிப்பதில் மகிழ்ச்சி கொண்டவர். நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கினுள் காணப்படும் வறுமையையும், பிணியையும் புனைசுருட்டினையும் வஞ்சனையையும், வேடத்தையும் எடுத்துக் காட்டுவதில் வல்லவர். சிறு சிறு வாக்கியங்களில் உணர்ச்சியை எழுப்பி உளத்தினைத் தொட்டு உருகவைக்கும் இயல்பினர்.*

*மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலீதா** அவர்கள் புதுமைப்பித்தனின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கி, அவரது வாரிசுதாரருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகையினை **25.9.2002** அன்று வழங்கினார்.*

*புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதையான ''கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், 'தமிழரசு' வாசகர்களுக்காக இங்கே ....''*

# கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்!

**□ புதுமைப்பித்தன்**

மேலகரம் மே.க.ராமசாமிப் பிள்ளை அவர்களின் ஏக புத்திரனும் செல்லப்பா என்பவருமான கந்தசாமிப் பிள்ளையவர்கள், ''பிராட்வே''யும் ''எஸ்பிளேனேடு''ம் கூடுகிற சந்தியில் ஆபத்தில்லாத ஓரத்தில் நின்றுகொண்டு வெகு தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். ''டிராமில் ஏறிச் சென்றால் ஒன்றே காலணா மிஞ்சும். பக்கத்துக் கடையில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு நடந்துவிடலாம். பஸ்ஸில் ஏறிக் கண்டக்டரை ஏமாற்றிக் கொண்டே சென்ட்ரலைக் கடந்துவிட்டு அப்புறம் டிக்கட் வாங்கித் திருவல்லிக்கேணிக்குப் போனால் அரைக் "கப்" காப்பி குடித்துவிட்டு வீட்டுக்குப் போகலாம்; ஆனால் வெற்றிலை கிடையாது''.....

''கண்டக்டர்தான் என்னை ஏமாற்று ஏமாற்று என்று வெற்றிலை வைத்து அழைக்கும்போது அவனை ஏமாற்றுவது, அதாவது அவனை ஏமாறாமல் ஏமாற்றுவது தர்ம விரோதம். நேற்று அவன் அப்படிக் கேட்டபடி சென்ட்ரலிலிருந்து மட்டும் கொடுத்திருந்தால் காப்பி சாப்பிட்டிருக்கலாம்."

''இப்பொழுது காப்பி சாப்பிட்டால் கொஞ்சம் விறுவிறுப்பாகத்தான் இருக்கும்."

இப்படியாக மேற்படியூர் மேற்படி விலாசப் பிள்ளையவர்கள் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் அவருக்குக் கடவுள் பிரசன்னமானார். திடீரென்று அவருடைய புத்தி பரவசத்தால் மருளும்படி தோன்றி, ''இந்தா பிடி வரத்தை'' என்று வற்புறுத்தவில்லை.

''ஐயா, திருவல்லிக்கேணிக்கு எப்படிப் போகிறது ?'' என்றுதான் கேட்டார். ''டிராமிலும் போகலாம், பஸ்ஸிலும் போகலாம், கேட்டு கேட்டு நடந்தும் போகலாம்; மதுரைக்கு வழி வாயிலே'' என்றார் ஸ்ரீகந்தசாமிப் பிள்ளை.

''நான் மதுரைக்குப் போகவில்லை; திருவல்லிக்கேணிக்குத் தான் வழி கேட்டேன்; எப்படிப் போனால் சுருக்கு வழி ?'' என்றார் கடவுள். இரண்டு பேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சாடி மோதித் தள்ளிக்கொண்டு நடமாடும் ஜனக் கூட்டத்திலிருந்து விலகி, செருப்பு ரிப்பேர் செய்யும் சக்கிலியன் பக்கமாக இருவரும் ஒதுங்கி நின்றார்கள்.

மேலகரம் ராமசாமிப் பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயது; நாற்பத்தைந்து வருடங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக் கட்டு; சில கறுப்பு மயிர்களும் உள்ள நரைத்த தலை; இரண்டு வாரங்களாக க்ஷவரம் செய்யாத முகவெட்டு; எந்த ஜனக் கும்பலிலும் எவ்வளவு தூரத்திலும் போகும் நண்பர்களையும் கொத்திபிடிக்கும் அதி தீட்சண்யமான கண்கள்; காரிக்கம் ஷர்ட், காரிக்கம் வேஷ்டி, காரிக்கம் மேல் அங்கவஸ்திரம்.

வழி கேட்டவரைக் கந்தசாமிப்பிள்ளை கூர்ந்து கவனித்தார். வயசை நிர்ணயமாகச் சொல்ல முடியவில்லை. அறுபது இருக்கலாம்; அறுபதினாயிரமும் இருக்கலாம். ஆனால் அத்தனை வருஷமும் சாப்பாட்டுக் கவலையே இல்லாமல் கொழு கொழு என்று வளர்ந்த மேனி வளப்பம். தலையிலே துளிக் கூடக் கறுப்பில்லாமல் நரைத்த சிகை, கோதிக் கட்டாமல் சிங்கத்தின் பிடரி மயிர் மாதிரி கழுத்தில் விழுந்து சிலிர்த்துக் கொண்டு நின்றது. கழுத்திலே நட்ட நடுவில் பெரிய கறுப்பு மறு. கண்ணும் கன்னங்கறேலென்று, நாலு திசையிலும் சுழன்று, சுழன்று வெட்டியது. சில சமயம் வெறியனுடையது போலக் கனன்றது. சிரிப்பு ? அந்தச் சிரிப்பு, கந்தசாமிப் பிள்ளையைச் சில சமயம் பயமுறுத்தியது. சில சமயம் குழந்தையுடையதைப் போலக் கொஞ்சியது.

''ரொம்ப தாகமாக இருக்கிறது" என்றார் கடவுள்.

''இங்கே ஜலம் கிலம் கிடைக்காது; வேணுமென்றால் காப்பி சாப்பிடலாம்; அதோ இருக்கிறது காப்பி ஹோட்டல்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''வாருங்களேன், அதைத்தான் சாப்பிட்டுப் பார்ப்போம்'' என்றார் கடவுள். கந்தசாமிப்பிள்ளை பெரிய அபேதவாதி. அன்னியர், தெரிந்தவர் என்ற அற்ப பேதங்களைப் பாராட்டுகிறவர் அல்லர்.

''சரி, வாருங்கள் போவோம்'' என்றார். பில்லை நம் தலையில் கட்டிவிடப் பார்த்தால் ? என்ற சந்தேகம் தட்டியது. ''துணிச்சல் இல்லாதவரையில் துன்பந்தான்'' என்பது கந்தசாமிப்பிள்ளையின் சங்கற்பம். இருவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தனர். கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் பின்புறமாக ஒண்டிக்கொண்டு பின் தொடர்ந்தார்.

இருவரும் ஒரு மேஜையருகில் உட்கார்ந்தார்கள். பையனுக்கு மனப்பாடம் ஒப்பிக்க இடங் கொடுக்காமல் ''சூடா ஸ்ட்ராங்கா இரண்டு கப் காப்பி" என்று தலையை உலுக்கினார் கந்தசாமிப்பிள்ளை.

''தமிழை மறந்துவிடாதே. இரண்டு கப் காப்பிகள் என்று சொல்'' என்றார் கடவுள்.

''அப்படி அல்ல; இரண்டு கப்கள் காப்பி என்று சொல்லவேண்டும்'' என்று தமிழ்க்கொடி நாட்டினார் பிள்ளை. முறியடிக்கப்பட்ட கடவுள் அண்ணாந்து பார்த்தார். ''நல்ல உயரமான கட்டடமாக இருக்கிறது; வெளிச்சமும் நன்றாக வருகிறது" என்றார்.

''பின்னே பெரிய ஹோட்டல் கோழிக் குடில் மாதிரி இருக்குமோ ? கோவில் கட்டுகிறது போல என்று நினைத்துக் கொண்டீராக்கும்! சுகாதார உத்தியோகஸ்தர்கள் விடமாட்டார்கள்'' என்று தமது வெற்றியைத் தொடர்ந்து முடுக்கினார் பிள்ளை.

கோவில் என்ற பதம் காதில் விழுந்ததும் கடவுளுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

''அப்படி என்றால் ?'' என்றார் கடவுள். தோற்றாலும் விடவில்லை. ''சுகாதாரம் என்றால் என்ன என்று சொல்லும் ?'' என்று கேட்டார் கடவுள்.

''ஓ! அதுவா ? மேஜையை லோஷன் போட்டுக் கழுவி உத்தியோகஸ்தர்கள் அபராதம் போடாமல் பார்த்துக் கொள்வது. பள்ளிக்கூடத்திலே, பரீட்சையில் பையன்கள் தோற்றுப் போவதற்கென்று சொல்லிக்கொடுக்கும் ஒரு பாடம்; அதன்படி இந்த ஈ, கொசு எல்லாம் ராக்ஷசர்களுக்குச் சமானம். அதிலும் இந்த மாதிரி ஹோட்டல்களுக்குள்ளே வந்து விட்டால் ஆபத்துதான். உயிர் தப்பாது என்று எழுதியிருக்கிறார்கள்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை. அவருக்கே அதிசயமாக இருந்தது இந்தப் பேச்சு. நாக்கில் சரஸ்வதி கடாட்சம் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகித்தார்.

கடவுள் அவரைக் கவனிக்கவில்லை. இவர்கள் வருவதற்கு முன் ஒருவர் சிந்திவிட்டுப்போன காப்பியில் சிக்கிக் கொண்டு தவிக்கும் ஈ ஒன்றைக் கடவுள் பார்த்துக்கொண்டே இருந்தார். அது, முக்கி முனகி ஈரத்தை விட்டு வெளியே வர முயன்று கொண்டிருந்தது.

''இதோ இருக்கிறதே'' என்றார் கடவுள். உதவி செய்வதற்காக விரலை நீட்டினார். அது பறந்துவிட்டது. ஆனால் எச்சில் காப்பி அவர் விரலில்பட்டது.

''என்ன ஐயா, எச்சிலைத் தொட்டுவிட்டீரே! இந்த ஜலத்தை எடுத்து மேஜைக்குக் கீழே கழுவும்'' என்றார் பிள்ளை.

''ஈயை வர விடக்கூடாது, ஆனால் மேஜையின் கீழே கழுவவேண்டும் என்பது சுகாதாரம்!'' என்று முனகிக் கொண்டார் கடவுள்.

பையன் இரண்டு கப் காப்பி கொண்டுவந்து வைத்தான்.

கடவுள் காப்பியை எடுத்துப் பருகினார். சோமபானம் செய்த தேவ களை முகத்தில் தெரிந்தது.

"நம்முடைய லீலை" என்றார் கடவுள்.

"உம்முடைய லீலை இல்லைங்காணும், ஹோட்டல்காரன் லீலை. அவன் சிக்கரிப் பவுடரைப் போட்டு வைத்திருக்கிறான்; உம்முடைய லீலை எல்லாம் பில் கொடுக்கிற படலத்திலே" என்று காதோடு காதாய்ச் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை. சூசகமாகப் பில் பிரச்னையைத் தீர்த்துவிட்டதாக அவருக்கு ஓர் எக்களிப்பு.

"சிக்கரிப் பவுடர் என்றால்...?" என்று சற்றுச் சந்தேகத்துடன் தலையை நிமிர்த்தினார் கடவுள்.

"சிக்கரிப் பவுடர் காப்பிமாதிரிதான் இருக்கும். ஆனால் காப்பி அல்ல; சில பேர் தெய்வத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு ஊரை ஏமாற்றி வருகிற மாதிரி" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

தெய்வம் என்றதும் திடுக்கிட்டார் கடவுள்.

பெட்டியடியில் பில்லைக் கொடுக்கும் பொழுது, கடவுள் புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார்; கந்தசாமிப்பிள்ளை திடுக்கிட்டார்.

"சில்லறைக் கேட்டால் தரமாட்டேனா? அதற்காக மூன்றணா பில் எதற்கு? கண்ணைத் துடைக்கவா, மனசைத் துடைக்கவா? " என்றார் ஹோட்டல் சொந்தக்காரர்.

"நாங்கள் காப்பி சாப்பிடத்தான் வந்தோம் " என்றார் கடவுள்.

"அப்படியானால் சில்லறையை வைத்துக்கொண்டு வந்திருப்பீர்களே? " என்றார் ஹோட்டல் முதலாளி. அதற்குள் சாப்பிட்டு விட்டு வெளியே காத்திருப்போர் கூட்டம் ஜாஸ்தியாக, வீண் கலாட்டா வேண்டாம் என்று சில்லறையை எண்ணிக் கொடுத்தார். "தொண்ணூற்று ஒன்பது ரூபாய் பதின்மூன்று அணா–சரியா? பார்த்துக் கொள்ளும் சாமியாரே. "

"நீங்கள் சொல்லிவிட்டால் நமக்கும் சரிதான்; எனக்குக் கணக்கு வராது " என்றார் கடவுள்.

ஒரு போலிப் பத்து ரூபாய் நோட்டைத் தள்ளிவிட்டதில் கடைக்காரருக்கு ஒரு திருப்தி.

வெளியே இருவரும் வந்தார்கள். வாசலில் அவ்வளவு கூட்டமில்லை. இருவரும் நின்றார்கள்.

கடவுள், நம் கையில் கற்றையாக அடுக்கியிருந்த நோட்டுக்களில் ஐந்தாவதை மட்டும் எடுத்தார். சுக்கு நூறாக கிழித்துக் கீழே எறிந்தார்.



கந்தசாமிப் பிள்ளைக்குப் பக்கத்தில் நிற்பவர் பைத்தியமோ என்ற சந்தேகம். திடுக்கிட்டு வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

"கள்ளநோட்டு ; என்னை ஏமாற்றப் பார்த்தான்; நான் அவனை ஏமாற்றிவிட்டேன் " என்றார் கடவுள் அவருடைய சிரிப்பு பயமாக இருந்தது.

"சிக்கரிப் பவுடருக்கு நீர் உடன்பட்டீரா இல்லையா? அந்தமாதிரி இதற்கு நான் உடன்பட்டேன் என்று வைத்துக் கொள்ளும். அவனுக்குப் பத்து ரூபாய்தான் பெரிது; அதனால்தான் அவனை ஏமாற்றும்படி விட்டேன்" என்றார் கடவுள்.

வலிய வந்து காப்பி வாங்கிக் கொடுத்தவரிடம் எப்படி விடை பெற்றுக் கொள்வது என்று பட்டது கந்தசாமிப் பிள்ளைக்கு.

"திருவல்லிக்கேணிக்குத்தானே? வாருங்கள், டிராமில் ஏறுவோம் " என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அது வேண்டவே வேண்டாம்; எனக்குத் தலைசுற்றும்; மெதுவாக நடந்து போய்விடலாமே" என்றார் கடவுள்.

"ஐயா, நான் பகலெல்லாம் காலால் நடந்தாச்சு; என்னால் அடி எடுத்து வைக்க முடியாது ; ரிக்ஷாவிலே ஏறிப் போகலாமே " என்றார் கந்தசாமிப்பிள்ளை " நாம்தாம் வழி காட்டுகிறோமே; பத்து ரூபாய் நோட்டைக் கிழக்கக் கூடியவர் கொடுத்தால் என்ன? " என்பதுதான் அவருடைய கட்சி.

" நர வாகனமா? அதுதான் சிலாக்கியமானது " என்றார் கடவுள்.

இரண்டுபேரும் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டார்கள். "சாமி கொஞ்சம் இருங்க,வெளக்கை ஏத்திக்கிறேன்" என்றான் ரிக்ஷாக்காரன்.

பொழுது மங்கி, மின்சார வெளிச்சம் மின்னியது .

"இவ்வளவு சீக்கிரத்தில் அன்னியோன்னியமாகி விட்டோமே! நீங்கள் யார் என்றுகூட எனக்குத் தெரியாது; நான் யார் என்று உங்களுக்குத் தெரியாது. பட்டணத்துச் சந்தை இரைச்சலிலே, இப்படிச் சந்திக்கவேண்டும் என்றால்..."

கடவுள் சிரித்தார். பல், இருட்டில் மோகனமாக மின்னியது "நான் யார் என்பது இருக்கட்டும், நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்களேன்" என்றார் அவர். கந்தசாமி பிள்ளைக்குத் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொள்வதில் எப்பொழுதுமே ஒரு தனி உத்ஸாகம். அதிலும் ஒருவன் ஓடுகிற ரிக்ஷாவில் தம்மிடம் அகப்பட்டுக்கொண்டால் விட்டுவைப்பாரா? கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"சித்த வைத்திய தீபிகை என்ற வைத்தியப் பத்திரிகையைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டார் கந்தசாமிப்பிள்ளை.

"இல்லை" என்றார் கடவுள்.

"அப்பொழுது வைத்திய சாஸ்திரத்தில் பரிச்சயமில்லை என்றுதான் கொள்ள வேண்டும்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"பரிச்சயம் உண்டு" என்றார் கடவுள்.

"இதென்னடா சங்கடமாக இருக்கிறது?" என்று யோசித்தார் கந்தசாமிப்பிள்ளை. "உங்களுக்கு வைத்திய சாஸ்திரத்தில் பரிச்சயமுண்டு; ஆனால் சித்தவைத்திய தீபிகையுடன் பரிச்சயமில்லை என்று கொள்வோம். அப்படியாயின் உங்கள் வைத்திய சாஸ்திர ஞானம் பரிபூர்ணமாகவில்லை. நம்மிடம் பதினேழு வருஷத்து இதழ்களும் பைண்டு வால்யூம்களாக இருக்கின்றன. நீங்கள் அவசியம் வீட்டுக்கு ஒரு முறை வந்து அவற்றைப் படிக்க வேண்டும்; அப்பொழுது தான்...."

"பதினேழு வருஷ இதழ்களா? பதினேழு பன்னிரண்டு இருநூற்று நாலு!" கடவுளின் மனசு நடுநடுங்கியது. ஒரு வேளை கால்வருஷம் ஒருமுறைப் பத்திரிகையாக இருக்கலாம் என்ற ஓர் அற்ப நம்பிக்கை தோன்றியது.

"தீபிகை மாதம் ஒரு முறைப் பத்திரிகை. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் ஒன்று; வெளிநாட்டுக்கு என்றால் இரண்டேமுக்கால் ரூபாய்; ஜீவிய சந்தா ரூபாய் **25.** நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்தால் ரொம்பப் பிரயோசனம் உண்டு; வேண்டுமானால் ஒரு வருஷம் உங்களுக்கு அனுப்புகிறேன். அப்புறம் ஜீவிய சந்தாவைப் பார்க்கலாம்" என்று கடவுளைச் சந்தாதாரராகச் சேர்க்கவும் முயன்றார்.

'பதினேழு வால்யூம்கள் தவிர இன்னும் இருபத்தைந்து ரூபாயை வாங்கிக் கொண்டு ஓட ஓட விரட்டலாம் என்று நினைக்கிறாரா? அதற்கு ஒரு நாளும் இடம் கொடுக்கக்கூடாது' என்று யோசித்து விட்டு, "யாருடைய ஜீவியம்?" என்று கேட்டார் கடவுள்.

"உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல. பத்திரிகை ஆயுளும் அல்ல; அது அழியாத வஸ்து. நான் போனாலும் வேறு ஒருவர் சித்த வைத்திய தீபிகையை நடத்திக் கொண்டுதான் இருப்பார்; அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

இந்தச் சமயம் பார்த்து ரிக்ஷாக்காரன் வண்டி வேகத்தை நிதானமாக்கி விட்டுப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான். வேகம் குறைந்ததால் எங்கே வண்டியில் இருக்கிற ஆசாமி குதித்து ஓடிப்போவாரோ என்று கந்தசாமிப்பிள்ளைக்குப் பயம்.

"என்னடா திரும்பிப் பார்க்கிறே? மோட்டார் வருது, மோதிக்காதே; வேகமாகப் போ" என்றார் கந்தசாமிப்பிள்ளை. "என்ன சாமி, நீங்க என்ன மனுசப்பெறவியா அல்லது பிசாசுங்களா? வண்டியிலே ஆளே இல்லாத மாதிரி காத்தாட்டம் இருக்கு" என்றான் ரிக்ஷாக்காரன்.

"வாடகையும் காத்தாட்டமே தோணும்படி குடுக்கிறோம்; நீ வண்டியை இஸ்துகினுபோ" என்று அதட்டினார் கந்தசாமிப்பிள்ளை.

"தவிரவும், நான் வைத்தியத் தொழிலும் நடத்தி வருகிறேன்; சித்த முறைதான் அனுஷ்டானம். வைத்தியத்திலே வருவது பத்திரிகைக்கும், குடும்பத்துக்கும் கொஞ்சம் குறையப் போதும். இந்த இதழிலே ரசக்கட்டைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன்; பாருங்கோ, நமக்கு ஒரு பழைய சுவடி ஒன்று கிடைத்தது; அதிலே பல அபூர்வப் பிரயோகம் எல்லாம் சொல்லியிருக்கு" என்று ஆரம்பித்தார் கந்தசாமிப்பிள்ளை.

'ஏதேது, மகன் ஒய்கிற வழியாய்க் காணமே' என்று நினைத்தார் கடவுள். "தினம் சராசரி எத்தனை பேரை வேட்டு வைப்பீர்?" என்று கேட்டார்.

"பெருமையாகச் சொல்லிக் கொள்ளும்படி அவ்வளவு ஒன்றுமில்லை. மேலும் உங்களுக்கு, நான் வைத்தியத்தை ஜீவனோபாயமாக வைத்திருக்கிறேன் என்பது ஞாபகம் இருக்க வேண்டும். வியாதியும் கூடுமானவரையில் அகன்றுவிடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்துவிடக்கூடாது; அப்பொழுதுதான், சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாக வைத்து நடத்த முடியும். ஆள் அல்லது வியாதி என்று முரட்டுத்தனமாகச் சிகிச்சை பண்ணினால், தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிப்படியாக குணமாக வேண்டும்; மருந்தும் வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்துவிடக்கூடாது. இதுதான் வியாபார முறை. இல்லாவிட்டால் இந்தப் பதினேழு வருஷங்களாகப் பத்திரிகை நடத்திக்கொண்டிருக்க முடியுமா?" என்று கேட்டார் கந்தசாமிப்பிள்ளை.

கடவுள் விஷயம் புரிந்தவர்போலத் தலையை ஆட்டினார்.

"இப்படி உங்கள் கையைக் காட்டுங்கள், நாடி எப்படி அடிக்கிறது என்று பார்ப்போம்" என்று கடவுளின் வலது

கையைப் பிடித்தார் கந்தசாமிப் பிள்ளை '' ஒடுகிற வண்டியில் இருந்துகொண்டா? " என்று சிரித்தார் கடவுள்.

"அது வைத்தியனுடைய திறமையைப் பொறுத்தது" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

நாடியைச் சில விநாடிகள் கவனமாகப் பார்த்தார். பித்தம் ஏறி அடிக்கிறது; விஷப் பிரயோகமும் பழக்கம் உண்டோ? " என்று கொஞ்சம் விநயத்துடன் கேட்டார் பிள்ளை.

" நீ கெட்டிக்காரன்தான் ; வேறு எத்தனையோ உண்டு " என்று சிரித்தார் கடவுள்.

''ஆமாம், நாம் என்னத்தை யெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறோம்; அதிருக்கட்டும். திருவல்லிக் கேணியில் எங்கே?" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"ஏழாம் நம்பர் வீடு, ஆபீஸ் வேங்கடாசல முதலி சந்து" என்றார் கடவுள்.

" அடெடெ! அது நம்ம விலாசமாச்சே; அங்கே யாரைப் பார்க்க வேண்டும்? "

" கந்தசாமிப் பிள்ளையை "

''சரியாப் போச்சு,போங்க; நான்தான் அது. தெய்வந்தான் நம்மை அப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது. தாங்கள் யாரோ? இனம் தெரியவில்லையே?" என்றார் கந்தசாமிப்பிள்ளை

''நானா? கடவுள்! '' என்றார் சாவகாசமாக, மெதுவாக, அவர் வானத்தைப் பார்த்துக்கொண்டு தாடியை நெருடினார்.

கந்தசாமிப்பிள்ளை திடுக்கிட்டார். கடவுளாவது வருவதாவது!

"பூலோகத்தைப் பார்க்க வந்தேன்; நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி ."

கந்தசாமிப்பிள்ளை பதற்றத்துடன் பேசினார். ''எத்தனை நாள் வேண்டுமானாலும் இரும்; அதற்கு ஆட்சேபம் இல்லை . நீர்மட்டும் உம்மைக் கடவுள் என்று தயவு செய்து வெளியில் சொல்லிக்கொள்ள வேண்டாம். உம்மைப் பைத்தியக்காரன் என்று நினைத்தாலும் பரவாயில்லை. என்னை என் வீட்டுக்காரி அப்படி நினைத்து விடக்கூடாது " என்றார்.

"அந்த விளக்குப் பக்கத்தில் நிறுத்துடா" என்றார் கந்தசாமிப்பிள்ளை.



வண்டி நின்றது. இருவரும் இறங்கினார்கள். கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டை ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமி" என்று உள்ளம் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்கரன். கடவுளை ஆசிர்வாதம் பண்ணுவதாவது!

''என்னடா, பெரியவரைப் பார்த்து நீ என்னடா ஆசிர்வாதம் பண்ணுவது '' என்று அதட்டினார் கந்தசாமிப்பிள்ளை.

"அப்படிச் சொல்லடா அப்பா; இத்தனை நாளா காது குளிர மனசுகுளிர இந்த மாதிரி ஒரு வார்த்தை கேட்டதில்லை. அவன் சொன்னால் என்ன?" என்றார் கடவுள்.

''அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் கொடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

" எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன் அநியாயத்துக்குக் கட்டுப்பட்டவனில்லை சாமி! நான் எப்பவும் அன்னா அந்த லெக்கிலெதான் குந்திக்கிட்டு இருப்பேன்; வந்தா கண் பார்க்கணும் " என்று ஏர்க்காலை உயர்த்தினான் ரிக்ஷாக்காரன்.

" மகா நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்கிக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நாள் முச்சூடும் வெயிலிலே ஒடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல? கடவுளுக்குக் கண்ணில்லெ; உன்னியே சொல்ல வச்சான். என்னியே கேக்க வச்சான்" என்று சொல்லிக்கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்!

கடவுள் வாய்விட்டு உரக்கச் சிரித்தார். விழுந்து விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி, குளிர்ச்சி.

"இதுதான் பூலோகம்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"இவ்வளவுதானா? என்றார் கடவுள். இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள். வீட்டுக்கு எதிரில் உள்ள லாந்தர் கம்பத்தின் பக்கத்தில் வந்ததும் கடவுள் நின்றார்.

கந்தசாமிப்பிள்ளையும் காத்து நின்றார்.

" பக்தா " என்றார் கடவுள்.

எதிரில் கிழவனார் நிற்கவில்லை.

புலித் தோலாடையும், சடா முடியும் மானும், மழுவும், பிறையுமாகக் கடவுள் காட்சியளித்தார். கண்ணிலே மகிழ்ச்சி வெறி துள்ளியது . உதட்டிலே புன்சிரிப்பு.

" பக்தா " என்றார் மறுபடியும்.

கந்தசாமிப்பிள்ளைக்கு விஷயம் புரிந்துவிட்டது.

''ஒய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் எங்கிட்டச் செல்லாது. நீர் வரத்தைக் கொடுத்துவிட்டு உம்பாட்டுக்குப் போவீர். இன்னொரு தெய்வம் வரும் . தலையைக் கொடு என்று கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக்கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர்; நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப்பட்டீர். அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழக வேண்டுமானால் மனுஷனைப்போல என்னைப்போல நடந்து கொள்ள வேண்டும்; மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். நான் முந்திச் சொன்னதை மறக்காமல் வீட்டுக்கு ஒழுங்காக வாரும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

கடவுள் மௌனமாகப் பின் தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்தில் வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது என்றுதான் அவருக்குப்பட்டது.

கந்தசாமிப்பிள்ளை வாசலருகில் சற்று நின்றார்.

"சாமி, உங்களுக்குப் பரமசிவம் என்று பேர் கொடுக்கவா? அம்மையப்பப் பிள்ளை என்று கூப்பிடவா?" என்றார்.

''பரமசிவம்தான் சரி; பழைய பரமசிவம்.''

''அப்போ, உங்களை அப்பா என்று உறவுமுறை வைத்துக் கூப்பிடுவேன்; உடன்படவேணும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"அப்பா என்று வேண்டாமப்பா; பெரியப்பா என்று கூப்பிடும். அப்போது தான் என் சொத்துக்கு ஆபத்தில்லை'' என்று சிரித்தார் கடவுள். பூலோக வளமுறைப்படி நடப்பது என்று தீர்மானித்தபடி சற்று ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டும் என்று பட்டது கடவுளுக்கு.

"அப்படி உங்கள் சொத்து என்னவோ?" என்றார் கந்தசாமிப்பிள்ளை. ''பயப்பட வேண்டாம்; அவ்வளவு பேராசை நமக்கு இல்லை'' என்று கூறிக்கொண்டே நடைப்படியில் காலை வைத்தார் கந்தசாமிப்பிள்ளை.

வீட்டு முன் கூடத்தில் ஒரு தகர விளக்கு அவ்விடத்தைக் கோவிலின் கர்ப்பக் கிருகமாக்கியது. அதற்கு அந்தப் புறத்தில் நீண்டு இருண்டு கிடக்கும் பட்டகசாலை. அதற்கப்புறம் என்னவோ? ஒரு குழந்தை,



அதற்கு நாலு வயது இருக்கும். மனசிலே இன்பம் பாய்ச்சும் அழகு. கண்ணிலே எப்பொழுது பார்த்தாலும் காரணமற்ற சந்தோஷம். பழைய காலத்து ஆசாரப்படி உச்சியில் குறுக்காக வகிடு எடுத்து முன்னும் பின்னுமாகப் பின்னிய எலிவால் சடை வாலை வளைத்துக் கொண்டு நின்றது. முன்புறம் சடையைக் கட்டிய வாழைநார். கடமையில் வழுவித் தொங்கி, குழந்தை குனியும்போதெல்லாம் அதன் கண்ணில் விழுந்து தொந்தரவு கொடுத்தது. குழந்தையின் கையில் ஒரு கரித்துண்டும் ஓர் ஓட்டுத்துண்டும் இருந்தன. இடையில் முழங்காலைக் காட்டிக் கொண்டு இருக்கும் கிழிசல் சிற்றாடை குனிந்து தரையில் கோடு போடமுயன்று, வாழைநார் கண்ணில் விழுந்ததனால் நிமிர்ந்து நின்றுகொண்டு, இரண்டு கைகளாலும் வாழை நாரைப் பிடித்துப் பலம் கொண்டமட்டும் இழுத்தது. அதன் முயற்சி பலிக்கவில்லை. வலித்தது. அழுவோமா அல்லது இன்னும் ஒரு தடவை இழுத்துப் பார்ப்போமா என்று அது தர்க்கித்துக் கொண்டு இருக்கும்போது அப்பா உள்ளே நுழைந்தார்.

''அப்பா'' என்ற கூச்சலுடன் கந்தசாமிப் பிள்ளையின் காலைக் கட்டிக் கொண்டது. அண்ணாந்து பார்த்து, ''எனக்கு என்ன கொண்டாந்தே'' என்ற கேட்டது.

''என்னைத்தான் கொண்டாந்தேன்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''என்னப்பா, தினந்தினம் உன்னியேதானே கொண்டாரே; பொரிகடலையாவது கொண்டாரப்படாது ?'' என்று சிணுங்கியது குழந்தை.

''பொரிகடலை உடம்புக்காகாது; இதோபார் உனக்கு ஒரு தாத்தாவைக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''இதுதான் உம்முடைய குழந்தையோ ?'' என்று கேட்டார் கடவுள். குழந்தையின்பேரில் விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு. கந்தசாமிப் பிள்ளை சற்றுத் தயங்கினார்.

''சும்மா சொல்லும்; இப்பொவெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல்தான் பிடிக்கும்'' என்ற சிரித்தார் கடவுள்.

''ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''இப்படி உட்காருங்கள்; இப்பொ குழாயிலே தண்ணீர் வராது; குடத்திலே எடுத்துக்கொண்டு வருகிறேன்'' என்று உள்ளே இருட்டில் மறைந்தார் கந்தசாமிப்பிள்ளை.



கடவுள் துண்டை உதறிப் போட்டுவிட்டுக் கூடத்தில் உட்கார்ந்தார்.

மனசிலே ஒரு துறுதுறுப்பும் எல்லையற்ற நிம்மதியும் இருந்தன.

''வாடியம்மா கருவேப்பில்லைக் கொழுந்தே'' என்று கைகளை நீட்டினார் கடவுள். ஒரே குதியில் அவருடைய மடியில் வந்து ஏறிக்கொண்டது குழந்தை.

''எம்பேரு கருகப்பிலைக் கொளுந்தில்லெ; வள்ளி, அப்பா மாத்திரம் என்னெக் கறுப்பி கறுப்பின்னு கூப்பிடுதா; நான் என்ன அப்பிடியா ?'' என்று கேட்டது.

அது பதிலை எதிர்பார்க்கவில்லை. அதன் கண்களுக்குத் தாத்தாவின் கண்டத்தில் இருந்த கறுப்பு மறுத் தென்பட்டது.

''அதென்ன தாத்தா, கன்னங் கறேலுன்னு நவ்வாப்பழம் மாதிரி களுத்திலே இருக்கு ? அதைக் கடிச்சுத் திங்கணும் போல இருக்கு'' என்று கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசிக்கொண்டு மடியில் எழுந்து நின்று, கழுத்தில் பூப்போன்ற உதடுகளை வைத்து அழுத்தியது. இளம்பல் கழுத்தில் கிளுகிளுத்தது. கடவுள் உடலே குளுகுளுத்தது. ''கூச்சமா இருக்கு'' என்று உடலை நெளித்தார் கடவுள்.

''ஏன் தாத்தா களுத்திலே நெருப்பு கிருப்புப் பட்டு பொத்துப்போச்சா ? எனக்கும் இந்த பாரு'' என்று தன் விரல் நுனியில் கன்றிக் கறுத்துப்போன கொப்புளத்தைக் காட்டியது.

''பாப்பா, அது நாகப்பளந் தாண்டியம்மா; முந்தி ஒரு தரம் எல்லாரும் கொடுத்தாளேன்னு வாங்கி வாயிலே போட்டுக் கொண்டேன். எனக்குப் பங்கில்லையான்னு களுத்தெப் புடிச்சுப்புட்டாங்க. அதிலே இருந்து அது அங்கியே சிக்கிக்கிச்சு. அது கெடக்கட்டும். உனக்கு விளையாடத் தோழிப் பிள்ளைகள் இல்லியா ?'' என்று கேட்டார் கடவுள்.

''வட்டும் கரித்துண்டும் இருக்கே; நீ வட்டாட வருதியா ?'' என்று கூப்பிட்டது. குழந்தையும் கடவுளும் வட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஒற்றைக் காலை மடக்கிக் கொண்டே நொண்டியடித்து ஒரு தாவுத் தாவினார் கடவுள். ''தாத்தா, தோத்துப் போனியே'' என்று கைகொட்டி சிரித்தது குழந்தை. ''ஏன் ?'' என்று கேட்டார் கடவுள்.

கால் கரிக்கோட்டில் பட்டு விட்டதாம்.

''மூந்தியே சொல்லப்படாதா ?'' என்றார் கடவுள்.

''ஆட்டம் தெரியாமெ ஆடவரலாமா ?'' என்று கையை மடக்கிக் கொண்டு கேட்டது குழந்தை. அந்தச் சமயத்தில் ஸ்ரீ கந்தசாமிப்பிள்ளை முன்னே வர ஸ்ரீமதி பின்னே குடமும் இடுப்புமாக இருட்டிலிருந்து வெளிப்பட்டார்கள்.

''இவங்கதான் கைலாசவரத்துப் பெரியப்பா; கரிசல் கொளத்துப் பொண்ணை இவுங்களுக்கு ஒண்ணுவிட்ட அண்ணாச்சி மகனுக்குத்தான் கொடுத்திருக்கு, தெரியாதா ?'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''என்னமோ தேசாந்திரியாகப் போயிட்டதாகச் சொல்லுவாகளே அந்த மாமாவா ? வாருங்க மாமா, சேவிக்கிறேன்'' என்று குடத்தை இறக்கி வைத்துவிட்டு விழுந்து நமஸ்கரித்தாள். காது நிறைந்த பழங்காலப் பம்படம் கன்னத்தில் இடிபட்டது.

''பத்தும் பெருக்கமாகச் சுகமாக வாழவேணும்'' என்று ஆசீர்வதித்தார் கடவுள். காந்திமதி அம்மையாருக்கு (அதுதான் கந்தசாமிப்பிள்ளையின் மனைவியின் பெயர்) என்றும் அனுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டது. மனமும் குளிர்ந்தது; கண்ணும் நனைந்தது. ''வாசலில் இருக்கற அரிசி மூட்டையை அப்படியே போட்டு வச்சிருந்தா ?'' என்று ஞாபகமூட்டினார் கடவுள்.

''இவுகளுக்கு மறதிதான் சொல்லி முடியாது. அரிசி வாங்கியாச்சான்னு இப்பந்தான் கேட்டேன். இல்லைன்னு சொன்னாக. ஊருக்கெல்லாம மருந்து கொடுக்காக; இவர் மறதிக்குத்தான் மருந்தைக் காங்கெல. படெச்ச கடவுள்தான் பக்கத்திலே நின்னுதான் பார்க்கணும்'' என்றாள் காந்திமதி அம்மாள்.

''பாத்துக் கிட்டுத்தான் நிக்காறே'' என்றார் கடவுள் கிராமியமாக.

''பார்த்துச் சிரிக்கணும்; அப்பந்தான் புத்திவரும்'' என்றாள் அம்மையார்.

கடவுள் சிரித்தார்.

கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் வாசலுக்குப் போனார்கள்.

''இந்தச் செப்பிடுவித்தை எல்லாம் கூடாது என்று சொன்னேனே'' என்றார் பிள்ளை காதோடு காதாக.

''இனிமேல் இல்லை'' என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை முக்கி முனகிப் பார்த்தார், மூட்டை அசையவே இல்லை. ''நல்ல இளவட்டம்'' என்று சிரித்துக் கொண்டே மூட்டையை இடுப்பில் இடுக்கிக் கொண்டார் கடவுள்.

''நீங்க எடுக்கதாவது; உங்களைத்தானே, ஒரு பக்கமாத் தாங்கிப் பிடிங்க; சும்மா பாத்துக்கிட்டே நிக்கியளே'' என்று பதைபதைத்தாள் காந்தியம்மாள்.

''நீ சும்மா இரம்மா; எங்கே போடணும்னு சொல்லுதே ?'' என்றார் கடவுள்.

''இந்தக் கூடத்திலேயே கெடக்கட்டும்; நீங்க இங்கே சும்மா வச்சிருங்க'' என்று வழிமறித்தாள் காந்திமதியம்மாள்.

கந்தசாமிப் பிள்ளையும் கடவுளும் சாப்பிட்டுவிட்டு வாசல் திண்ணைக்கு வரும்பொழுது இரவு மணி பதினொன்று.

''இனிமேல் என்ன யோசனை ?'' என்றார் கடவுள்.

''தூக்கந்தான்'' என்றார் பிள்ளை, கொட்டாவி விட்டுக் கொண்டே. ''தாத்தா, நானும் ஒங்கூடத்தான் படுத்துக்குவேன்'' என்று ஓடிவந்தது குழந்தை.

''நீ அம்மையெக் கூப்பிட்டுப் பாயும் தலையணையும் எடுத்துப் போடச் சொல்லு'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''என்னையுமா தூங்கச் சொல்லுகிறீர் ?'' என்று கேட்டார் கடவுள்.

''மனுஷாள்கூடப் பழகினால் அவர்களைப் போலத்தான். நடந்தாகணும்; தூங்க இஷ்டமில்லை என்றால், பேசாமல் படுத்துக் கொண்டிருங்கள். ராத்திரியில் நடமாடினால் அபவாதத்துக்கு இடமாகும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

கந்தசாமிப்பிள்ளை பவழக்காரத் தெரு சித்தாந்த தீபிகை ஆபீசில் தரையில் உட்கார்ந்து கொண்டு பதவுரை எழுதிக் கொண்டு இருக்கிறார். போகீர் நூலுக்கு விளக்கவுரை பிள்ளையவர்கள் பத்திரிகையில் மாதாமாதம் தொடர்ச்சியாகப் பிரசுரமாகி வருகிறது.

''ஆச்சப்பா இன்னமொன்று சொல்லக் கேளு அப்பனே வயமான செங்கரும்பு, காச்சியவெந்நீருடனே கருடப்பிச்சு, கல்லுருவி புல்லுருவி நல்லூமத்தை (கருடப்பச்சை என்றும் பாடம்)...'' என்று எழுதிவிட்டு வாசல் வழியாகப் போகும் தபாற்காரன் உள்ளே நுழையாமல் நேராகப் போவதைப் பார்த்துவிட்டு ''இன்றைக்கும் பத்திரிகை போகாது'' என்று முனகியபடி எழுதியதைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு விரல்களைச் சொடுக்கு முறித்துக் கொண்டார்.

வாசலில் ரிக்ஷா வந்து நின்றது. கடவுளும் குழந்தையும் இறங்கினார்கள். வள்ளியின் இடுப்பில் பட்டுச் சிற்றாடை; கை நிறைய மிட்டாய்ப் பொட்டலம்.

''தாத்தாவும் நானும் செத்த காலேஜ் உயிர் காலேஜெல்லாம் பார்த்தோம்'' என்று துள்ளியது குழந்தை.

''எதற்காக ஓய், ஒரு கட்டடத்தைக் கட்டி, எலும்பையும் தோலையும் பொதிந்து பொதிந்து வைத்திருக்கிறது ? என்னைக் கேலி செய்ய வேண்டும் என்ற நினைப்போ ?" என்று கேட்டார் கடவுள். குரலில் கடுகடுப்புத் தொனித்தது.

''அவ்வளவு ஞானத்தோடே இங்கே யாரும் செய்து விடுவார்களா ? சிருஷ்டியின் அபூர்வத்தைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டுதான் அதை எல்லாம் அப்படி வைத்திருக்கிறார்கள். அது கிடக்கட்டும்; நீங்கள் இப்படி ஓர் இருபத்தைந்து ரூபாய் கொடுங்கள்; உங்களை ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்து விடுகிறேன்; இன்று பத்திரிகை போய் ஆகவேணும்'' என்று கையை நீட்டினார் பிள்ளை.

"இது யாரை ஏமாற்ற ? யார் நன்மைக்கு ?" என்று சிரித்தார் கடவுள். ''தானம் வாங்கவும் பிரியமில்லை; கடன் வாங்கும் யோசனையும் இல்லை. அதனால்தான் வியாபாரார்த்தமாக இருக்கட்டும் என்கிறேன். நன்மையைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிவிட்டீர்களே ! இந்தப் பூலோகத்திலே நெய் முதல் நல்லெண்ண வரையில் எல்லாம் கலப்படம்தான். இது உங்களுக்குத் தெரியாதா ?'' என்று ஒரு போடுபோட்டார் கந்தசாமிப்பிள்ளை.

கடவுள் யோசனையில் ஆழ்ந்தார்.

''அதிருக்கட்டும், போகரிலே சொல்லியிருக்கிறதே, கருடப்பச்சை; அப்படி ஒரு மூலிகை உண்டா ? அல்லது கருடப்பிச்சுதானா ?'' என்று கேட்டார் கந்தசாமிப்பிள்ளை.

''பிறப்பித்த பொறுப்புதான் எனக்கு; பெயரிட்ட பழியையும் என்மேல் போடுகிறீரே, இது நியாயமா ? நான் என்னத்தைக் கண்டேன் ? உம்மை உண்டாக்கினேன். உமக்குக் கந்தசாமிப்பிள்ளை என்று உங்க அப்பா பெயரிட்டார்; அதற்கும் நான்தான் பழியா ?'' என்று வாயை மடக்கினார் கடவுள்.

"நீங்கள் இரண்டுபேரும் வெயிலில் அலைந்துவிட்டு வந்தது கோபத்தை எழுப்புகிறது போலிருக்கிறது. அதற்காக என்னை மிரட்டி மடக்கி விட்டதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அவசரத்தில் திடுதிடுப்பென்று சாபம் கொடுத்தீரானால் இருபத்தைந்து ரூபாய் வீணாக நஷ்டமாய்ப் போகுமே என்பதுதான் என் கவலை" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

பொட்டலத்தை அவிழ்த்துத் தின்றுகொண்டிருந்த குழந்தை, ''ஏன் தாத்தா அப்பாகிட்டப் பேசுதே ? அவுங்களுக்கு ஒண்ணுமே தெரியாது; இதைத் தின்னு பாரு, இனிச்சுக் கெடக்கு'' என்று கடவுளை அழைத்தது.



குழந்தை கொடுக்கும் லட்டுத் துண்டுகளைச் சாப்பிட்டுக் கொண்டே, ''பாப்பா உதுந்தது எனக்கு'' என்றார் கடவுள்.

குழந்தை ஒரு லட்டை எடுத்துச் சற்று நேரம் கையில் வைத்துக் கொண்டே யோசித்தது. ''தாத்தா, முழுசு வாய்க்குள்ளே கொள்ளாதே. உதுத்தா உனக்குன்னு சொல்லுதியே. அப்போ எனக்கு இல்லையா ?'' என்று கேட்டது குழந்தை.

கடவுள் விழுந்து விழுந்து சிரித்தார். ''அவ்வளவும் உனக்கே உனக்குத்தான்'' என்றார்.

''அவ்வளவுமா! எனக்கா ?'' என்று கேட்டது குழந்தை.

''ஆமாம். உனக்கே உனக்கு'' என்றார் கடவுள்.

''அப்புறம் பசிக்காதே! சாப்பிடாட்டா அம்மா அடிப்பாங்களே! அப்பா லேவியம் குடுப்பாங்களே'' என்று கவலைப்பட்டது குழந்தை. ''பசிக்கும் பயப்படாதே'' என்றார் கடவுள்.

''தாங்கள் வாங்கிக் கொடுத்திருந்தாலும், அது ஹோட்டல் பட்சணம். ஞாபகம் இருக்கட்டும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''நான் இருக்கிறேனே'' என்றார் கடவுள்.

''நீங்கள் இல்லையென்று நான் எப்பொழுது சொன்னேன் ?'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

சில விநாடிகள் பொறுத்து, ''இன்றைக்குச் செலவு போக அந்த நூறு ரூபாயில் எவ்வளவு மிச்சம் ?'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

''உமக்கு ரூபாய் இருபத்தைந்து போகக் கையில் ஐம்பது இருக்கிறது'' என்று சிரித்தார் கடவுள்.

''அதற்குப் பிறகு என்ன யோசனை ?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை,''

''என்னைப்போல வைத்தியம் செய்யலாமே!''

''உம்முடன் போட்டி போட நமக்கு இஷ்டம் இல்லை.''

''அப்படி நினைத்துக் கொள்ள வேண்டாம். என்னோட போட்டி, போடல்லே; லோகத்து முட்டாள் தனத்தோடே போட்டி போடுகிறீர்கள்; பிரியமில்லை என்றால் சித்தாந்த உபந்நியாசங்கள் செய்யலாமே ?''

''நீர் எனக்குப் பிழைக்கிறதற்கா வழி சொல்லுகிறீர்; அதில் துட்டு வருமா ?'' என்று சிரித்தார் கடவுள்.

''அப்போ ?''

''எனக்குத்தான் கூத்து ஆட நன்றாக வருமே; என்ன சொல்லுகிறீர் ? தேவியை வேண்டுமானாலும் தருவிக்கிறேன்.''

கந்தசாமிப்பிள்ளை சிறிது யோசித்தார், ''எனக்கு என்னவோ பிரியமில்லை'' என்றார். ''பிறகு பிழைக்கிற வழி என்னங்காணும், பிரபஞ்சமே எங்கள் ஆட்டத்தை வைத்துத்தானே பிழைக்கிறது ?''

''உங்கள் இஷ்டம்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

கந்தசாமிப்பிள்ளை சிறிது நேரம் மறுபடியும் சிரித்தார். ''வாருங்கள் போவோம்'' என்று ஆணியில் கிடந்த மேல் வேஷ்டியை எடுத்து உதறிப் போட்டுக்கொண்டார்.

''குழந்தை'' என்றார் கடவுள்.

''அதுதான் உறங்குகிறதே; வருகிற வரையிலும் உறங்கட்டும்'' என்றார் பிள்ளை.

கால்மணிப் போது கழித்து மூன்று பேர் திவான்பகதூர் பிருகதீசுவர சாஸ்திரிகள் பங்களாவிற்குள் நுழைந்தனர். ஒருவர் கந்தசாமிப்பிள்ளை; மற்றவர் கடவுள்; மூன்றாவது பெண்; தேவி.

''நான் இவருக்குத் தங்கபஸ்பம் செய்து கொடுத்து வருகிறேன். நான் சொன்னால் கேட்பார்'' என்று விளக்கிக் கொண்டே முன் வராந்தாப் படிக்கட்டுகளில் ஏறினார் பிள்ளை; இருவரும் பின்தொடர்ந்தனர், தேவியின் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது. ''சாமி இருக்காங்களா; நான் வந்திருக்கேன் என்று சொல்லு'' என்று அதிகாரத்தோடு வேலைக்காரனிடம் சொன்னார் கந்தசாமிப்பிள்ளை.

''பிள்ளையவர்களாக! வரவேணும், வரவேணும்; பஸ்பம் நேத்தோடே தீர்ந்துபோச்சே, உங்களைக் காணவில்லையே என்று கவலைப்பட்டேன்'' என்ற கலகலத்த பேச்சுடன் வெம்பிய சரீரமும் மல் வேஷ்டியும் தங்க விளிம்புக் கண்ணாடியுமாக ஒரு திவான் பகதூர் ஓடிவந்து எல்லோரையும் கும்பிட்டுக் கொண்டே அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது.

''உட்காருங்கள், உட்காருங்கள்'' என்றார் திவான் பகதூர்.

கந்தசாமிப்பிள்ளை அவரது நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டே ''பரவாயில்லை; சாயங்காலம் பஸ்பத்தை அனுப்பி வைக்கிறேன். நான் வந்தது இவாளை உங்களுக்குப் பரிச்சயம் பண்ணிவைக்க. இவாள் ரெண்டு பேரும் நாட்டிய சாஸ்திர சாகரம்; உங்கள் நிருத்திய கலா மண்டலியில் வசதி பண்ணினா சௌகரியமாக இருக்கும்'' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

திவான்பகதூரின் உற்சாகம் எல்லாம் ஆமையின் காலும் தலையும்போல் உள்வாங்கின. கைகளைக் குவித்து ஆள்காட்டி விரல்களையும் கட்டை விரல்களையும் முறையே மூக்கிலும் மோவாக் கட்டையிலுமாக வைத்துக்கொண்டு ''உம்'' ''உம்'' என்ற தலையை அசைத்துக் கொண்டிருந்தார்.

''இவர் பெயர் கூத்தனார்; இந்த அம்மாளின் பெயர் பார்வதி. இருவரும் தம்பதிகள்'' என்று உறவைச் சற்று விளக்கி வைத்தார் கந்தசாமிப்பிள்ளை.

''நான் கேள்விப்பட்டதே இல்லை; இதற்குமுன் நீங்கள் எங்கேயாவது ஆடி இருக்கிறீர்களா ?'' என்று தேவியைப் பார்த்துக்கொண்டு கூத்தனாரிடம் திவான் பகதூர் கேட்டார்.

கடவுளுக்கு வாய்திறக்கச் சந்தர்ப்பம் கொடுக்காமல் ''நாங்கள் ஆடாத இடம் இல்லை'' என்றாள் தேவி.

''என்னவோ என் கண்ணில் படவில்லை. இருக்கட்டும்; அம்மா ரொம்பக் கறுப்பா இருக்காங்களே, சதஸிலே சோபிக்காதே என்றுதான் யோசிக்கிறேன்'' என்றார் வர்ணபேத திவான் பகதூர்.

''பெண் பார்க்க வந்தீரா ? அல்லது நாட்டியம் பார்க்கிறதாக யோசனையோ ?'' என்று கேட்டாள் தேவி.

''அம்மா கோவிச்சுக்கப்படாது. ஒன்று சொல்லுகிறேன் கேளுங்க. கலைக்கும் கறுப்புக்கும் காணாவுக்கு மேலே சம்பந்தமே கிடையாது. நானும் முப்பது வருஷமா இந்தக் கலாமண்டலியிலே பிரெஸிடெண்டாக இருந்து வருகிறேன். சபைக்கு வந்தவர்கள் எல்லாருக்கும் கண்கள்தான் கறுத்திருக்கும்.''

''உம்ம மண்டலியுமாச்சு, சுண்டெலியுமாச்சு'' என்று சொல்லிக்கொண்டே தேவி எழுந்திருந்தாள்.

''இப்படிக் கோவிச்சுக்கப்படாது'' என்று ஏககாலத்தில் திவான்பகதூரும் கந்தசாமிப் பிள்ளையும் எழுந்திருந்தார்கள். ''இவர்கள் புதுப் புதுப் பாணியிலே நாட்டியமாடுவார்கள். அந்தமாதிரி இந்தப் பக்கத்திலேயே பார்த்திருக்க முடியாது. சாஸ்திரம் இவர்களிடம் பிச்சை வாங்கவேணும் ஒரு முறைதான் சற்றுப் பாருங்களேன்'' என்று மீண்டும் சிபாரிசு செய்தார் கந்தசாமிப்பிள்ளை.

"சரி பார்க்கிறது; பார்க்கிறதுக்கு என்ன ஆட்சேபம்?" என்று சொல்லிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். "சரி நடக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு இமைகளை மூடினார்.

"எங்கே இடம் விசாலமாக இருக்கும்?" என்று தேவி எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"அந்த ஹாலுக்குள்ளேயே போலாமே" என்றார் கடவுள்.

"சரி" என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டார்கள். சில விநாடிகளுக்கெல்லாம் உள்ளிருந்து கணீரென்று கம்பீரமான குரலில் இசை எழுந்தது.

"மயான ருத்திரனாம் – இவன் மயான ருத்திரனாம்!".....

கதவுகள் திறந்தன.

கடவுள் புலித்தோலுடையும், திரிசூலமும், பாம்பும், கங்கையும், சடையும், பின்னிப் புரள, கண்மூடிச் சிலையாக நின்றிருந்தார்.

மறுபடியும் இசை பின்னலைச் சிக்கலெடுத்து உதறியதுபோல ஒரு வெட்டு வெட்டித் திரும்புகையில் கடவுள் கையில் சூலம் மின்னிக் குதித்தது; கண்களில் வெறியும் உதட்டில் சிரிப்பும் புரண்டோட காலைத் தூக்கினார்.

கந்தசாமிப்பிள்ளைக்கு நெஞ்சில் உதைப்பு எடுத்துக் கொண்டது. கடவுள் கொடுத்த வாக்கை மறந்துவிட்டாரே என்று நினைத்துப் பதறி எழுந்தார்.

"ஓய் கூத்தனாரே, உன் கூத்தைக் கொஞ்சம் நிறுத்தும்."

"சட்! வெறும் தெருக்கூத்தாக இருக்க; என்னங்காணும், போர்னியோ காட்டுமிராண்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு" என்று அதட்டினார் திவான்பகதூர்.

ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்திச் சூலத்தில் சாய்ந்தபடி பார்த்துக்கொண்டே நின்றார் கடவுள். "ஓய்! கலைன்னா என்னன்னு தெரியுமாங்காணும்?" புலித்தோலைத்தான் கட்டிக்கொண்டீரே. பாம்புன்னா பாம்மையா பிடிச்சுக் கொண்டு வருவா? பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக்கொள்ள வேணும்; புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக் கொள்ள வேணும். கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங்காணும்! வாஸ்தவமாகப் பார்வதி பரமேஸ்வராளே இப்படி ஆடினாலும் இது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதிலே இப்படிச் சொல்லலே. முதல்லே அந்தப் பாம்புகளையெல்லாம் பத்திரமாகப் பிடிச்சுக் கூடையிலே போட்டுவச்சுப்புட்டு வேஷத்தைக் கலையும். இது சிறுசுகள் நடமாடற எடம் ஜாக்கிரதை!" என்றார் திவான்பகதூர்.

ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளையையும் அவர் லேசில் விட்டுவிடவில்லை. "கந்தசாமிப்பிளைவாள், நீர் ஏதோ மருந்து கொடுத்துக்கொண்டு இருக்கிறீர் என்பதற்காக இந்தக் கூத்துப் பார்க்க முடியாது; கச்சேரியும் வைக்கமுடியாது; அப்புறம் நாலு பேரோட தெருவிலே நான் நடமாட வாண்டாம்?"

கால்மணி நேரங் கழித்துச் சித்த வைத்திய தீபிகை ஆபீசில் இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், தேவியைத் தவிர குழந்தை பாயில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. இரண்டு பேரும் மௌனமாக இருந்தார்கள். "தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாது போல இருக்கே" என்றார் கடவுள்.

"நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை; உங்களுக்குப் பிடித்தது லோகத்துக்குப் பிடிக்கவில்லை; வேணும் என்றால் தேவாரப் பாடசாலை நடத்திப் பார்க்கிறதுதானே!"

கடவுள் "ச்சு" என்று நாக்கைச் சூள் கொட்டினார்.

"அதுக்குள்ளையே பூலோகம் புளிச்சுப் போச்சோ?"

"உம்மைப் பார்த்தால் உலகத்தைப் பார்த்ததுபோல்" என்றார் கடவுள்.

"உங்களைப் பார்த்தாலோ?" என்று சிரித்தார் கந்தசாமிப்பிள்ளை.

"உங்களிடம் எல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது" என்றார் கடவுள்.

"உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாயக்கு" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

அவருக்குப் பதில் சொல்ல அங்கே யாரும் இல்லை. மேஜையின்மேல் ஜீவிய சந்தா ரூபாய் இருபத்தைந்து நோட்டாகக் கிடந்தது.

"கைலாசபுரம் பழைய பரமசிவம்பிள்ளை ஜீவிய சந்தா வரவு ரூபாய் இருபத்தைந்து" என்று கணக்கில் பதிந்தார் கந்தசாமிப்பிள்ளை.


"தாத்தா ஊருக்குப் போயாச்சா, அப்பா?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தது குழந்தை. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். நடராஜன், இ.ஆ.ப, இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை – 600 002.
தொலைபேசி : 5368926/5364906 தொலையச்சு : 5[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223776
சென்னை-600 008
நூலகம்

கோ-ஆப்டெக்ஸின்
# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்[illegible]ளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

